

# நெடுந்தீவு "இராசி" காலாமாகி விட்டது



**ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கூட்டுறவாளர், விசேட ஆணையாளர், அகில இலங்கைச் சமாதான நீதவான் என்ற பல்துறை ஆளுமையாளன், நெடுந்தீவு மாணவர்களின் பிதாமகன்**

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

இறைபதம் எய்திய

# நினைவு மலர்

**15.04.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும்

நெடுந்தீவு மேற்கை வாழ்விடமாகவும் கொண்ட

**ஆசிரியர் / அதிபர் / கோட்டக்கல்வி அதிகாரி**

**பிரதிக்கல்விப்பணிப்பாளர் / வலயக்கல்விப்பணிப்பாளர்**

**விசேட ஆணையாளர் / கூட்டுறவாளர் /**

**அகில இலங்கைச் சமாதான நீதவான்**

என்ற பல்துறை ஆளுமை படைத்த

**அமரர் இராமநாதர் சின்னத்தம்பி (இராசி) அவர்கள்**

முத்திப் பேறெய்திய

# நினைவு மலர்

**15.04.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



பண்புடைப் பெரியோனாய்

பார்போற்ற வாழ்ந்து

அன்பு, கருணை, அகிம்சை

அவை அணிகலனாய்க் கொண்டு

நெஞ்சாரப் பொய்யாத நிலையுடனே

அஞ்சாத மனத்தினனாய் – எம்

தீவு முழுதும் சிறப்புடனே சேவை செய்து

கல்வி, கூட்டுறவு, நிர்வாகம் அத்தோடு

ஆன்மீகபணியும் பலவாற்றி

இவர்போல யார் என்று ஊர் சொல்ல வாழ்ந்து

எங்கள் இதயமெல்லாம் நீங்காத் துயர்தந்து

இறைவன் பாதம் பணிந்த எம் குல விளக்கின்

பாதார விம்பத்தில் பணிவுடனே இந்நூல்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த மாமனிதன்

ஞாலத்தில்
26
02
1934



காலத்தில்
16
03
2013

## மங்காத புகழ் பூத்த
# அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

திதி வெண்பா

நந்தன வாண்டு பங்குனித்திங்கள் மூன்றாம் நாள்
சித்தயோக பஞ்சமித் திதியதனில் – எங்கள்
மண்ணின் மாமனிதன் சின்னத்தம்பி
நண்ணினான் தும்பிமுகத்தான் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இழமையில் "இராசி" அவர்கள்
சென்னை கிறிஸ்தவ கல்லூரியில்
இருந்த போது



சென்னை கிறிஸ்தவ கல்லூரியில்
இருந்து
பட்டம் பெற்ற போது



திருமண பந்தத்தில் இணைந்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
"இராசி" அவர்களைக் கௌரவிக்கும் காட்சி



நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக
நிகழ்வில் சுவாமி வீதிவலம் வரும் போது
"இராசி" அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் திருமண பந்தத்தில்
இணைந்த போது
தமயனார்
கந்தையா முருகேசு
அவர்களுடன்
"இராசி" அவர்கள்



கிறிஸ்த்தோப்பர்
அவர்களின்
பிரிவுபசார வைபவத்தில்
"இராசி" அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவு அதிர மழை என்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே.

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே
அந்தணர் ஊர்தொழுது உய்யலாம் மையல் கொண்டு
அஞ்சல் நெஞ்சே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே·
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

எத் தாயார் எத் தந்தை எச் சுற்றத்தார்
எம்மாடு கம்மாடாய் மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒரு வரில்லை
சிறு விறகால் தீ மூட்டி செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னின்
திருவானைக் காவுடைய செல்வா வெக
அத்தா உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டெம் கொண்டடியேன் என்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ் ஆரும்
பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூசை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

## திருமந்திரம்

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு தெற்கு

### ஆலமானவச் சித்தி விநாயகர் விருத்தம்

கங்கையெனப் பாலாறு குதித்துப் பாயக்
கரைபுரளும் முத்தினங்கள் கண்சிமிட்ட
எங்குமுள புள்ளினங்கள் இசைகள் பாட
இளமுருகன் தமிழ்த் தென்றல் எழுந்து வீசும்
பங்கமிலாப் பசுத்தீவின் தென்பால் நின்று
பாலிக்கும் ஆலமாவன சித்தி விநாயகரே
துங்கமுறு திருப்பணிசெய் சின்னத்தம்பி
துணை மலர்ந்தான் சரணடைந்தான் தூக்கிக் காப்பாய்

## நெடுந்தீவு மேற்கு

### நெழுவினிப் பிள்ளையார்

கற்பகம் போற் தென்னை பனை காட்சி காட்டக்
கண்ணிமையாத் தேவர்க்குங் களிப்பையூட்டும்
பொற்பகமாம் நெடுந்தீவின் மேற்பால் நின்று
புண்ணியத்தின் வழிகாட்டும் புனிதமான
அற்புதங்கள் புரி கணேசா! அன்பு பண்பு
ஆன்ற பக்தி கற்புநெறிக் கணி கலன்போல்
சிற்சிறப்பாய் வாழ்ந்த இரா.சின்னத்தம்பி
இன்று வந்தான் கிருபைக் கண்ணேந்திக் காப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் சிறப்பு

## விருத்தம்

திரு வளருங் கறவையினம் மடி சொரிந்து வழி நெடுகச்
செழும்பாலைச் சிந்தும் நாடு ;
திரைவாரி வாரி வந்து வலம் புரியை அரணாகச்
சேர்த்தார்த்து மகிழுநாடு ;
மரு வளரும் பொற் சீந்தில் உணவுண்டு நீடாயுள்
மலிந்துயிர்கள் மறையா நாடு ;
மதகுரவர் கன்னியர்கள் துறவிகளை நனி தீன்று
மாபுகழ் விரிந்த நாடு ;
கரு வளரும் கலைவாணர் புலவோர்கள் பேரறிஞர்
கம வேந்தர் மிகுந்த நாடு ;
காவலனாம் வெடியரசன் கோட்டையும் பரிப்படையும்
காட்சி தரு தேவநாடு ;
தரு வளரும் திருநாடு வருவாரை ஆதரிக்குந்
தன்மையினில் முதன்மை நாடு ;
தரையில் நிகரில்லாத நெடுந்தீவு எனப்புலவர்
சாற்றிடும் பெரிய நாடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. இரா. சின்னத்தம்பி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

பால்த்தீவு, பசுத்தீவு, ஆவுறையூர், மாவுறையூர், டெல்வ்ற், நாகநீள் நகர், ஔசததீவு என்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் நெடுந்தீவின் கிழக்கே, இரு மரபும் தூய வேளாளர் மரபில், தனிநாயக முதலி வம்சத்தில் அவதரித்த சின்னர் இராமநாதர் அவர்களும், சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை அவர்களும் திருமண பந்தத்தில் இணைந்ததால் இல்லறத்தின் நல்லறமாய் அவதரித்த தவப்புதல்வன் தான் "இராசி" என்று செல்லமாய் அழைக்கப்படும் சின்னத்தம்பி அவர்கள். இவர் 1934 ஆம் ஆண்டு மாசி மாதம் 26 ஆம் திகதி எம் தீவகத்திற்கோர் விடிவெள்ளியாக அவதரித்தார்.

குடும்பத்தில் மூத்தவர்களாக குஞ்சாச்சிப் பிள்ளை, நாகமுத்து ஆகிய பெண்பிள்ளைகள் பிறந்தமையால் ஆலமாவனப் பிள்ளையாரைத் துதித்து ஆண் பிள்ளையாக சின்னத்தம்பியைப் பெற்றெடுத்ததாக பெற்றோர் குறிப்பிடுவார்கள். இவருக்குப் பின் வள்ளியம்மை என்ற சகோதரி உட்பட நால்வரும் மிகச் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர். நல்லதொரு குடும்பம் என்று எல்லோரும் போற்றும் வண்ணம் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர். மூத்த இரண்டு அக்காமாருக்கும் எட்டு வயது வித்தியாசத்தில் பிறந்த அவர் செல்லக் குழந்தையாக வளர்க்கப்பட்டார்.

தந்தையார் இராமநாதர் 2ம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து உத்தரவு பெற்ற வியாபாரியாக கடமையாற்றினார். இவரது உத்தரவு பெற்ற வியாபாரக் கடை நெடுந்தீவு கிழக்கில் பிரசித்தி பெற்றதாகக் காணப்பட்டது. மேலும் மிருக வளர்ப்பு, விவசாயத்தினாலும் போதிய வருமானம் கிடைத்தது. குடும்பம் பிரச்சனை அற்ற வகையில் செல்வச்செழிப்புடன் விளங்கியது.

ஆறு வயது நிரம்பிய சின்னத்தம்பி அவர்கள் 1940 ஆம் ஆண்டு நெடுந்தீவு மத்தியிலுள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையில், அதிபர் திரு.க.இராமநாதன் அவர்களால் சேர்க்கப்பட்டார். அண்ணர் முறையான இராமநாதன் அவர்கள் இவரின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டினார்.

1945 ஆம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர மாணவனாக தேர்ந்தெடுக்கப்பட்ட "இராசி" அவர்கள் எல்லோராலும் பாராட்டப்பட்டார். மத்திய மகாவித்தியாலயங்கள் உருவாக்கப்பட்ட காலமிது. தீவுப்பகுதிப் பிள்ளைகள் வேலனை மத்திய கல்லூரியிலே சேர்க்கப்பட்டனர். புலமைப் பரிசில் சித்தி பெற்ற இவரும் தமக்கையார் நாகமுத்து அவர்களுடன் சென்று அனுமதியைப் பெற்றுக் கொண்டார். ஆங்கில மொழி மூலம் அங்கு கல்வியைத் தொடர்ந்தார். 1952 ஆம் ஆண்டு S.S.C பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்தார். இதற்குள் 1946 ஆம் ஆண்டு தனது தனது இரண்டாவது தமக்கையார் நாகமுத்து அவர்கள் காலமாகியமை மிகுந்த வேதனையை அவருக்குத் தந்தது.

இந்நிலையில் நெடுந்தீவில் 16.01.1946 இல் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இதனுடைய அதிபராக பண்டைத் தரிப்பைச் சேர்ந்த எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அன்பு, கருணை, காருண்யம், மனித நேயம், ஆழ்ந்த புலமைத்துவம் என்பவற்றின் மொத்த வடிவம் அவர். நெடுந்தீவில் கற்கக் கூடிய குழந்தைகளை அடையாளப்படுத்தி அவர்களை முறைப்படி கற்பித்து "வறுமை கற்றலுக்குத் தடையாக இருக்கக் கூடாது" என்பதால் சுய உழைப்பில் எல்லோரும் கற்கக் கூடிய ஒரு சூழலுக்கு "வெங்காயக்கூடை இழைத்தல் " என்ற தொழிலை அறிமுகப்படுத்தி இருந்தார். படிக்கக் கூடிய மாணவர்களை அடையளப்படுத்தி அவர்களை முறையாக கற்பித்து இந்தியா வரை அனுப்பி கல்விமான்களாக்கி எம் வறுமைப்பட்ட தீவிற்கு மீட்பராக பணிபுரிந்தார். மாணவர்களிடம் காணப்பட்ட கற்றல் கற்பித்தல், புறக்கிருத்திய செயற்பாடுகளை அவதானித்து அந்தந்த மாணவர்களுக்குப் பொருத்தமான துறையை தெரிவு செய்து அத்துறையில் சிறப்படைய வழிபல செய்தார். ஒரு ஆசிரியன், ஒரு அதிபர் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதற்கு உதாரண புருசராக எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் விளங்கினார்கள்.

திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் ஆங்கில S.S.C பரீட்சையை நிறைவு செய்துவிட்டு நெடுந்தீவிற்கு வந்ததும் "இரும்பைக் காந்தம் கவர்வது போல" நவரட்ணசிங்கம் அவர்களின் கற்றல் கற்பித்தல் பணி இவரைக் கவர்ந்தது. நவரட்ணசிங்கம் அவர்கள் தமிழ் S.S.C ஐ நெடுந்தீவில் எடுக்குமாறு "இராசி" ஐப் பணித்தார். அவரும் ஆவலுடன் அதில் நாட்டம் காட்டினார் இரா.சின்னத்தம்பி அவர்களின் ஆற்றல் எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்களைக் கவர்ந்தமையினால் "இராசி" யின் தந்தையார் இராமநாதர் அவர்களைச் சந்தித்து மகனை இந்தியாவிற்கு அனுப்பி படிப்பியுங்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். "அவன் நன்றாக வருவான் அவனிடம் விஷேட திறமைகள் உண்டு உங்களுக்கும் நாட்டுக்கும் பிரயோசனப்படுவான்" என்று அவர் குறிப்பிட்ட வசனங்கள் பெற்றோருக்கு திருப்தியைத் தந்தது. ஒரே மகன் எவ்வாறு தூரதேசம் அனுப்புவது என்று வேதனைப்பட்டனர். இந்தியா அயல்நாடு, அவனை சிறப்பாக ஆக்கித்தரும் "வியாபாரியார்" யோசியாதையுங்கள் என்று அவர் குறிப்பிட்டதும், பிள்ளையிடம் விருப்பம் கேட்ட பின் "அதிபர் உங்கள் பொறுப்பில் அவனை அனுப்பி வைக்கிறோம்". தேவையான செலவை நாங்கள் செய்வோம் அவன் நன்றாய் வந்தால் போதும் என்று அனுப்பி வைத்தனர்.

தென் கிழக்காசியாவின் புகழ் பெற்ற பிரித்தானிய பல்கலைக் கழகங்களோடு போட்டி போட்டு நின்ற சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் இளங்கலைப் (B.A) பட்டத்தைப் பெற்றார். இக்கல்லூரியின் மாணவர் மன்ற செயலாளர் ஆகவும் செயற்பட்டார். அக்காலத்து கல்லூரி மலர் ஒன்றில் "இராமாயணத்தில் மாண்புடைய கதாபாத்திரம் கும்பகர்ணன்" என்று இவர் எழுதிய கட்டுரை பல தடவைகள் மீள்பதிப்பு செய்யப்பட்டது. "தான் ஏற்றுக் கொள்ளும் பதவிக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற இரா சின்னத்தம்பி அவர்கள் சென்னை கிறிஸ்தவ கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். 1958 ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய அவர் பட்டதாரி ஆசிரிய நியமனத்தை 02.11.1959 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

இதற்குள் அவரின் மூத்த சகோதரி குஞ்சாச்சிப்பிள்ளையின் கணவர் மாரிமுத்து அவர்கள் காலமாகி விட்ட காரணத்தினால் ஐந்து பிள்ளைகளுடன் தமக்கையார் அடைந்த துன்பத்தைத் தன் துன்பமாகக் கொண்டு "நான் இருக்கிறேன்" என்று துணிவு கொடுத்ததுடன் அப்பிள்ளைகளுக்கு வழிகாட்டியாகவும் இருந்தார்.

முதல் நியமனத்தை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலேயே பெற்றுக் கொண்டார். இவருடைய காலத்திலே தான் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் முதன் முதலாக பல்கலைக்கழகத்தினுள் நுழைந்தனர். அதிபர் எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் இவரைப் பிரதி அதிபராக்கி முகாமைத்துவம், நிர்வாகம், கட்டமைப்பு ஆகியவற்றை செவ்வையாக நடத்தும் வழிவகையை இவருக்குக் காட்டிக் கொடுத்திருந்தார். சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியின் அனுபவங்கள், திரு.எட்வேட் நவரட்ணசிங்கத்தின் ஆலோசனைகள் இவரை ஒரு புடம் போட்ட நல்லாசிரியன் ஆக்கியது. இக்காலத்தில் இவர் பிரதி அதிபர் பணியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பாடங்களை க.பொ.த உயர்தரத்தில் கற்பித்தார் என்ற செய்தி அவரின் ஆளுமைக்கு சான்றாகக் காணப்படுகின்றது.

1964 ஆம் ஆண்டு நெடுந்தீவின் புகழ்பெற்ற அதிபராக இருந்த சுவாமிநாதர் சின்னம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வி புவனேஸ்வரியைத் திருமண பந்தத்தில் இணைத்துக் கொண்டார். "இவர் போல யார் என்று" சொல்லும் அளவுக்கு மனமொத்த தம்பதியினராய் அவர்கள் வாழ்ந்து வந்தனர். கணவனின் குறிப்பறிந்து செயலாற்றும் திறன் புவனேஸ்வரி அவர்களுக்கு கைவந்த கலை. வந்தவரை வரவேற்று விருந்தளித்து நெடுந்தீவின் மிகக் கௌரவமான குடும்பமாக அக்குடும்பம் காணப்பட்டது.

புவனேஸ்வரியின் சகோதரர்களாக தர்மரட்ணம் (காப்புறுதி அலுவலகர்), சிவகாமியம்மா, சுந்தரம்மா, சிவஞானவதி, திருநாவுக்கரசு (நில அளவையாள அத்தியட்சகர்), தனலட்சுமி (ஆசிரியர்) என நான்கு சகோதரிகளுடனும் இரண்டு சகோதரர்களுடனும் பிறந்தவர். அவர்கள் முறையே தர்மரட்ணம், அவர்கள் புங்குடுதீவில் இராஜலட்சுமி அவர்களையும், சிவகாமியம்மா கணபதிப்பிள்ளை அதிபர் அவர்களையும், சுந்தரம்மா பண்டிதர் பசுபதி அதிபர் அவர்களையும், சிவஞானவதி பிரதம கணக்காளர் S.R.பசுபதி அவர்களையும், தனலட்சுமி அதிபர் பேரம்பலம் அவர்களையும் திருநாவுக்கரசு அவர்கள் வேலனை ஆசிரியை கமலாதேவி அவர்களையும் திருமணம் செய்து மிகச் சிறப்பாக வாழ்ந்தனர்.

நாட்டின் யுத்தமும் அசாதாரண சூழலும் குடும்பங்களை திசை திசையாக மாற்றிவிட்டது. எல்லாத் தமிழர் வாழ்வியல் நிலையிலும் ஏற்பட்ட தாக்கத்தைப் போல இக்குடும்பங்களும் இடம் விட்டு இடம் பெயர்ந்தனர். அன்னியோன்னிய உறவுடன் அன்பாய் இக்குடும்பங்கள் இருந்த காலம் பொற்காலமாகும். நெடுந்தீவின் கல்வி பொருளாதார வளர்ச்சியில் இக்குடும்ப உறுப்பினர்கள் வெவ்வேறு வழிகளில் பங்களிப்பைச் செய்தார்கள். இன்றும் தாம் வாழும் நாடுகளில் நெடுந்தீவு உறவைப் பேணி வளர்ப்பவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர்.

திரு.இரா.சின்னத்தம்பி புவனேஸ்வரி குடும்பம் தம்மால் முடிந்த உதவிகளை ஏழைக் குழந்தைகளுக்கு உதவி வந்தனர். சின்னத்தம்பி அதிபர் அவர்கள் கிராமத்தில் படிக்காத ஒரு பிள்ளையைக் கண்டால் பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வந்து கற்பிப்பதைப் பலர் நினைவு கூர்ந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தம்மகன் மகேந்திரனைச் சிறப்பாகக் கற்பித்தனர். நாட்டுச் சூழல் காரணமாக அவரை பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பினார்கள். இக்காலத்தில் இரா.சின்னத்தம்பி அதிபர் அவர்கள் நெடுந்தீவு மேற்கு கோவிந்தபிள்ளை (செட்டி) அவர்களின் மகள் தமிழ்பிரியா அவர்களை முறைப்படி திருமணம் செய்து வைத்தார். மகனும், மருமகளும் பிரான்சில் மிகச் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.

தன் சகோதரி வள்ளியம்மைக்கு திரு.அ.முருகேசு அவர்களைத் திருமணம் செய்து வைத்து சந்தோஷம் அடைந்தார். சகோதரிகளின் பிள்ளைகளை அன்போடு அரவணைத்து வந்தார். உறவினர்களின் பிள்ளைகள் சிறப்பாகத் துலங்கும் போதெல்லாம் சந்தோஷம் அடைவார். பாராட்டுவார். எல்லாக் குழந்தைகளும் நன்றாக இருக்க வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது.

கண்டிப்பு, அரவணைப்பு, பாராட்டு எல்லாவற்றையும் அவரால் ஒரே நேரத்தில் செய்ய முடியும். பாடசாலையில் தண்டனை தந்த அடுத்த கணமே அந்த மாணவனைப் பாராட்டும் சந்தர்ப்பங்களை நேராக அவதானிக்க முடிந்தது. பெரிய ஞானிகளிடம் இல்லாத பரந்த குணம் அவருக்குச் சொந்தமாக இருந்தது.

1970 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன் டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்தார். ஆங்கில மொழி கற்பித்தல் முறைமையில் விஷேட ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார். பேராசிரியர் ஜெயசூரிய, பேராசிரியர் றஞ்சித் ருபேரு போன்றோரின் விருப்பத்திற்குரிய மாணவராக காணப்பட்ட இவர் அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவு மகாவித்தியாலயம் வந்து மிகச் சிறப்பாக பணி புரிந்தார். 1972 இல் இப்பாடசாலையில் வெள்ளி விழாவை மிகச் சிறப்பாக நடாத்தினார். இதுவரை நெடுந்தீவு கண்டிராத பெருவிழாவாக அது நடத்தப்பட்டது. சிறந்த கல்வி மானும் கல்வி அமைச்சு ஆலோசகராக இருந்தவருமான பேராசிரியர் றஞ்சித் ருபேரு அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இவ்விழாவில் "மிகப் பின்தங்கிய ஒரு பிரதேசத்தில் ஆளுமை வழங் கொண்ட மிகச் சிறந்த கல்விமானை அதிபராகக் காண்கிறேன்" என்று குறிப்பிட்டார். இந்த விழா மலர் மிகப் புகழ் பெற்ற கல்லூரிகளால் வெளியிடப்படும் மலரை விட சிறப்பான அம்சங்களோடு காணப்பட்டதாக விமர்சிக்கப்பட்டது. இக்காலத்தில் நெடுந்தீவில் திருக்குறள் மகாநாட்டை நடத்தியதுடன் 1979 இல் திருவள்ளுவர் சிலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகாவித்தியாலய முன்றலில் நிறுவுவதற்கு ஆலோசனை வழங்கி திரு.செல்லத்தம்பி அவர்களின் அன்பளிப்போடு அச்சிலை இன்றும் நிமிர்ந்து நிற்கின்றது.

நெடுந்தீவின் அதிபராக இருந்த இவரின் செயற்பாடுகளால் கவரப் பெற்ற அக்காலத்து வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு.சிவநாதன் அவர்கள் நெடுந்தீவு மக்கள் செறிந்து வாழும் கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் சிறிது காலம் கடமையாற்றுமாறு வேண்டினார். 1981 ஆம் ஆண்டு கிளிநெச்சி மத்திய மகாவித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் மிகச்சிறந்த கூட்டுறவாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் நெடுந்தீவின் முதலாவது "கூட்டுறவாளன் " என்ற பெயருடன் விளங்கினார்.

ஐம்பது ஏக்கர் காணி கொண்ட கிளிநொச்சி மத்திய மகாவித்தி யாலயத்தை இவர் பொறுப்பேற்ற போது 15 ஏக்கர் காணி மாத்திரம் பாடசாலைக்கு என்று கிடந்தது. ஏனையவை பலாத்காரமாக தனிமனிதர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன.

வாக்குத் தேடும் அரசியல் வாதிகள் தம்வாக்கு குறைந்துவிடும் என்பதால் பலாத்கார குடியிருப்பாளர்களை வெளியேற்ற விரும்பவில்லை. திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் தன்னந்தனியாக பள்ளிக்கூட வளவு வரைபடத்துடன் ஒவ்வொரு அத்துமீறியோருடனும் பேச்சுவார்ந்தை நடாத்தி படிப்படியாக அவர்களை வெளியேற்றினார். 1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியை விட்டு அவர் வெளியேறிய போது 37 ஏக்கர் காணி கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு கிடைத்து விட்டது. 1981 ஆம் ஆண்டு கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராகிய அவர் கல்வி சீர்திருத்தத்தின் பிரகாரம் பரீட்சார்த்த கொத்தணி அதிபராக நியமனம் பெற்றார். 1986 ஆம் ஆண்டு கெளரவ கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கல்வி அமைச்சில் நடாத்திய கருத்தரங்கில் அதிபர் சின்னத்தம்பி அவர்களால் வழங்கப்பட்ட கருத்தரங்ரகு அறிக்கையை பார்த்த பின் "இவரைப் பின்பற்றலாம்" என்று குறிப்பிட்டது பெருமை தரக்கூடிய விடயம் ஆகும். இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அவர் பல்வேறுபட்ட அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தன் கடமையை புரிந்ததை எல்லோரும் பாராட்டுகிறார்கள். வயல் விதைக்கவோ காணித்துண்டு வாங்கவோ கிளிநொச்சிக்கு அவர் செல்லவில்லை மாறாக பாடசாலை வகுப்பறை ஒன்றில் இருந்துகொண்டு பாடசாலைக்காக தன்னை அர்ப்பணித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்தில் தான் மருத்துவபீடம், பொறியியல் பீடம் போன்ற பீடங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மீண்டும் 1987 இல் நெடுந்தீவு மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் நெடுந்தீவு கொத்தணி அதிபராகச் சென்று பின்னர். கோட்டக்கல்வி அதிகாரியாய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய், தீவக வலயக் கல்விப் பணிப்பாளராய் தன் சேவையை சிறப்புற ஆற்றினார். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, வேலனை உட்பட எல்லாத் தீவக மக்களினாலும் இவரது சேவை பாராட்டப்படுகிறது. யுத்த காலத்தில் எந்த ஒரு தீவுப் பகுதி மாணவனும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக சகல பரீட்சைகளையும் செவ்வையாக நடத்துவதற்கு உதவியவர் என்று போற்றப்படுகிறார்.

**விசேட ஆணையாளர் :**

நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட போது இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்திருந்த இரா.சின்னத்தம்பியிடம் அப்பதவி கொடுக்கப்படலாம் என விதந்துரைக்கப் பட்டது. 1980, 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் பின்னர் 1992 இல் இருந்து ,1995 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் விசேட ஆணையாளராக இருந்த இரா. சின்னத்தம்பி அவர்கள் கிராமத்துக்கு சிறந்த சேவையாற்றினார். நீர் வழங்கல், பாதைப் புனருத்தாரணம், போக்குவரத்து என்பவற்றில் அவர் காட்டிய அக்கறை குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவு மக்களுக்கு சில நாட்கள் உணவு இல்லாமல் இருந்த போது கடலில் யாரும் செல்ல முடியாது என்ற நிலை காணப்பட்ட போதும் தனித்த ஆளுமையுடன் நெடுந்தீவு கத்தோலிக்க குருவானவர் லம்பேட் அவர்களையும், நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் ம.கணபதிப்பிள்ளை அவர்களையும் அழைத்துக் கொண்டு வெள்ளைக் கொடியுடன் தனித்த வள்ளத்தில் சென்று உணவு பெற்று மீண்டார்கள். தொடர்ந்து உணவு கிடைக்காத போது அரசாங்க பதவியில் இருந்த அவர் எதற்கும் அஞ்சாது அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்களுக்கு "நெடுந்தீவு இலங்கைக்கு சொந்தமா? அல்லது இந்தியாவுக்குச் சொந்தமா? இலங்கைக்குச் சொந்தம் எனில் உணவு வழங்குங்கள் என்று தந்தி கொடுத்து எச்சரித்த பெருமை அவரையே சாரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு :

புங்குடுதீவோடு சேர்ந்திருந்த நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்தை நெடுந்தீவிற்குரிய தனிச் சங்கம் ஆக்குவதற்கு அயராது உழைத்தார். வெற்றியும் கண்டார். நெடுந்தீவின் கல்வியாளர்களினால் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டிருந்த பொதுச்சேவை கூட்டுறவு சங்கத்தில் இளம் வயதில் அக்கறையுடன் செயலாற்றியவர்.

சமயம் :

எல்லா மதத்தவரையும் சமனாக மதிக்கும் அவர் நெடுந்தீவு ஆலவாமனப் பிள்ளையார் ஆலயத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். கடைசி கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கு சகலரையும் இணைத்து செயற்பட்டவர் இவர். 26.02.2013 அன்று அக்கோவிலின் விஷேட பூஜையில் கலந்து கொண்டதன்பின் அவர் எந்தக் கோயிலுக்கும் செல்லவில்லை.

முடிவு :

மரணத்திற்கு ஒரு காரணம் வேண்டும். பல்துறை ஆளுமை படைத்த அவருக்கு "சளி" வருத்தம் ஒரு காரணமாய் அமைந்தது. கடைசிவரை அவரின் அருகில் இருந்த அவர் மனைவியுடன் தன்னாலான எல்லா உதவிகளையும் அவருக்குச் செய்து கொண்டிருந்த கந்தையா பரமேஸ்வரி, தனுஷா அவருடைய சம்மந்தி கோவிந்த பிள்ளை (செட்டி) ஆகியோர் அருகில் இருக்க 16.03.2013 சனிக்கிழமை அன்று 2.35 மணிக்கு ஆலமானவப் பிள்ளையாரின் பாதங்களில் அவர் சரணடைந்தார்.

தன் மூத்த சகோதரி குஞ்சாச்சிப்பிள்ளை அவர்கள் 11.05.2012 இல் காலமானார். தன் மைத்துனர் முருகேசு அவர்கள் 25.11.2012 இல் காலமானார். குடும்பத்தின் எல்லா. இழப்புகளாலும் மனம் நொந்திருந்த அவர் தன் வேதனைகளில் எல்லாம் "ஐயோ கடவுளே" என்ற வார்த்தைகளுடன் இறைவனுடன் மட்டும் உரையாடிக் கொண்டிருந்தார்.

தன்நெஞ்சறியப் பொய்யாத மனத்தினனாய், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளி சிந்தித்து செயலாற்றும் செயல் வீரனாக, பண்புக்கும் பாசத்திற்கும் முக்கியம் தந்து தனக்கென வாழாப் பிறருக்குரியானாய், வையத்துள் வாழும் வகையில் வாழ்ந்து தெய்வத்தோடு இணைந்திருக்கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

- சாந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவகம் - நெடுந்தீவு

**கோட்டக் கல்விப் பணிமனையின் முன்னாள் பணிப்பாளரும் நெடுந்தீவு பிரதேச சபையின் விசேட ஆணையாளரும் சிறந்த சமூக நலங் கொண்டவருமான திருவாளர். இராமநாதர் சின்னத்தம்பி அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவில் வாசித்தளித்த**

## மங்கள வாழ்த்துப்பா !

ஞாலத்தில் சிறந்தோங்கும் யாழ் நகரின் தென்மேற்கில்
காலத்தின் முற்பட்டகலை வளர்த்த அரசர்குலம்
வெடியரசன், மீகாமன் மேலாட்சி செய்தெவர்க்கும்
அடிபணியா மறத்தமிழர் அரணமைத்த நெடுந்தீவு
மூலிகைக்குப் பெயர் பெற்ற முத்தமிழின் பண்பாடும்
பாலிகையர் அரங்குபயில் பசுத்தீவின் பழங்குடியில்
காராளர் குலத்துதித்த இராமநாதண்ணலவன்
சீரான இல்லறத்தில் சிவகாமிப் பிள்ளை தரு
உத்தமனாம் ஆசிரிய உலகுக்கோர் ஒளிர் நிலவாய்
பெற்றமனம் குளிர்தருநற் பெருங்குணத்து நம்பியெனும்
சித்தம், செயல் ஒன்றாகத்திகழ் சின்னத்தம்பி மனம்
ஒத்தகருத்துடையாள் ஓங்கு தமிழ்ப் பண்புடையாள்
புடம்போட்ட பொன்னனையாள் புவனேஸ்வரி துணையாய்
தடம்பார்த்த நடைபயிலத் தன்னூர்க்கும் நாட்டுக்கும்
ஆற்றரிய சேவை செய்த அன்பு மகன் நெடுந்தீவின்
ஊற்றெனலாம் அமெரிக்க மிஷன் கழகக் கல்வி கற்றும்
வேலணையின் மத்திமகா வித்தியாலயம் சென்றும்
கோலமுறத் தமிழகத்தில் குலவு பட்ட தாரியுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திங்கு ஆசிரிய மரபுக் கணிகலனாய்
எந்தெந்தத் துறையிலுமே ஏற்றமுற்று அதிபருமாய்
கொத்தணியின் அதிபரென கிளிநொச்சி மாணவர்கள்
வித்தகராய் விளங்கிடவே மேலும் பணி செய்வான்
போர்க்காலச் சூழலிலே தீவகத்தார் புலம் பெயர்ந்து
யார்க்காகும் எனவிருந்த நாளினிலே நெடுந்தீவுக்
கோட்டப் பணிப்பாளர் ஆகியுமே தீவகத்து
கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் குழுவினிலும்
நெடுந்தீவின் பிரதேச நிர்வாக ஆணையராய்
கடுஞ்சேவை செய்தமையும் காலமதாய் நிலவுகின்ற
வழிப்பயண வசதியற்ற வாழ்வதனைப் போக்கிடவும்
செழிப்பினையே அறியார் பசிப்பிணியை போக்குவதற்கும்
கற்றோரும் காசு பணம் உற்றோரும் கடல்கடக்க
வற்றாத பாசமுடன் பிறந்த மண்ணின் வாழ்விற்காய்
அல்லும் பகலுமென அர்ப்பணித்த ஐயாநீர்
நெடுந்தீவின் சரிதமதில் நிலைத்த புகழ் பெற்றிடுவீர்
கொடுந்தீமை அற்றிந்தக் குவலயத்தில் வாழ்ந்திடுவீர்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு நீர் வாழ்க !
எல்லா இறையருளும் எய்திடவே நீர் வாழ்க !

**சுபம்**

அன்புடன் வாழ்த்தும்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
பணிமனை உத்தியோகத்தர்கள்
அதிபர்கள்
ஆசிரியர்கள்
ஊழியர்கள்
மாணவர்கள்

நெடுந்தீவு
1996.07.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலம் பாராட்டும் வாழ்த்துக் கும்மி

கும்மியடி நெடுந்தீவு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
முன்னாள் தீவகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
சேவையைப் போற்றியே கும்மியடி

தீவகம் போற்றும் பெருமகனாம் - செம்மல்
சின்னத்தம்பி புகழ் பாடிடுவோம்
தீவுச் சிறார்களின் கல்விப் பணியினை
சிந்தையில் ஏற்றி மகிழ்ந்தவராம்

தீவைப் பிறப்பிடமாகக் கொண்டும் - பல
சீருறு கல்வியில் ஏற்றம் கண்டும்
பார் புகழும் பல பட்டங்களைப் பெற்றும்
பண்பு குறையாமல் வாழ்ந்தவராம்

அன்பும் அகிம்சையும் ஆளுமையும் கொண்டு
ஆலயங்கள் பல பேணினராம்
ஏழைச் சிறார்களின் வாழ்வை உயர்த்திட
எண்ணரும் எதிர்ப்பினை வென்றவராம்

பீடு நடை கொண்ட பேரறிவாளனாம்
தாயக உயர்வை நாளும் எண்ணி
தூய உணர்வுடன் சேவைதனை ஆற்றும்
சிந்தை நிறைந்த திருமகனாம்

மக்கள் தலைவனுக்குள்ள சிறப்புகள்
மாண்புற அமைந்த சான்றோனை
மங்கையர் நாம் போற்றி இன்னிசை பாடியே
மகிழ்ந்து கும்மியடிப்போமே
ஓய்வு பெறும் வரை கல்விக் கொளிதந்த
உத்தமரை நாமும் வாழ்த்திடுவோம்
ஈசன் அருளினை வேண்டி நிற்போம் - என்றும்
இறவாப் புகழ் பெற்று வாழ்ந்திடவே **(கும்மியடி.......)**

நெடுந்தீவு ⊠ பாரதி வித்தியாலயம்

15.07.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20,Marlborough Drive,
Ilford,
Essex,
IG5 0JN.
7.04.13

## நாட்டுப்பற்றாளர் இராமனாதர் சின்னத்தம்பி

இவர் உறவுமுறையில் எனது சகலனாக இருந்தபோதும் இவருடனான எனது சகல தொடர்புகளும் நாட்டின் சமுகசேவை சம்பந்தமான தாகவே இருந்தது. இவரது கல்விச் சேவையைப்பற்றி சகலரும் புகழாரம் சூட்டுகிறரர்கள். இத்தொண்டை மகாவித்தியாலயத்தில் எப்படி வளர்த்தார் என்பதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நெடுந்தீவில் நிகழ்ந்த இருபெரும் புரட்சிகள்/மாற்றங்களுக்கு இவரது சேவை அடிகோலியது என்பது மட்டும் எனக்குத தெரியும்.

அதாவது 1955ம் ஆண்டளவில் நெடுந்தீவில் இருந்து எட்டுப்பேர் - குமாரசாமி, சுவாமிநாதன், பொன்னம்பலம், நாகேந்திரன், நடராசா, சண்முகநாதன், புண்ணியமூர்த்தி, நாகலிங்கம் - அரசாங்க எழுது வினைஞ்ஞர் சேவைக்கு எடுபட்டிருந்தார்கள். என்னைப் பொறுத்த வரையில் இது நெடுந்தீவில் ஏற்பட்ட ஒரு கல்விப்புரட்சி என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால் அதற்கு முந்திய காலம் முளுவதிலும் இச்சேவையில் ஆறுபேர் - மரியநாயகம், தருமரத்தினம், சவிரிமுத்து, பத்மநாதன், தனிநாயகம், நான் - மட்டுமே இருந்தார்கள்.

இந்த 8 பேரின் வருகையால் உற்சாகம் அடைந்த நாங்கள் எல்லேரரையும் சேர்த்து கொளும்பில் நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தை ஆரம்பித்தோம். நெடுந்தீவின் முன்னேற்றத்திற்கு கல்வி, கடற் பிரயாணம், குடிதண்ணீர் ஆகிய 3 துறைகளின் அபிவிருத்திளை இனம் கண்டு செயற்பட்டோம்.

அந்நாள் பாராளுமன்ற உறுப்பினராகிய திரு V. நவரத்தினம் அவர்களின் உதவியுடன் குறிகட்டுவான் இறங்கு துறையை நிறுவி 3 மணுத்தியாலக் கடற்பிரயாத்தை 45 நிமிடமாகக் குறைத்ததோடு "குமுதினி" என்னும் புதியபடகையும் சேவைக்கு அமர்த்த வளிவகுத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது ஊக்குவிப்புத் திட்டங்களில் நாங்களும் ஈடுபட்டுச் செயற்படும் நோக்கத்துடன் நெடுந்தீவுப் பொதுச்சேவை கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினோம். அக்காலத்தில் அமுலில் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாண வெங்காயத்துக்கு மிகுந்த தேவை ஏற்பட்டதால் அதனைக் களஞ்சியப்படுத்த வெங்காயக் கூட்டுத் தேவை ஏற்பட்டது. **இதன் உற்பத்தியை** மகாவித்தியாலயமே **நெடுந்தீவில் அறிமுகப்படுத்தியது.** இக்கூட்டை யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சமாசத்தில் கொண்டுபோய் கொடுக்கும்போது கூடொன்றிற்கு மூன்றரைச் சதம் கொடுப்பார்கள். ஆனால் நெடுந்தீவில் வியாபாரிமார் இதனை 2 சதத்திற்கு உற்பத்தியாளர்களிடம் இருந்து வாங்கினார்கள். இதனைக் கவனித்த பொதுச்சேவைக் கூட்டுறவுச்சங்கம் கூட்டை 3 சதத்திற்கு வேண்டக் களத்தில் இறங்கியது. அரைச்சதம் கூட்டை சமாசத்திற் கொடடுக்கும்வரை ஏற்படும் செலவை ஈடுசெய்யுமோ என்ற பயம் எங்களுக்கு இருந்தபோதும் அவ்வருடம் சங்கக்கணக்கைப் முடித்தபோது ரூபா 65,000 லாபம் வரக்கண்டோம்.

அமரர் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் கல்வி அபிவிருத்தியுடன் மட்டும் நின்றுவிடாமல் மேற்குறிப்பிட்ட இரு சங்கங்களிலும் தலைவர், உபதலைவர், செயற்குழு உறுப்பினர் போன்ற உயர் பதவிகளையும் வகித்தார். அவரிடம் பொறுப்படைக்கும் கல்விசாராத ஏனைய விடயங்களையும் திறமையுடன் செய்துமுடிக்கும் ஆற்றல் அவரிடம் இருந்ததென்பதை வெளிக்கொணரவே இவற்றை இங்கு குறிப்பிட்டேன்.

அமரரின் மறைவின் போது அவருக்குச் சூட்டப்பட்ட புகழாரம் நெடுந்தீவோடு மட்டும் நின்றுவிடவில்லை. அது புலம்பெயர்ந்த நாடுகளான இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய இடங்களிலும் எதிரொலித்ததென்றால் நெடுந்தீவு மண்ணின் மைந்தர் வேறெவருக்கும் இத்துணைப் பெரும் புகழ் இதுவரை சூட்டப்படவில்லை. ஒரு சாதாரண குடும்பத்தில் புகழ் எதுவுமின்றிப் பிறந்த அமரர்

"தோன்றிற் புகளொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழியையும் பொய்யாக்கிவிட்டார்.

சுபம் !

எஸ். ஆர். பசுபதி
ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர்
தொழில் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். திரு. இரா. சின்னத்தம்பி அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்று

## "அவர் Diary இல் இருந்து

**இன்றைய அவலங்களும் ஆத்மீக சிந்தனையும்**

இந்த அவலங்கள் யாராயல் ஆனது எல்லாம் மனிதர்களினாலேயே

**Oliver Gold Smith**

Man has made more destruction
Than nature ever made ;
Nature is kind but man is unkind

இதன் கருத்து யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனால் நாம் மனிதத்துவத்தை நாடி ஏங்குகின்றோம்.

இதற்காகத்தான் :

★ கிரேக்க நாட்டு அறிஞன் ஒருவன் பகலில் விளக்குடன் சென்று மனிதனைத் தேடியதும்

★ திரு வொற்றியூரில் சந்நியாசி ஒருவன் இராம லிங்க சுவாமிகளில் மனிதனைக் கண்டதும்

★ வள்ளலார் : வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடியவர் ஆயிற்றே - அவரில் மனிதத்துவம்
தேட வேண்டியதில்லையே

மனம் என்று ஒன்று இருப்பதாற்தான் நாம் மனிதர்கள் என்றழைக்கப்படு கின்றோம்.

மனித உள்ளத்தில் இறைவன் உறைகிறான்
சிறப்பாக இந்துமதம் இதை விளக்குகின்றது.

★ தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன் - என்ற சித்தர்பாடலும்

★ சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி - என்றும்

★ உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா......... என்று மாணிக்கவாசகரின் சிவபுராணத்திலும், வேறு காவியங்களிலும் காணலாம்.

எனவே தெய்வம் உறையத்தக்கதாக உள்ளத்தை வைக்க ஆத்மீகம் போதனையாலும், சாதனையாலும் முயற்சிக்க வேண்டும்.

★ ஆத்மீகத்தைப் போதிக்கும் மதங்கள் அவற்றிடம் எதிர்பார்க்கப் பட்டவற்றைச் செய்கின்றனவா? என்பது கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மதாசிரியர்கள் மனித நேயம் கொண்டவர்களாக உள்ளனரா? அவ்விதம் இருந்தால் இன்று இந்நாட்டில் அவலங்கள் நீடிக்குமா?

★ எனினும் மனிதத்தைத் தட்டி எழுப்ப ஆத்மீகம் மதபோதனைகள் சாதனைகள் பெரிதும் தேவைப்படுகின்றன.

★ மனமே மனிதனை நடாத்துவதால் மனத்தைப் பண்படுத்த மதங்கள் தேவைப்படுகின்றன.

★ மத போதனைகள் இன்றுள்ள இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால் களுக்கும், கேள்விகளுக்கும் முகங்கொடுக்கக் கூடிய விதத்தில் அமைதல் வேண்டும். இச்செயற்பாடு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

★ மதங்கள் தமது போதனைகளையும், சாதனைகளையும் விஞ்ஞான ரீதியாக அமைத்து இன்றைய இளம் உள்ளங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**இதனால் தான் :** 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்றின் (Einstien) அவர்கள்Religeon with out science is blind என்றும் Science with out religion is lame என்றும் குறிப்பிட்டார்.

★ நாம் இன்று வார்த்தைகளால் வழங்க முடியாத துன்ப துயரங்களை அனுபவிக்கின்றோம். இந்த அவலங்களில் இருந்து எமது பிற்சந்ததி யினராவது மீள எமது ஆத்மீக போதனைகள், மனிதத்துவத்தைத் தட்டி எழுப்பக் கூடியதாகவும், எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஆத்மீக வழியாகவே தீர்வு காணக் கூடிய வகையில் ஆத்மீகச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

★ சமயக் கருத்துக்கள், சிறப்பாக எமது சைவ சமயக் கருத்துக்கள் அனைத்திற்கும் இளம் உள்ளங்களின் எதிர்பார்ப்புக்கு நவீன முறை யில் விளக்கம் கொடுத்து அவர்கள் ஆன்மீகத்தை ஏற்று இறைவன் உறையும் தமது உள்ளங்களை தூய்மையாக வைத்திருக்க உதவ முயலுவோமாக.

★ மனிதன் உயர்ந்தவன் அவன் உள்ளம் உயர்ந்தது அந்நிலை ஏற்பட்டால் மனிதத்துவம் இயற்கையாகவே உதித்துவிடும்.

★ இதற்கு எமது மதங்கள் போதனையினாலும் சாதனையினாலும் செயற்பட உதவ வேண்டும்.

அன்பே சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

## சாப்பாடு

*தியானம்*

- பசித்தால் மட்டும் சாப்பிடுதல் வேண்டும்.
- அறுசுவைகளையும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். (உவர்ப்பு, கசப்பு, புளிப்பு, இனிப்பு, உறைப்பு, துவர்ப்பு).
- வாய்மூடி நன்றாக மென்று சுவைத்து சாப்பிடுதல் வேண்டும்.
- முழுமையான கவனம் சாப்பாட்டில் இருத்தல் வேண்டும். இல்லையேல் பயனில்லை.
- சாப்பிடுவதற்கு முன், பின் நீரருந்த அரைமணிநேர இடைவெளி தேவை.
- தாகம் எடுப்பின் கால் வீத அளவு கப் நீர் அருந்தலாம்.
- குளித்தபின் நாற்பத்தைந்து நிமிடத்தின் பின்னர்தான் சாப்பிடுதல் அவசியம்.
- சாப்பிட்ட பின்பு இரண்டரை மணிநேரத்தின் பின்தான் குளித்தல் வேண்டும்.
- சாப்பிடுமுன் கைகால் முகம் குளிர் நீரில் கழுவுதல் அவசியம்.
- சாப்பிடும் பொழுது தொலைக்காட்சி பார்த்தல் கூடாது.
- சாப்பிடும் பொழுது பேசிக் கொண்டு சாப்பிடுதல் கூடாது.
- சாப்பிடும் பொழுது சம்மனக் கால் பதித்து இருத்தல் வேண்டும் (கால்களை மடித்து இருத்தல் வேண்டும்).
- தாய்மார் குழந்தைகளுடன் சேர்ந்து சாப்பிடுதல் கூடாது.
- சாப்பிடும் பொழுது புத்தகம், இன்ரநெற் பார்த்தல் கூடாது.
- முதல் ஏப்பத்துடன் சாப்பிடுவதை நிறுத்துவது நல்லது.

இவ்வனைத்து முறைகளும் பின்பற்றப்படும் போதே உடம்பிலுள்ள அனைத்து நோய்களும் குணமாகும்.

*நீர்*

- குறைந்தளவு வெப்பநிலையில் கொதிக்க வைத்த நீரைப் பருகுதல் அவசியம்.
- தாகம் எடுத்தால் மட்டும் நீர் அருந்துதல் வேண்டும்.
- போத்தல் நீர் முற்றாகத் தவிர்க்க வேண்டியது மிக மிக அவசியம்.
- சாதாரண நீர்தான் அருந்துதல் வேண்டும். இல்லையெனில் மண் பானையிலிட்டு சிறிது நேரத்தின் பின் பருகலாம்.
- தாகம் இல்லாத போது நீர் அருந்தக்கூடாது.
- சிறுநீர் கழித்த பின் சிறிதளவு நீர் அருந்தலாம்.
- அண்ணாந்து நீர் அருந்துவது கூடாது. ஆனால் விழுங்கு முன்னர் நன்றாகக் கொப்பளித்து சுவைத்து விழுங்குதல் அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கம்

1. வடக்குத் திசை நோக்கி தலை வைத்து படுத்தல் கூடாது.
2. தேயிலை, கோப்பி, புகைத்தல் ஆகியவை தூக்கத்தின் எதிரி தவிர்த்தல் நலம்.
3. வெறும் தரையில் தூங்குதல் கூடாது.
4. கடுமையான வேலை செய்பதவர்களுக்கு 8 மணி நேர தூக்கம் அவசியம்.
5. ஏனையவர்களுக்கு தேவையான அளவு தூக்கம் அல்லது ஓய்வு.
6. தூங்குவதற்கு முன்பாக பல்துலக்குதல் நல்ல தூக்கத்தைத் தரும்.
7. தாடையில் நடு மூன்று விரல்களால் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் தடவுவதன் மூலம் தூக்க நிலைக்கு இட்டுச் செல்லும்.
8. உச்சந் தலையின் நடுப்பகுதியில் நடு விரலால் மெதுவாக சுழற்சியாக சிறிது நேரம் வலம் இடமாக செய்வதன் மூலம் தூக்க நிலையினை அடையலாம்.

## காற்று

1. வீட்டில் ஊதுபத்தி துளம்புத்திரி பயன்படுத்துதல் கூடாது.
2. வீட்டில் 24 மணிநேரமும் காற்று உள்வந்து வெளிச்செல்ல வசதி இருத்தல் மிக அவசியமானது.

## உழைப்பு

1. AC $37^0$ பாகையில் தான் இருக்க வேண்டும்.
2. உழைப்புக்கேற்ற உணவு உணவுக்கேற்ற உழைப்பு.
3. தினமும் உடலின் எல்லா உறுப்புக்களுக்கும் வேலை கொடுப்பது போன்று ஏதோ ஓர் உடற்பயிற்சியினை வழக்கத்தில் வைத்திருத்தல் வேண்டும்.
4. உடலிற்கு ஏதோ ஓர் வகையில் கட்டாய உழைப்பு தேவை.
5. உடலில் நடைபெறும் எரித்தல் தொழிற்பாட்டிற்கு உழைப்பு அவசியப் படுத்துவதுடன் உழைப்புத்தான் நிணநீர்ச் சுரப்பியினை தொழிற்படச் செய்கிறது. (அது சுரக்கா விடில் அனைத்து நோய்களும் ஒட்டிக் கொள்ளும்)
6. காலையில் எழுந்ததும் பல்துலக்கி முகம் கழுவிய பின் சிறிது நீர் அருந்தவும். அதன்பின் 10 x 10 அளவுள்ள அறியினுள் 8 இலக்க வடிவில் சுமார் 10 அல்லது 15 நிமிடங்கள் சுற்றி வருவதன் மூலம் மலச்சிக்கல் இல்லாமல் போய்விடுவதுடன் சுகமாகவும் சரியாகவும் மலம் கழிக்கலாம்.

மகன் – சி.மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு ஆலமாவனச் சித்திவினாயகர் ஆலய

## பிரதம குருவின் இரங்கற் செய்தி

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் – வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்".**

காலஞ்சென்ற அமரர் இரா.சின்னத்தம்பி அதிபர் அவர்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் ஆவார். அவர் கல்விப் பணியில் பெரும்பங்காற்றினர். அதன் பயனாக இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் நல்ல உயர்தர உத்தியோகஸ்தர்களாகவும் நல்ல பண்பாடு அறிவாற்றல் உள்ளவர்களாகவும் உலகில் நல்ல மதிப்போடு வாழ்ந்து வருகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாகவும் அத்திவாரப்பாலமாக இருந்தது நல்ல உயர்தரகுலத்தில் பிறந்து வளர்ந்த சின்னத்தம்பி ஆசானே இவர்கட்கு ஒளியாக இருந்தார். இது மட்டுமல்ல பல இடங்களில் தனது பணியை முன்னெடுத்து சிறந்த சேவையாற்றி அவ்விடங்களில் ஊர் மக்களின் அன்பையும் பெற்றார். நெடுந்தீவு கிழக்கு ஆலமாவளப் பிள்ளையாரை தனது குல தெய்வமாக வழிபாடு செய்து ஆலயத்தின் நிர்வாக பொருளாளராக இருந்து பல பணிகளை நல்ல முறையில் செய்தவர் ஆவார். நோயுற்ற இறுதிக்காலத்திலும் அவர் சுமார் 20 நாட்களுக்கு முன்னர் தனது மருமகன் கணபதிப்பிள்ளை குடும்பத்தினருடன் தனது குல தெய்வத்தை வழிபாடு செய்து, பூசை கண்டு தொடர்ந்தும் இவர் நோயால் வாடமல் ஆலமாவன ஐங்கரன் தனது பாதார விந்தங்களில் எடுத்துக்கொண்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியும் மோட்சமும் பெற ஆலமாவன சித்தி விநாயகரை வேண்டுவதுடன் அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறி நிற்கிறேன்.

நன்றி

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இங்ஙனம்
**கா.புவனேந்திரசர்மா** (மணிஐயா)
நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Maha Guru

Hindu Rev. Kanaswami Thiagarajah Kurukkal

Senior Minister of Hinduism

Head of Canada Hindu Matha Peedam

Founder, president and Chief Priest of

Thurkeswaram Sridurka Hindu Temple in Toronto Canada

30 Carnforth road, Toronto, Ontario, CANADA. M4A 2K7

Phone : 416-759 9648 / 416-751 3545 / 416-751 5151

priest@durka.com

**நெடுந்தீவு பெற்ற பண்புநெறியாளர், ஓய்வு பெற்ற அதிபர்**

**உயர்திரு. இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்**

**நற்கதி பெறப் பிரார்த்தனை**

"தோன்றில் புகழொடு தோன்றுக"

என்று வள்ளுவர் வகுத்த வாக்கிலும் ஒரு படிமேலாய், தனக்கும் தன் குடும்பத்தவருக்கும் தன் ஊரவர்களுக்கும் புகழொடு பெருமை சேர்த்தவர் நம் ஆசான் திரு. இராமநாதர் சின்னத்தம்பி என்றால், அது மிகையாகாது. நமது ஊராகிய நெடுந்தீவு மட்டுமன்றி, கிளிநொச்சிப் பிரதேசத்திலும் பணிபுரிந்த போது கடமை வீரராக யாவராலும் மதிக்கப் பெற்றவர் எம் அன்புக்குரிய ஆசான் "சின்னத்தம்பி மாஸ்ரர்". கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதே தன் இலட்சியமாய்க் கொண்டு வாழ்ந்த அதிபர் அவர்களை நீண்ட காலத்தின் பின்னர் 2006ம் ஆண்டு கொழும்பில் சந்தித்த போது, இருவருமே பெற்ற ஆனந்தம் அளப்பரியது.பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டபோது, அவருக்கு இருக்கும் சமுதாய அக்கறை கண்டு பெருவியப்புக் கொண்டேன். என்றும் மாறாத புன்னகையோடு, இன்றும் என் மனத்தில் இருக்கும் அதிபர் திரு. இராமநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி அவர்கள் இறைபதம் எய்தியமை கேள்வியுற்று துயரம் அடைந்தோம்.

காலம் என்பதன் கணக்கிற்குள் எல்லோருமே அடங்குவர் என்பதனால் நாம் எல்லோரும் தேற்றம் பெற்று அவரின் நற்கதிக்காய் பிரார்த்திப்போம்.

நான் பூஜித்த நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையாரையும், மற்றும் நான் பூஜித்த நெடுந்தீவு மேற்கில்உள்ள அனைத்துத் தெய்வங்களையும் துதி செய்து, கனடா,துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்கா தேவியை மனதாரவேண்டி, உயர்திரு. இராமநாமர் சின்னத்தம்பி அவர்களின் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கிறோம்.

**கனடா, துர்க்கேஸ்வரம் ஆலயப் பிரதமகுரு**
சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
**முன்னைநாள் பிரதமகுரு**
நெழுவினிப் பிள்ளையார் ஆலயம்
ஆலமாவனப் பிள்ளையார் ஆலயம்
கரமத்தை கந்தசுவாமியார் ஆலயம்
நெடுந்தீவு
30-03-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம் மிக்க பணியாளர்

தீவக மண்ணின் கல்விப் பரப்பில் தனது அர்ப்பணம் மிக்க பணியால் மாணவ இதயங்களை கவர்ந்து கொண்ட ஆசிரியர், அதிபர் எனது உறவினரான இரா. சின்னத்தம்பி அவர்களின்மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையுற்றேன்.

மனித உறவுக்கு சோகமான அனுபவங்களில் ஒன்றான மரணம், இறைவனின் உயிர்ப்பின் நம்பிக்கையில் வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அது அழிக்கப்படுவதில்லை.

கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று உண்டு. அது மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்து ஏற்றுக் கொள்வோமாக.

அவரது மனித நேயத்திலான சேவைக்கு நன்றி கூறி அவரின் இழப்பால் வருந்தும் மனைவி குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு இவர் நித்திய மகிழ்வில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றேன்.

இறைபணியில்
**ஆயர் இரா. யோசெப்**
**ஆயர் இல்லம்**
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Church of South India
Jaffna Diocese
(Inaugurated - 1947)

American Ceylon Mission
(founded in 1816)
அமெரிக்கன் சிலோன் மிஷன்

Bishop in Sri Lanka
The Rt. Revd. Dr. Daniel S. Thiagarajah Ph.D
அதி வண. கலாநிதி டானியல் எஸ். தியாகராஜா

## நெஞ்சில் நிறைந்தவர்

அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்களின் நினைவாக சில வார்த்தைகளை எழுதுவது எமக்குக் கிடைத்த பேறு. உயர் திரு. சின்னத்தம்பி அவர்கள் தன்னுடைய ஆரம்ப கல்வியை எம்முடைய தீவக அமெரிக்க மிஷன் பாடசாலையில் கற்றுப் பின்னர் வேலணை மத்திய கல்லூரியில் பயின்று, பட்டதாரிப் படிப்பை தென் இந்திய திருச்சபையின் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கற்று அரங்கேறினார். கல்வித் தகமையும் பல்துறை அனுபவமும் அவரை உயர்த்திற்று. சாதாரண ஆசிரியராகத் தமது சேவையை ஆரம்பித்த அடியான் விரைவிலேயே அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக் கல்வி அதிபராக மற்றும் சிறப்புப் பொறுப்பு மிக்க அதிபராகக் கடமையாற்றும் பாக்கியம் பெற்றார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்துக்கு முன்னால் அமைந்துள்ள பாலர் பாடசாலை அன்னாரது ஊக்குவிப்பாலும் பெருமுயற்சியினாலுமே கைகூடிற்று என்பதை வரலாறு அறிந்தவர்கள் மறக்க மாட்டார்கள். அது மட்டுமல்ல மேற்கூரிலும் இன்னுமொரு சிறுவர் பாடசாலை தொடங்கப்பட வேண்டும் என்பதில் முனைப்பாக நின்றவர். இது அவர் தென் இந்திய திருச்சபையினது கல்விச் சேவையை மதித்ததற்கான சிறந்த எடுத்துக்காட்டு.

அன்னாரது தொடர்பு நான் நெடுந்தீவில் குருவாகப் பணியாற்றிய போது ஏற்பட்டது. பின்னர் கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு நான் சென்றபோது அங்கும் அவரது தொடர்பு பேணப்பட்டது. மத்திய கல்லூரியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் சங்கத்துக்கு என்னை முக்கிய பொறுப்பிலமர்த்தி மக்களுக்கான சேவையை ஆற்றினார். நான் நெடுந்தீவில் பிரசைகள் குழுத் தலைவராக இருந்த போது திரு. சின்னத்தம்பி அவர்களும் ஒரு உறுப்பினராக இருந்து மக்களுக்கு அரும்பணியாற்றினார். கல்வி என்பது மக்களது வாழ்வின் அடித்தளம் என்று அடிக்கடி குறிப்பிடுவார். சிறந்த விழுமியங்களைக் கொண்ட பண்பான சமுதாயம் என்னும் தரிசன வீச்சையுடைய ஒருவராக வாழ்ந்த இந்தப் பெருமகனார் மூலம் உருவாக்கப்பட்ட சான்றோர் பலர் தீவகத்தில் மட்டுமல்ல, இந்நாடு முழுவதிலும் இன்னும் கூறின் உலகின் பல்பாகங்களிலும் அன்னாரது புகழ் மங்காமல் வாழ்கின்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நான் பேராயராக 2006 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட போது கொழும்பிலிருந்து என்னைத் தொலைபேசி மூலமாக வாழ்த்தி தனது அன்பையும் அக்கறையையும் பகிர்ந்து கொண்டது இன்னமும் எனது நெஞ்சில் நிறைந்துள்ளது. அன்னாரது மறைவு எல்லோருக்கும் குறிப்பாக தீவக மண்ணுக்கு மற்றும் என்னைப் பொறுத்தவரையில் தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண பேராயத்துக்கும் ஒரு இழப்பாகும். என்னுடைய திருச்சபை சார்பாக எனது அஞ்சலியைத் தெரிவிக்கும் வேளையில் அன்னாரது அருமைத் துணைவியாருக்கும், மகனுக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமரர் இராமநாதர் சின்னத்தம்பி என்றும் என் நெஞ்சில் நிறைந்தவர். அவரது ஆன்மா நித்திய இளைப்பாறுதலைப் பெறுவதாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

**பேரருள்மிகு அறிவர் டீ.எஸ்.தியாகராஜா**

**பேராயர், தென் இந்திய திருச்சபை - யாழ்ப்பாணம்**

**தலைவர், அமெரிக்கன் இலங்கை மிஷன்**

---


COLOMBO OFFICE
Bishop's Office
No. 17, Frances Road
Colombo - 6 (Sri Lanka)
RESIDENCE
Bishop's House
Vaddukkoddai - (Sri Lanka)

கொழும்பு பணிமனை
ஆயர் பணிமனை
இல. 17, பிரான்சிஸ் வீதி,
கொழும்பு - 6. (இலங்கை)
வதிவிடம்
பேராயர் இல்லம்
வட்டுக்கோட்டை (இலங்கை)

Tel : 021-225-0827 Fax : (+94) 011-258 2015 Mobile : (+94) 774 201 713 E-mail : bishopthiagarajah@gmail.com
web : www.csijaffnadiocese.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**J/DELFT R. C. LADIES COLLEGE**

DELFT

..03.04.2019......

## இரங்கல் உரை

எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய இரா.சின்னத்தம்பி அவர்களின் பூத உடலின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டேன். அவரைபற்றி வாழ்வை பற்றி பலரின் கருத்துப் பொதிந்த உரைகளை கேட்டபொழுது உயர்வானைப் போல உயர்ந்து நின்றார். தெளிவான சிந்தனையுடன், மிடுக்கான தோற்றத்துடன் வீரவேங்கை போல செயலாற்றிய அறிவாளர். "வாழுகின்ற மக்களுக்கு வாழந்தவர்கள் பாடமடி" என்ற கவிஞனின் கூற்று இவரின் வாழ்வில் துலங்கியது. எப்படியும் வாழலாம் என்ற இலக்கற்று வாழும் உலக மாந்தர் மத்தியில் இப்படித்தான் வாழுவேன் என்று, அமைதிய்ன வழியில் பிறர் வழ தன்னை மெடுகாக உருக்கி, தீவகம் கல்வியில் உயர்வடைய காரணமாய் இருந்த தியாகச் செம்மல், எமது பாடசாலை யாழ்/ நெடுந்தீவு றோ.க.ம.கல்லூரி என்று தரம் உயர வித்திட்ட எம் தீவக கொத்தணி அதிபரை நாம் என்றுமே மறக்கமாட்டோம்.

"தொன்றில் புகழேடு தோன்றவ" என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப வாழ்ந்த இரா.சின்னத்தம்பி என்ற எம் தீவகத்தின் ஒளிவிளக்கு எம் உள்ளங்களில் அணையாத தீபமாக என்று சுடல்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இவரின் ஆன்மா இறைவனின் சாந்தி பெற இறை அருள் வேண்டி நிற்கிறேன்.

சின்.ஜசிந்தாராணி

அந்தோனிப்பிள்ளை

***Sr.A.Jasintharani**- Principal*

*J/ Delft R.C. Ladies College, Delft*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Thavathiru
Vadivel Swamy

அரதுதெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக வெடிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!

# மகாதேவ ஆச்சிரமம்



Srimath
Ganeshanantha Swamy

Srimath Ganesanantha
Mahadeva Swamigal,
***MAHADEVA ASHRAMAM***
Jeyanthinagar,
Kilinochchi (Sri Lanka)
Peoples Bank, Kilinochchi A/C No. 13704

Regd No. SVP 104 / 44 of 29-10-1976

ஸ்ரீமத்
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி

31/03/2013

உ

சிவமயம்

## ஆசிச்செய்தி

நெடுந்தீவு, கப்பலில் செட்டிமார் வியாபாரம் மேற்கொண்ட இடம். சமயப் பெரியார்கள், கல்விமான்கள், பிறந்து வளர்ந்து தமிழையும், சைவத்தையும் மக்களுக்கு போதித்த கிராமம். அப்படிப்பட்ட கிராமத்திலே பிறந்து வளர்ந்து, யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி கற்று, முதல் மாணவனாகி, கற்ற கல்லூரிகட்கு பெருமை சேர்த்து, பல்கலைக்கழகம் பூர்த்தி செய்து, ஆசிரியராகி, அதிபராக, கொத்தணி அதிபராக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பணிபுரிந்த காலத்தில் கிளிநொச்சி குருகுலத்தில் சைவத்தையும், தமிழையும் மாணவர்கள் மத்தியிலே வளர்த்ததுடன், குருகுல நிர்வாகத்திலும் இணைந்து பன்முகப்பட்ட சேவையை செய்தவர் தான் திருவாளர் இரா.சின்னத்தம்பி அவர்கள்.

இவரடைய சேவையை வெளீ உலகம் அறியச் செய்ய வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. கடமையை செய். பலனை எதிர்பாராதே என்று கிருக்ஷ்ணபரமாத்மா அர்ச்சுனனுக்கு உபதேசித்தார். கடமையை சரிவர செய்பவனே மனிதன். இப்படிப்பட்ட உத்தமர்களை, உண்மையானவர்களை போற்றவேண்டும். ஆசிச்செய்தி கேட்டு வந்த அன்பர்கட்கு நன்றிகூறி பூரணப்படுத்துகின்றோம்.

**இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்**
**தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்**
**உருமிடி நாக(ம்) உரோணி கழலை**
**தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே**

- திருமூலர் திருமந்திரம் -

இறைபணியில்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சொரிகின்றோம்

மண்ணில்

26

02

1934



விண்ணில்

16

03

2013

எமது மன்றத்தின் ஆரம்பகால போசகராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

(அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, கல்வி அதிகாரி)

அலைகடல் தாலாட்டும் நெடுந்தீவின்
அரவணைப்பின் மடியதனில்
வந்துதித்த எம்மவனே......
எங்கள் வாழ்வதனை வழம்பெறவே
செய்திட்ட வாத்தியாரே !

உமது வழிநடத்தல்தானதனில்
நாம் இன்று வளம்பெற்றுப்
பார்போற்ற வாழ்கின்றோம்
என்றும் உம் நினைவுகள்
எமது நினைவுகளில் மறைந்திடாது


வாழும் நாள் தன்னில் நீர்
வளம் பெற வாழ்ந்திட்டீர்
இறந்திட்ட போதும் எம்
மனதினிலே வாழ்கின்றீர் எம்
வாத்தியாரே !

**ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி**

உங்கள் பிரிவால் வாடும்
பழைய மாணவர்கள் சார்பில்

இ.இந்திரராஜா, எஸ்.கணபதிப்பிள்ளை, க.மரியசீலன் - நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரஸ்வதி பூசை தினத்தில்
ஏடு தொடக்கப்பட்ட
குழந்தைகளுடன் "இராசி" அவர்கள்



மனைவி, மகனுடன்
"இராசி" அவர்கள்



தனது வழிகாட்டியும் ஞான குருவுமான எட்வேட் நவரட்ணசிங்கம்
அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து
துயருடன் நிற்கும் "இராசி" அவர்களின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா

பிறப்பு
26
02
1934



இறப்பு
16
03
2013

# அமரர் உயர்திரு.இரா.சின்னத்தம்பி

(நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர், கிளிநொச்சி மாவட்ட கொத்தணி அதிபர்,
ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும் நெடுந்தீவு விஷேட ஆணையாளரும்
அனைத்து இலங்கை சமாதான நீதிபதியும்)

கடமை கண்ணியம் ஆளுமை
கொண்ட அதிபரின் செயற்பாடுகள்
காலத்தால் அழிக்க முடியாதவை.

அவரின் நெறித்தோன்றலில்
உருவாகிய விழுதுகள்
ஊரில் மட்டுமில்லாது
உலகெங்கும் வேரூணறி
விருட்சங்களாய் நிற்கின்றனர்.

அன்னார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
தான் பிறந்த பயனை
தனது மண்ணுக்கும் மக்களுக்கும்
குறைவின்றி நிறைவேற்றினார்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினருக்கு
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடாவும்
தங்களோடு சேர்ந்து துக்கத்தைப்
பகிர்ந்து கொள்கிறது

ஓம்.சாந்தி ஓம்..சாந்தி ஓம்... சாந்தி

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயர் நெடுந்தீவுக்கு வந்தபோது அவரை வரவேற்று
அழைத்துவரும் "இராசி" அவர்கள்





கொத்தணிப் பாடசாலைகளின் பரீட்சார்த்த வெற்றி பற்றி "இராசி" அவர்கள் கொத்தணி மகாநாட்டில் உரையாற்றும் காட்சி. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்கவின் பாராட்டைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1972 இல் நெடுந்தீவு மகா வித்தியாலயம் வெள்ளி விழா கொண்டாடிய போது
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் ரஞ்சித் ருபேரு
அவர்களுடனும் பாரியாருடனும் "இராசி" அவர்கள்



1972 இல் நெடுந்தீவு மகா வித்தியாலய ஆசியர் குழாத்துடன்
எமது அதிபர் "இராசி" அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

26

02

1934



உதிர்வு

16

03

2013

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

(கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, சமாதான நீதவான்)

காலனவன் கணக்கெடுப்பின்
கால வரையறைக் குறிப்பினில்
கானம் இசைத்த கல்வி மானே உந்தன்
காலம் தான் அவன் கையில் வந்ததுவோ !

கண்ணீரில் உறவுகள் உறைந்திட
கவலையால் எம்முள்ளங்கள் கலங்கிட
கல்வியில் அணையா விளக்கொன்று
கணப்பொழுதில் அணைந்து போனதே !


தேசத்தின் அறிவுச் சுடர் தீபம்
பாசப் பிணைப்பில் இருந்து அணைக்கப்பட்டதே
நேசமுடன் நீட்டும் மலர் கரமதின்
வாசம் பறிக்கப்பட்டு சுவாசம் நிறுத்தப்பட்டதே !

தீவின் மைந்தனாக, எம் செல்வங்கள் கற்றிட
தீரமுடன் ஆசிரியர், அதிபர், கொத்தணி, கோட்டக்கல்வி அதிகாரியாக
தியாகமுடன் கல்விப் பணிதனை கஸ்டமான காலத்திலும்
இஸ்டமுடன் வழங்கிய வள்ளல் இன்று மறைந்தாரோ !


உண்மை உறங்கியதாக உணர்கின்ற நாம்
உந்தன் ஆன்மா இறை சன்னிதானம் அடைய
உறவுகள் மன ஆறுதல் பெற
உள்ளத்தால் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/நெடு.மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி அப்புஜி (வே.கதிரவேலு)
அவர்களின் ஞாபகார்த்த
உரை நிகழ்த்தும் "இராசி" அவர்கள்




கிளிநொச்சி கொத்தணி அதிபர்
காரியாலய வாயலில் நிற்கும்
"இராசி" அவர்கள்



நெடுந்தீவு சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க நிகழ்வில்
உரையாற்றும் "இராசி" அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால வரலாறு அமைதி கொள்கிறது!

# அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

(முன்நாள் கோட்டக்கல்வி அதிகாரி) நினைவாக

அரசியல், குடியியல் கற்கைகளில்
சுயமரியாதை நாற்றுகளை
எம்முள் நடவு செய்த,
ஆசானே!

உங்கள் அடையாளங்களால்
இங்கும், உலகெங்கும்
விருட்சங்கள் வளர்ந்து
அடையாள விதைகள்
விதைக்கப்படுகின்றதே!

தீவு, வன்னி,
நீங்கள் கால்பதித்த தடங்கள்....
கால வெளிச்ச கலங்கரை விளக்குகள்,
தேசியம், தமிழரசு, சுயநிர்ணயம், கம்யூனிசம்
உங்களோடு கருத்தாயும்
தகுதிகள், வயதுகள் கடந்த
தேடல்கள் எத்தனை! எத்தனை!

முற்போக்கு சிந்தனை
வெளிச்சத்தை விதைத்த
கால வரலாற்றைக்காட்டிய
சின்னத்தம்பி ஆசான்
வரலாற்றுக்காலமாகிப் போனார்

ஓ.... தோழமை தந்த ஆசானே!
உங்கள்
நினைவுச் சூரியக்கதிர்கள்
எம் கண்களுள்
பனிப் பூக்க வைக்கிறதே!

பழைய மாணவர்கள்,
**முற்போக்கு வாலிப இயக்கம்**
**தலைவர், கரைச்சிப் பிரதேச சபை (கிளிநொச்சி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்போடு அரும்பணியாற்றிய ஆசான்

அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள் தனது நீண்ட காலக் கல்விச் சேவையில் ஆசிரியராய், அதிபராய், கொத்தணி அதிபராய், கல்விப் பணிப்பாளராய் அரும்பணியாற்றியுள்ளார். பேராசான் அமரர் எட்வேட் நவரத்தின சிங்கம் அவர்களின் நல்வழிகாட்டலில் நெடுந்தீவின் கல்வி எழுச்சிக்கு அளப்பரும் சேவையாற்றி குருவின் பணிக்கு நிறைவும், விரிவும் விரைவும் வழங்கியமையே உண்மை வரலாறாகும். திரிகரண சுத்தியோடு மக்கள் சேவைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அமரர் இரா.சின்னத்தம்பி நெடுந்தீவின் "சமூகசோதியாய்ப்" பாராட்டப்பட்டதில வியப்பில்லை. ஓய்வு நிலையிலும், அவர் ஓய்ந்திருக்கவில்லை. மக்கள் வளமாக வாழ வழிகாட்டும் முன்னேற்ற முகவராக மிளிர்ந்தார். என்பதே உண்மை வரலாறு.

எனக்கும் அமரர் சின்னத்தம்பிக்கும் நெருங்கிய நட்பும் தொடர்பாடலும் அரை நூற்றாண்டுக்கும் மேலானது. ஊரவர் உறவினர் என்பதுக்கும் மேலாக நாங்கள் இருவரும் அமரர் நவரத்தினசிங்கம் அவர்களின் மனிதநேயப் பண்பாட்டுப் பாசறையில் உருவானவர்கள் என்பதே முக்கிய காரணி எனலாம்.

இருவரும் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தோம். நான் வயதில் மூத்தவன். நான் பட்டப்படிப்பை 1958 ஆம் ஆண்டில் முடித்து வெளியேறியபோது எனது ஆங்கில இலக்கியப் பாடப் புத்தகங்களை அவருக்குக் கையளித்து வந்தேன். அவர் எனது புத்தகங்களில் நிறைய விளக்கக் குறிப்புக்கள் எழுதிப் படித்ததை வியந்தேன். ஆங்கில பாடத்தில் அவருக்கு அதிகவிருப்பமும் திறமையும் இருந்ததைக் கண்டு மகிழ்ந்தவரில் நானும் ஒருவன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்புளோமா கற்றலின் போது அவர் ஆங்கிலத்தையே பயிற்றும் பாடமாகத் தெரிவு செய்து அதில் விஷேட சித்தியும் பெற்றார்.

எங்கள் குரு அமரர் எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்கள் 01.12.1972ல் அமரரானார். அடுத்த ஆண்டில் அவரது "நினைவு மலர்" வெளியிடப்பட்டது. அம்மலரின் அமரர் இரா.சின்னத்தம்பி அவர்களின் ஆளுமைச் சிறப்பை அளவீடு செய்ய ஆதாரமாக அவர் ஆங்கிலத்தில் எழுதிய அஞ்சலி உரையை மீழ்பதிப்புச் செய்வது மிகப் பொருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Person who served us most

Delft, oh!. It was a place for punishment to our Government Departments ; inconvenient island to work for 'self – convenice seeking'; idle place fo-'actives'; poor island for 'fortunate's'. But to Navaratnasing - ham, popularly known as 'Navam', it was a place to work, it was an island to serve, it was a piece of land to develop and it was a place to teach for eighteen long years.

He came to our island in 1946. Since then, he was no more an outside. He was a friend of every home ; a teacher of every youth; a pioneer of every development; an architect of every one. To any outsider who thought of visiting Deflt, there was also one Navaratna - singham to receive him and to look after his interest ; to any local man there was the 'influential master' to help him. To all his pupils he was the proverbial friends. To his teacher his teachers he was father like in h/s advices and friendlike in his movements. If it was a function in one of his associate's home, oh! He was the hero of the day,

He was the embodiment of various lessons to his pupils and staff. With his simple half – sleeve shirt and verty, he taught simplicity to the true sense of the word. The appearance of the Head Master of the old Junior school housed in temporary 'cad jan Koddil' and the principal of the new Mahavid - yalayam housed in a spacious and beautiful buildings was the same. Changes occurred in every aspect but not in his philosophy of life in the school. He respected 'man' but not the 'rank'

Sense of duty is yet another lesson he taught by way of his living. Many a time he missed the once-a day service launch and crossed the sea of Delft in 'Katamarams' to keep in touch with the Department of Education. It was well known at least to the Examination Department how he crossed the rough sea when a storm was expected and was about to risk his own life, in a simple fishing boat to be punctual at an examination centre. When there were Government servants seekining aero plane service to discharge their duties, there was a school master in an isolated island, in the name of Katamarams and fishing boats to discharge his dutues.

His life is Gandhian in character with Garibaldian boldness. He did every thing in the name of God. He



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

thought twice before he plunged into any action. Such actions will always be successful.

Some get pleasure in 'drinks'; some get pleasure in 'smoke'; yet some others get pleasures in cinema etc. But these pleasures did not attract Navam. The money which others smoked and drank was spent on educating several intelligent youths. When he started educating them, the only relationship he had with the youth was their intelligence. His keen observations on every pupil made many mischievous truants Government servant. Had he limited his relationship with his pupils within the four walls of the schools, the mischievous truant might have been turned out to be law- breakers rather than Government servants. Their intelligence would have been more concentrated on law breaking than on studies. He presumed himself a s a missionary in the god's mission of teaching and hence he was true to his job. As *such him name would* certainly go among the names of the galaxy of great school masters.

When we the people of Delft, look back our development and advancements we come of a conclusion that the Mahavidyalayam has played a great role in them. So who was responsible for it? Was it not the head of the school who steered it towards this direction? Indeed he was the silverliving in the clouded atmosphere of Delft in latter forties and early fifties. Hence during that period of 18 years, he was the hero of our literature, the leader of our literature, the leader of our movements, the beacon of our English education and his name will certainly go down into our history and his services will be ever green in the memory of the faithful people of Delft.

**R.Sinnathamby** B.A., Dip.in.Ed
Principal-Delft Mahavidyalayam

"நீ வரும் போது இருந்ததைவிட இந்த உலகைச் சிறந்த இடமாக விட்டுச்செல்" என்னும் வாழ்வியல் தத்துவத்தை தன் வாழ்வால் மீள வலியுறுத்தி வாழ்வித்து வாழ்ந்த என் அன்பு நண்பருக்கு அஞ்சலி செலுத்தி அவர் பிறவாப் பேரின்ப நிலைபெறப் பிரார்த்திக்கின்றேன்.

அமரர்.இரா.சின்னத்தம்பி அவர்களின் நினைவு பேணப்பட ஆவன செய்வதை அன்பு மாணவர்தம் கடன் என மேற்கொள்வர் என்பதில் ஐயமில்லை.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்.
பண்பு பாராட்டும் உலகு"

R.S.நடராசா
முன்னாள் அதிபர்- பலாலி ஆசிரியர் கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பன் அமரர் திருவாளர் இரா.சின்னத்தம்பி B.A. S.L.E.A.S. JP

அமரர் இரா.சின்னத்தம்பி அவர்கள் எனது ஆரம்பப் பாடசாலை ஆகிய நெடுந்தீவு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் வந்து சேர்ந்தார். அப்பாடசாலை அதிபர் அமரர் சுவாமிநாதர் என ஊரவர்களினால் அழைக்கப்பட்ட இராமநாதனினதும் சக ஆசிரியர்களினதும் அருங்கல்வி ஊட்டலினாலும் மாணவனின் திறமையினாலும் அவ்வாண்டே அப்பாடசாலையின் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்.

அவ்வாறு அவர் சித்தியடைந்ததும் தனது இடைநிலைக் கல்வியை வேலனை மகாவித்தியாலயத்தில் உள்ளக மாணவனாகச் சேர்ந்து தொடர்ந்தார். இருந்தாலும் அவர் பின்னர் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலேயே சேர்ந்து படித்து தனது சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தி எய்தினார். அவரின் தகப்பனார் இராமநாதர் நெடுந்தீவு கிழக்கில் ஒரு விவசாயி அத்துடன் முருக்கன் கறுவல் ஆலமரச் சந்தியடியில் ஓர் கூப்பன் கடையும் நடாத்தி வந்தார். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் மட்டுப்படுத்தப்பட்ட அரிசி, கோதுமை மா போன்றவற்றை கட்டுப்பாடான அளவிலும் விலையிலும் விநியோகிப்பதில் இக்கடைகள் அளப்பரிய பங்காற்றின.

சிறிது வசதியுள்ள குடும்பமாகையால் தனது ஒரேயொரு ஆண்மகனை மேலும் படிக்க வைக்க வேண்டும் என பெற்றோர் விரும்பினர். அதன் பொருட்டு மகாவித்தியாலய அதிபர் அமரர் சி.வி.எட்வட் நவரட்ண சிங்கத்தின் ஆலோசனையை நாடினார். அவர் உடனடியாக ஆவன செய்து இந்தியா, பெங்களுர் சர்வகலாசாலைக் கல்லூரியில் பட்டப்படிப்புக்காகச் சேரச் செய்தார். அங்கு அவர் இரு வருடங்கள் படித்து விட்டுப் பின்னர் அடுத்த இரண்டாண்டுகளை சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்து முடித்து கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் பட்டப்படிப்பை முடித்து ஊர் திரும்பியதும் சிறிது காலம் உதவி ஆசிரியராக நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் பணியாற்றினார். பின்னர் திரு.ந.குருநாதி என்பவர் அதிபராய் இருந்த காலத்தில் உதவி அதிபராயும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.குருநாதி அதிபர் பதவியிலிருந்து விலகியதும் அமரர் சின்னத்தம்பியே பதவியேற்றார். இவரே நெடுந்தீவு பாடசாலைகளின் கொத்தணி ஆசிரியராகவும் பதவியேற்றார். பின்னர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு அதிபராகச் சென்றார். இவ்வித்தியாலயத்திலே சப்த தீவு மாணவர்களும் கல்வி கற்றனர். இவர் அங்கு திறம்படச் சேவை செய்து சகலரினதும் பாராட்டைப் பெற்றார். அங்கிருந்து கல்விப்பணிப்பணிப்பாளராக பதவியேற்று மீண்டும் சப்த தீவுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவ்வமையம் நெடுந்தீவு சமூகப் பணிகளிலும் கூடிய ஈடுபாடு உடையவராக, அழியும் தறுவாயிலோ அல்லது அழிந்தோ இருந்த பொதுச்சேவை கூட்டுறவுச் சங்கத்தை புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைத்து இயங்கச் செய்தார். அது அவ்வளவு பலனைக் கொடுக்காமையினால் நெடுந்தீவுக்கென ஒரு தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிக்க அரும்பாடுபட்டார்.

உள்ளூர் யுத்தம் உச்ச நிலையை அடைந்த போதே நெடுந்தீவு மக்களுக்கான உணவுப் பங்கீட்டுப் பொருட்களை நேரடியாகவே பெறும் முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிகளையும் கண்டார். நெடுந்தீவில் உள்ளூராட்சி மன்றம் தேர்வு நடைபெறாது இயங்கா நிலையிலிருந்ததனால் மக்கள் அதன் சேவையைப் பெறமுடியாதிருந்தது. அரசினர் இவரை நெடுந்தீவின் விசேட ஆணையாளராக நியமித்து அருந்தொண்டாற்ற வைத்தனர்.

இவர் ஓர் சைவ சமயப் பற்றாளரும் கூட. இவரின் தகப்பனாரால் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்த ஆலமாவனப் பிள்ளையார் ஆலயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இளம் சமுதாயத்தினரைக் கொண்டு ஒரு உகந்த நிர்வாகத்தையும் ஏற்படுத்தி திருப்திகரமான முறையில் இயங்கச் செய்தார். இவரது பாரியாரின் குலதெய்வமான நெழுவினி விநாயகரின் ஆலயத்திற்கும் தொண்டுகள் புரிந்துள்ளார்.

நெடுந்தீவில் பின்தங்கியுள்ள பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தின் பொருட்டு கனடாவிலும் பிரித்தானியாவிலும் உள்ள அன்பர்கள் சின்னத்தம்பியின் மூலமே பணம் அனுப்பி உதவிகளை மேற்கொண்டுள்ளனர். எவர் எப்படித்தான் காவடி எடுத்தாலும் நெடுந்தீவு கடற் பிரயாணத்தைப் பொறுத்தவரையில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை இரங்க வைக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 ஆம் ஆண்டில் கடற் போக்குவரத்து மோசமுற்றிருந்த காலகட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட புனருத்தாரண வேலைகளைச் செய்யும் மூன்று அரசசார்பற்ற நிறுவனங்களைப் பேட்டி கண்டு நமது கடற் பிரயாணத்திற்கு உதவுமாறு கேட்டபோது அவற்றில் இரண்டு ஓர் திட்ட அறிக்கையை அரசாங்க அதிகாரியின் சிபாரிசுடன் சமர்ப்பித்தால் தாங்கள் ஓர் பிரயாணப் படகைச் செய்து தருவதாகக் கூறினார். அதன்படி அவர்களின் விண்ணப்பப் படிவங்களை தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தினோம். ஓய்வு நிலையில் உள்ள இரா.சின்னத்தம்பிக்கு நன்கு பரிச்சயமான ஒருவரே அப்போது யாழ்ப்பான அதிபராக இருந்தார்.

இரா.சின்னத்தம்பி மூலம் அரசாங்க அதிபரிடம் ஓர் நேரமெடுத்து சின்னத்தம்பியும் நானுமாக திட்ட அறிக்கையுடன் அரசாங்க அதிகாரிகளைக் காணச்சென்றோம். அதற்கு சிலநாட்கள் முன்னதாகத்தான் நெடுந்தீவு பிரயாணி ஒருவர் படகிலிருந்து தவறி விழுந்து காணாமல் போயுள்ளார். இதுபற்றியும் அரசாங்க அதிபருக்குக் கூறி எங்களது தார்பரியத்தைக் கூறினோம். அதற்கு அவர் ஒரு பிரயாணி மட்டுமல்ல படகுடன் அத்தனை பிரயாணிகளும் கவிண்டாலும் கவலையில்லை எனக் கூறி அறிக்கையினைப் பார்க்காமலே திருப்பித் தந்துவிட்டு என்னை வெளியே போகும்படி கூறிவிட்டு மறைந்த சின்னத்தம்பியுடன் ஏதோ சம்பாசனை நடத்திவிட்டு வெளியே விட்டார்.

ஓர் மாகாணத் தலைவரின் கூற்றும் செய்கையும் அப்படியானால் வேறு யாரிடம் நாங்கள் உதவி கேட்கமுடியும். அவர் அப்படிச் செய்தது மட்டுமல்லாமல் இப்படியான அறிக்கைகள் வந்தால் சிபாரிசு செய்ய வேண்டாம் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிகாரிக்கு கட்டளையும் போட்டார்.

வெஸ்ற் மினிஸ்ரெர் அரசையே பின்பற்றுகிறோம் எனக் கூறும் அரசாங்கம் ஓர் அறிக்கையை ஏற்றுக் கொண்டு அதனைப் பரிசீலிக்க மறுத்ததே விந்தையானது. மாட்சிமைதங்கிய மகாராணி கூட ஓர் அறிக்கையை சமர்ப்பித்தால் அதை ஏற்றுக் கொண்டு கீழதிகாரிகளுக்கு பரிசீலனைக்கு அனுப்புவார். அப்படியான அரசியலைப் பின்பற்றும் எமது அரசு ஓர் படகில் உள்ள அத்தனை பேர் கவிண்டாலும் பரவாயில்லை எனக் கூறியது ஓர் மேலதிகாரியின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகின்றது. இதை அரசாங்க அதிபரின் நண்பராகிய சின்னத்தம்பியும் பொறுத்துக் கொண்டார்.

இது நடந்து சில மாதங்களின் பின்னரே குறித்த அரசாங்க அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்ட இரண்டு இந்திய மீன்பிடி ரோலர்களை நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்திற்குக் கையளித்தார். இவற்றை நெடுந்தீவு பிரயாணிகளின் போக்குவரத்திற்கு பிரயோசனப்படுத்தும்படி கூறினாராம். இப்படகுகளை நெடுந்தீவு துறைமுகத்தினுள் வரவேற்கும் போது வெடிகளின் செலவுகளே பல இலட்சம் ரூபாவாகும். இவற்றைக் கையேற்றவர்கள் அவற்றை ஓட வைக்க எதுவித சிரமமும் எடுக்காமல் அவை அழிந்து போயின.

அமரர். சின்னத்தம்பியின் பிந்தைய வாசஸ்தலம் பெரியதுறைப் பிரதேசம். இங்குதான் கி.பி 1365 இல் தனிநாயக முதலி தனது பண்ணையாட்கள், உறவினருடன் வந்து கால் பதித்தார். மேழிக்கொடியுடன் சப்த தீவுகளையும் இங்கிருந்துதான் அரசாண்டார். அவருடன் வந்தவர்கள் யாவரும் ஓர் கனவான் ஒப்பந்தப்படி சாதிப்பாகுபாடற்ற ஓர் சமரச வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர். கி.பி.1620 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கீசரே சமய மாற்றம் பொருட்டு மீண்டும் சாதிப்பிரிவினையை உண்டாக்கினர். தனிநாயக முதலி மறைந்தாலும் அவருடைய அருளாட்சி அவர் கொண்டு வந்த விநாயகர் விக்கிரகம் மூலம் இன்றும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. விநாயகர் ஆலயம் முதலில் பூமுனையில் இருந்தது. தற்போது இது நெழுவினியிலுள்ளது.

ஒருவனுடைய மரணத்தின் போது அவனது தூல உடம்பு மட்டும் தான் நீங்குகின்றது. அவனது ஆத்மா சூக்கும உடலுடன் தங்கி சஞ்சாரஞ் செய்கின்றது. அவ்வாறே அமரர். சின்னத்தம்பியின் ஆத்மாவும் பெரியதுறையிலேயே சஞ்சாரஞ் செய்யுமென்பது நம்பிக்கை. அது மீண்டும் ஓர் தூல உடம்பையெடுத்து அவர் விட்ட எஞ்சிய பணிகளையும் நிறைவேற்றும் என்பது நம்பிக்கை. இதுவே இந்து மதத்தினதும் புத்த மத்தினதும் கோட்பாடாகும்.

*சாந்தி! சாந்தி!!*

**கு.குணநாயகம்-பொறியியலாளர்**
நெடுந்தீவு நடுக்குறிச்சி
05.04.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி அதிகாரி அமரர் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள்**

# மனிதருள் மாணிக்கம்.

நீலக் கடலனங்காள் நித்திரையுங் கொள்ளாமல்
கோலத் திரைக்கரங்கள் கொண்டினிது தாலாட்டப்
பாலைப் பொழிந்துவரு பசுவினங்கள் பவனிவர
வாலைச் சுழற்றிவரு வான்புரவி மீட்டநிரை
கோல்மன்னர் வீற்றிருந்த கொலுவைக் குறித்துவர
வானோர் பொதிகைமலை மன்னுதென்றல் மாமதுரைத்
தேனார் செழுந்தமிழின் தேமதுரத் தீஞ்சுவையை
அட்ட திசையெங்கும் அள்ளிப் பரப்பிவரு
மதகுருவர் கன்னியர்கள் மன்னுலகப் பேரறிஞர்
மதுர கவிவாணர் மணிமணியாம் ஆசிரியர்
ஏர்பேணி ஊர்காக்கும் இனிய கம வேந்தர்
பார்பரவுந் தொழில்நிபுணர் பலதிட்ட நுட்பவியல்
கற்றுத் தெளிந்த கலைஞர் தியாகிகளைப்
பெற்றினது தந்த பெருமையதைக் கண்டுவக்கத்
தேவர்களும் கண்ணிமைக்கா நிற்குந் திருவுடைய
தீவகத்திற் கெலாந் திலகமாய் நிற்குமூர்
பூவுலகத்தோர் போற்றுமூர் பொன்னார் நெடுந்தீவே.

எனப் பலவாறாகப் புகழ்ந்து பாடப்படும் பெருமை பெற்ற தீவு நெடுந்தீவு.

பசுத்தீவு, பால்தீவு என்றும் சிங்களத்தில் "ஔசத லோகய" என்றும், மருந்து மாமலை எனவும் பலவாறு அழைக்கப்பட்ட தீவு.

இத்தீவின் கிழக்குப் பகுதியில் சிறந்த விவசாயியாகவும், பலகால்நடைகளின் உரிமையாளராகவும் - அரசினரின் உத்தரவு பெற்ற வியாபாரியாகவும் திகழ்ந்தவர் திரு. இராமனாதர் அவர்கள். இவரின் அருந்தவப் புதல்வரே அமரர் அனைவரின் அன்புக்கும் உரிய திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள்.

நெடுந்தீவின் வரலாற்றை எழுத முனைபவர்கள் திரு.இரா.சின்னத்தம்பி அவர்களின் சமய, சமூக, கல்விப் பணிகளை எழுதாது இருக்க முடியாது.

இளமையிலேயே சிறந்த அறிவும், திறனும், ஆற்றலும் கொண்டு விளங்கினார். இளமையிலே புலமைப்பரிசில் பெற்று வேலணை மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் கல்வி பயின்றார். இந்தியாவின் பெங்களூரிலும், சென்னையிலும் உயர்கல்வி கற்றுப் பட்டதாரியானார்.

இந்தியாவில் கல்வி கற்ற பொழுது, கர்மவீரர் காமராசர், அரசியல் மேதை இராசாஜி, சீர்திருத்தச் செம்மல் ஈவே பெரியார். அறிஞர் அண்ணா போன்றவர்களிடம் காணப்பட்ட ஆற்றலும் அரும் பெரும் குணங்களையும் தன் வாழ்வில் கடைப்பிடித்தது மட்டுமன்றி தன்னிடம் கல்வி பயின்றவர்களிடம் எடுத்துக்கூறி வாழ வழிகாட்டிய நல்லாசான்.

"மனிதன் தனித்து வாழமுடியாத ஒரு சமூகப் பிராணி" என்ற கிரேக்க தத்துவாசிரியர்களின் வாழ்வியலுக்கு ஏற்ப "சமூகமே நான், நானே சமூகம்" எனத் தனது ஆசிரியப் பணியை மாற்றியமைத்தவர்.

"தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு

சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என வாழாது சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பணிபுரிவதிலே சேகனாய் விளங்கினார். தனக்கே உரித்தான அர்ப்பணிப்பான போதனை, மற்றவர்களும் தன்னைப் பின்பற்ற வைக்கும் குணாம்சம், காலத்தை வீண் விரயம் செய்யாமை, பட்டம் பதவிகளுக்கு விலை போகாமை, பணத்தை எதிர்பார்த்து பணியாற்றாமை, ஏழ்மையான வாழ்வு போன்ற சிறப்பான குணாம்சங்களை இவருடன் பணியாற்றிய எம் போன்றவர்களால் காண முடிந்தது.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயர்நோக்குடன் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர்களாக விளங்கிய கௌரவ V.A கந்தையா, கௌரவ பண்டிதர் [illegible]இரத்தினம், இன்றைய அமைச்சரான கௌரவ டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அங்கிள் [illegible]சிவதாசன் ஆகியோருடன் இணைந்து அளப்பரிய அன்புப்பணிகள் பல ஆற்றினார்.

"எல்லோரும் இன்புற்று வாழ்வதன்றி வேறொன்றும்
அறியேன் என்பதற்கு ஏற்ப - பாரதியாரின்
"உற்றவர் நாட்டவர் ஊரார் - இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை.'

பக்கத்திருப்பவர் துன்பம் - தன்னைப்
பார்க்கப் பெறாதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருந்தி உலகோர் - நலம்
உற்றிடு வண்ணம் உழைப்பவர் யோகி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ற வள்ளுவன் வாக்குக்கு ஏற்ற வளமான வாழ்வு.

இல்லறத்தின் நல்லறம் எல்லாம் நிறைந்து காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்த அன்பு மனைவி, பாரிஸ் நகரில் வளமுடன் வாழும் பாசம் நிறைந்த மகன் குடும்பம், கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ்ப் பிரிவுத் தலைவராகப் பணியாற்றும் சகோதரி மகன் மா.கணபதிப்பிள்ளை அவர்கள் குடும்பம், தபாலதிபராகக் கடமையாற்றிய திரு பேரம்பலம் குடும்பம் மற்றும் பாசமும் பண்பும் கொண்ட மைத்துனர், மச்சாள்மார், சகோதரிமார் இவ்வாறு உறவினரும், சுற்றமும் அயலாரும் அன்பு செய்ய வேறு என்ன வேண்டும்.

இறுதிக் காலத்தில் சிறிது சுகவீனம் உற்று இருந்தாலும் பெருமை யுடனும் புகழுடனும் வாழ்ந்து மறைந்தார்.

அன்பும், அறிவும், அறமும், பண்பும்
பாசம் கொண்டு சிறந்த கடமை வீரனாகத்
திகழ்ந்த அமரரை இழந்து துயருறும் அன்பு மனைவி,
ஒளிமயமான எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டிய
பாசமிகு தந்தையை இழந்து தவிக்கும் மகன்,
மருமக்கள், அன்பு நெஞ்சத்தைப் பிரிந்து
அல்லலுறும் உறவினர், உற்றார், நண்பர்கள்
சுற்றத்தார் அனைவருக்கும் எம் ஆழ்ந்த
அனுதாபங்கள். ஆறாத் துயரில் ஆழ்ந்துள்ள
அனைவருடனும் இணைந்து ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதோ?
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ?
தீயே உனக்கொரு நாள்
தீமூட்டிப் பாரோமா?
தெய்வமே உன்னை நாம்
தேம்பி அழவையோமா?

அன்புடன்

கலாபூஷணம் புலவர் அரிய நாயகம் J.A
தலைவர் - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் தவப்புதல்வன்

"தோன்றிற் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய இருமரபும் தூய தனிநாயக முதலி பரம்பரையில் தோன்றிய நெடுந்தீவின் தவப்புதல்வர் அமரர் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும், விஷேட ஆணையாளராகவும், சமாதான நீதவானாகவும், சமூக சேவையாளனாகவும் பணிபுரிந்து மக்கள் மனதில் மங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட மாமனிதனாக விளங்கியவர்.

இவரிடம் யான் 1972ம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டேன். பாடசாலைக் கல்வியுடன் சிறந்த பண்புகளைப் போதிக்கும் ஒரு போதகராகவும் இவர் விளங்கினார். மகாவித்தியாலய அதிபராகப் பணிபுரிந்த இவர் பாடசாலையின் செயற்பாட்டை பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்ற இரு சக்கரங்கள் மூலம் இயக்க வேண்டுமென்று எண்ணி அதனை இயக்கி பெருவெற்றியும் கண்டார்.இவருடைய காலத்தில் நெடுந்தீவு மகாவித்தியாலய வெள்ளிவிழா நடைபெற்றது. ஊர் மக்கள் உதவியுடன் நடாத்தப்பெற்ற இப்பெருவிழாவைச் சிறப்புற நடத்திய பெருமை அன்னாரையே சாரும். வெள்ளிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் யான் எழுதிய *"சங்கே முழங்கு"* என்ற தலைப்பில் எழுதிய கவிதையில்

"மாவுறைதீவின் மகன் சின்னத்தம்பியும்
தாயகம் சேர்ந்தனர் கும்மியடி - அவர்
பாரினில் யாமென்றும் பண்புடன் வாழப்
பழக்கி வைப்பாரென்று கும்மியடி"

என்று எழுதிய கவிதை வரிகள் இன்று என் நினைவிற்கு வருகின்றன. பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே என்பதற்கமைய தான் பிறந்த நெடுந்தீவு மண்ணையும் நெடுந்தீவு மக்களையும் மிகவும் நன்றாக நேசித்த இவர் நெடுந்தீவின் விஷேட ஆணையாளராக பணி புரிந்தபொழுது இவரின் சீரிய சிந்தனைகளையும், நாட்டுப்பற்றினையும் யான் நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

எதற்கும் துணிந்த இப்பெரியார் நெடுந்தீவு மக்களின் மனதைப் புண்படுத்திய **"வாடைக்காற்று"** நாவலை ஆயிரக்கணக்கான நெடுந்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முன்னிலையில் தீயிட்டுக் கொழுத்திய சம்பவம் இன்றும் என் மனத்திரையில் காட்சி அளிக்கிறது.இவரின் பெருமுயற்சியால் செங்கை யாழியான் எழுதிய **"வாடைக்காற்று"** நாவலை வெளியிட்ட வீரகேசரி நிறுவனம் பின்பு நெடுந்தீவு மக்களிடம் மன்னிப்புக் கோரியதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

1979ம் ஆண்டு யூன் மாதம் 9ம், 10ம் திகதிகளில் தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாட்டை யாம் நெடுந்தீவு மகாவித்தியாலயத் திறந்த வெளியரங்கில் நடத்தினோம். தமிழ் நாட்டு அறிஞர் கலாநிதி. ஆறு. அழகப்பன் அவர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டை அமரர் அவர்கள் விழாக்குழுத் தலைவராக இருந்து சிறந்த முறையில் நடாத்தி பலரதும் பாராட்டினைப் பெற்றுக் கொண்டார்.

நெடுந்தீவின் அத்தியாவசியத் தேவைகள் கருதி அமரர் அவர்கள் தலைமையில் யானும் என்னுடன் சேர்ந்த பல நண்பர்களும் பல தடவைகள் அன்றைய காவலூர் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களிடம் சென்று முறையிட்டுள்ளோம். இவற்றில் நெடுந்தீவின் குடிநீர் பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சனை ஆகியன உடனடியாக தீர்த்து வைக்கப்பட்டமைக்கு இவரே முக்கிய காரண கர்த்தாவாக விளங்கினார்.

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோவில் அறங்காவல் குழுத்தலைவராகஇருந்த அமரர் அவர்கள் கோவில் திருப்பணிகளைச் செவ்வனே செய்து முடித்ததுடன் 11.07.2002ல் மஹாகும்பாவிஷேக பெருவிழாவைக் கண்டு, பெரு மகிழ்வுற்றதுடன் கோவில் அருகாமையிலுள்ள தனக்குச் சொந்தமான காணிகளை எல்லாம் கோவிலுக்கே எழுதிக் கொடுத்து பெருமகிழ்வுற்றார். யான் நெடுந்தீவில் பணிபுரிந்த காலத்தில் **"வெடியரசன்"** என்ற திரைப்படத்தை தயாரிக்க எண்ணினேன். இதற்காக அவரை அணுகியபோது "வெடியரசன்" தொடர்பான பல தகவல்களைத் தந்துதவினார்.

**"பெருமையுடையவர் ஆற்றுவார் - ஆற்றின்**
**அருமையுடைய செயல்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இப்பெரியாரின் மறைவு எல்லோருக்குமோடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வைத்திலிங்கம் இராஜேஸ்வரன்**
முன்னாள் தலைவர்
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பேரன்பிற்கும், மதிப்புக்கும் உரிய அதிபர்

# உயர் திரு. இரா. சின்னத்தம்பி அவர்களின்

## எதிர்பாராத மறைவு எண்ணி

## என் கண்களில் இவர்பற்றி எழுந்த சில வரிகள்.....!

சுமார் 55 ஆண்டுகள் வரை பின்னோக்கிப் பார்க்கிறேன்......

அப்போதுதான் இந்தியாவில் தமது பட்டப் படிப்பினை நிறைவுசெய்த இராமனாதர் குடும்பத்தைச் சார்ந்த, அகவை இருபதுகளை மட்டும் எட்டிப்பார்க்கும் மூன்று இளசுகள் செழிப்பான அறிவும், எடுப்பான வனப்பான தோற்றங்களுடன் தீவக மாவலி அரசடியில் படகில் வந்திறங்கிய நேரம். அப்போது அவர்களின் அறிமுகம்... செல்வன் இராமநாதர் சின்னத்தம்பி B.A செல்வி இராமநாதர் சேதுப்பிள்ளை B.A. (திருமதி வரதராஜா), செல்வி இராமநாதர் புஸ்பவதி B.Sc (திருமதி பி. எம். யே. அன்ரனி). வந்து இறங்கிய சில நாட்களின்பின் முதல் இருவரும் மகாவித்தியாலயத்தில் கலைப் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணிபுரிய ஆரம்பித்துவிட்டார்கள். அப்போதைய அதிபர் அமரர் மாண்புமிகு எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்களின் சிறந்த நடைமுறைச் செயற்பாடுகளில் ஒன்று... தான் பெற்ற மகனாக இருந்தாலும் சரி வேறு எவராக இருந்தாலும் சரி எவர் தம் பல்கலைக்கழக விடுமுறையில் வந்திருக்கிறார்களோ அவர்களை அழைத்துவந்து பாடசாலையில் பாடம் கற்பிக்க ஒழுங்குபடுத்திவிடுவார். அந்த வகையில் மேற்கூறியவர்களும், நிரந்தர பட்டதாரி நியமனத்திற்கு முன் பல மாணவர்களுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமாகிவிட்டவர்கள்தான்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது அவர்களிடம் கல்விகற்கின்ற வாய்ப்பு எனக்குக்கிடைக்கவில்லை. ஆனால் அவர் உதவி அதிபராகக் கடமையாற்றிய போது அவரிடமிருந்த ஆளுமையின் நீள அகலங்களை நன்கு அறிந்திட நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. பினனர், நான் ஆசிரியனாகக் கடமைாற்றிய போது இவரிடமிருந்து உயரிய பல அணுகுமுறைகளைக் கற்றுக்கொண்டேன். நிதானமான, தீர்க்கதரிசன வழிகாட்டலுடன்கூடிய அறிவுடைமையும், இன மத பேதமற்ற,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையான, எளிமையான நட்புடன்கூடிய உரையாடலின் சிறப்பும்தான் அவரினது உள்ளார்ந்த விழுமியக் கோட்பாடுகள். இந்திய காமராஜரின் ஆளுமைத் திறனின் இரகசியங்களும், நம் தீவகக் கிராமத் தலைவர் அமரர் உயர்திரு. கணபதிப்பிள்ளை அவர்களினது ஆளுமையின் வல்லமையும் அமரர் இரா. சின்னத்தம்பி அவர்களின் உள்ளத்தில் நிறையவே குடிகொண்டிருந்ததை எடுத்துக் காட்டாகக் கூறுவர். எனவே அமரர் இரா. சின்னத்தம்பி அவர்களின் ஆளுமையின் சிறப்பிற்கு இவைகளும் தீனி போட்டன என்றால்க்கூட அது மிகையாகாது. இவரிடம் கற்றுக்கொண்ட பல ஆளுமைத் தத்துவங்கள்தான் இன்றும் அஸ்ரேலிய விக்ரோரிய மாநில முதல்த்தரத் தமிழ்ப் பாடசாலையின் வளாகம் என்னைத் தனது தலைமை ஆசிரியனாக்கிக் கொண்டுள்ளது எனலாம்.

தீவக மக்களுக்காகத் தன் உடல், பொருள் ஆவியனைத்தையுமே அர்பணிக்க வேண்டுமென்ற பேரவா இவரிடத்தில் வேர்விட்டு உயர் வளர்ச்சிபெற்று செழிப்படைந்திருந்தது. அதின் நிமிர்த்தம், தீவகத்திலும் சரி, வன்னிப் பெருநிலத்திலும் சரி இவர் பல செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். நமது சமுதாயத்தின் அறியாமையை கல்வியின் மூலம் போக்கவேண்டும் என்ற கோட்பாபட்டை இறுதிவரை நடைமுறைப்படுத்தி வந்தார். என்னிடம் கூறுவார் "அண்ணர் (அதாவது எனது தந்தையார்) ஒரே இரவில் 81 மாணவர்களை ஒன்றுதிரட்டி பாடசாலையில் இணைத்துக் கல்விச் செல்வத்தை அளித்தபடியால்த்தான், நான் புலமைப் பரிசில் பெற்று இன்று இந்நிலையை அடைய உதவியது" என்று சொல்லிப் பெருமைகொள்வார்.

பாடசாலைக் காலத்தில் தீவக வட்டார ஆசிரியர் சங்கத்தின் தலைவராக அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் இருந்தபோது நான் செயலாளராக இருந்து பல கல்வி ஊக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம். பாடசாலைகளின் ஒன்றிணைந்த கலை நிகழ்வுகள், வட்டார விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள் என மாணவர்களையும், ஆசிரியர்களையும் மற்றும் தீவகப் பாடசாலைகளையும் தினம் தினம் கற்றல், கற்பித்தல் எனும் நீரோட்டத்தில் ஆடி அசைய விட்டபடியே இருந்தோம்.

அக்காலம் செழுமையும், இனிமையும் கூடிய காலம் அதனால்த்தான் அப்போதைய அமைச்சர் குமாரசூரியர் நெடுந்தீவுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது "இந்த அழகிய தீவையும், பாடசாலைகளையும், மக்களையும் பார்க்கும்போது, நீங்கள் ஏன் இந்தத் தீவுக்குத் தனிநாடு கேட்கக்கூடாது எனக் கேட்கத் தோன்றுகிறது" என வியப்புடன் கேட்டிருந்தார். அந்த அளவுக்குத் தீவு களைகட்டியிருந்த நேரம் அது. அமரர் இரா. சின்னத்தம்பி அவர்களுக்கு அரசியல் ஒன்றும் புதிதல்ல. அரசியலில் குதிக்க வேண்டும் என்ற அவா அவரிடத்தில் நிறையவே இருந்தது. அதற்கான ஆளுமையும், அறிவும் அவரிடத்தில் போதுமானதாகவே இருந்தது. தீவக மக்களுக்காக, குறிப்பாக புலம் பெயர்ந்து வன்னி சென்ற மக்களுக்காகச் சேவைசெய்ய அதுவே வழி என்பது அவரது தீர்மானமாக இருந்தது. இதற்கு எமது தூண்டுதல்களும் ஒரு காரணம் எனலாம். வன்னியைத் தனது சேவைக்கால எல்லையாக நிர்ணயித்துக் கொண்டதும் நன்மைக் கானதாகவே எங்களால் கருதப்பட்டது. ஆனால் காலம் மாறியது. கள நிலையும் மாறிவிட்டது. அது இவரின் கடைசிக்கால தாக்கங்களிற்கும் ஒரு காரணியாகியது....

எமது தீவகப் பெருங் சுடர்கள் பல அணைந்துவிட்டன. காலத்தின் கணக்கு அது. உடல் அழிவது உறுதி.... ஆனால் அதனது புகழ் அழியாது! அதிபர் அவர்களின் தன்னலம் சாராத சேவை அழியாது... எமது நெடுந் தீவகத்தில் அவர்கள் ஏற்றி வைத்த "அறிவு கொடு" எனும் தீபம் என்றுமே அணையாமல் பார்த்துக்கொள்ளப்படவேண்டியது காலத்தின் கடமையும், அங்குள்ளவர்களின் கடமையுமாகும்.

என்றுமே அமரர் அவர்களுடன் இணைப்பும், ஆதரவுத் துணையும் வேண்டி தீவக மக்களின் துயர் துடைப்பில் பங்குகொண்டு சேவை புரியும் கனடா தீவக ஒன்றியத்தார்க்கு அவரது மறைவுக்கான எனது கவலையைத் தெரிவிப்பதோடு எடுக்கும் முயற்சிகள் அனைத்திற்கும் இறைவன் அருள் வேண்டி நிற்கின்றேன்.

குடும்பத் தலைவனின் இழப்பால் நெடிதுயர் கொண்டுள்ள அவரது துணைவியார் அவர்களுக்கும், மகன் மகேந்திரன் குடும்பத்தாருக்கும், ஏனைய உற்றார் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இதயக் கவலையினைக் கண்ணீர்த் துளிகளுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதன் ஜெயராஜா

அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நண்பர் சின்னத்தம்பி

1971ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கல்வியியலில் டிப்புளோமா கற்பதற்காக பேராதனைப் பல்கலைக் கழகம் சென்றிருந்தேன். அங்கே தங்குவதற்கு ஏதேனும் ஒரு வீட்டில் ஒரு அறை எடுத்துத் தருமாறு எமதுகல்லூரியின் பழைய மாணவனும், அங்கே புவியல் துறையில் உதவிப் போதானாசிரியருமாகவிருந்த திரு. மகேசனிடம் கோரியிருந்தேன். அவர், பல்கலைக் கழகத்தின் கல்வியியல்த்துறையின் விகிதராக இருந்த திரு. ராஜபக்சாவினது இல்லத்து முன் அறையினை ஒழுங்குபடுத்தி விட்டு என்னைக் கண்டு, உங்களுக்காக நான் ஒரு அறை பார்த்துள்ளேன். அங்கே தங்கலாம். வசதியானது. வகுப்பிற்கு நடந்தே சென்று வரலாம். அருகே அம்மா என்ற பெண்மணி வீட்டிலே சாப்பிட்டுக் கொள்ளலாம். இரண்டு பேருமே மிகவும் அற்புதமான மனிதர்கள். உங்களுக்கு எந்தவித பிரச்சனையும் இருக்காது "என்றவர். "ஆனால் சேர்.., உங்களுடன் இன்னொருவர் தங்குவதற்கு உங்களுக்கு ஆட்சேபனை இல்லைதானே.. இங்கு அப்பிடித்தான் ஒரு அறையில் இருவர் தங்குவார்கள்.. அவர் பெயர் சின்னத்தம்பி. எனது உறவினர். நெடுந்தீவுக்காரர்'' என்று முடித்தார். அதற்கென்ன, அவரும் டிப்புளோமா கற்க வந்துள்ளமையால் ஒருவருக்கு ஒருவர் உதவிதானே என்றேன். மகேசன் திரு. சின்னத்தம்பியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரும் ஆசிரியப் பணியில் இருந்தாலும், அதற்கு முன் நான் அவரைக் கண்டதில்லை. தீவு மக்களுக்கே உரிய கனிவான பேச்சும், பணிவும் அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. முதல்ச் சந்திப்பிலேயே அவர் என் உள்ளத்தில் இடம் பிடித்துவிட்டார். அவர் ஒரு கலைப் பட்டதாரி, நான் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி என்பதைத் தவிர பல விசயங்களில் நாம் ஒத்த கருத்துடையவர்களாகவே இருந்தமையால், அங்கே வாழ்ந்த ஓராண்டும்

மிகவும் சந்தோசமாகவே கழிந்தது. அரசியல் சித்தாந்தம் இருவருக்கும் ஒன்றாகவே இருந்தது. அவர் தீவக மக்களினது கல்வி மேம்பாட்டில் கொண்டிருந்த அக்கறை எனக்கு அவர்மேல் ஓர் ஈர்ப்பினை ஏற்படுத்தியது.

அதிபர் நவரத்தினசிங்கம் மேல் அவருக்கு அதீத பக்தி இருந்தது. அதிபர் நவரத்தினசிங்கம் அவர்கள் நெடுந் தீவு மக்களுக்காக ஆற்றிய பணியினைக் கதைகதையாகச் சொல்வார். அதன் விளைவாக எனக்குமே அதிபர் நவரத்தினசிங்கம் அவர்கள் மேல் ஒரு பற்றுதல் ஏற்பட்டது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி அவர்களுக்கு கொஞ்சம் ஆஸ்துமாவோடும் பீனிசத்தோடும் சம்மந்தமான உடல் நிலை. அடிக்கடி தும்முவார். பேராதனையின் தட்பவெப்பநிலை அத்தனைதூரம் அவருடன் ஒத்துழைக்கவில்லை. இரவு நேரங்களில் அவர் நீண்ட நேரம் கண்விழித்து இருக்கமாட்டார். வெள்ளனவே உறங்கப் போய்விடுவார். ஆனால், நானோ எதிர்மாறு. இரவினில் நீண்ட நேரம் வாசித்துக்கொண்டிருப்பேன். இதனால் காலையில் எழுவதற்கு எனக்கு நேரம் எடுக்கும். இது ஒரு விதத்தில் சாவகாசமாகவும் இருந்தது எனலாம். குளியல் அறை ஒன்றாக இருந்ததால் அவர் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்தபின்னர் என்னை எழுப்பி விடுவார். உற்ற நண்பனாக, இரவு நேரங்களில் விளக்கு எரிந்துகொண்டிருப்பதை அவர் பொருட்படுத்தியதேயில்லை. எனக்கு இறையுணர்வு மிக மிக அற்பம். அவருக்கு இருந்ததோ இல்லையோ நானறியேன். ஆனால், இது சம்மந்தமான சர்ச்சையில் நாம் என்றுமே ஈடுபட்டதில்லை. அங்கு வாழந்த ஓராண்டில் நாம் இருவருமே எந்தவொரு ஆலயத்திற்கும் சென்றதாகவும் இல்லை.

நாங்கள் மாலை நேரங்களில் உலாவச் செல்வோம். இத்தகைய நேரங்களில் நண்பர் புவனச்சந்திரனும் எங்களுடன் சேர்ந்துகொள்வார். அவர்கள் இருவரும் இந்தியாவிலே நான்கு வருடங்கள் ஒன்றாகவே கற்றவர்கள். நல்ல நண்பர்களுங்கூட. கற்ற பாடங்கள் பற்றியே மூவரும் சர்ச்சை செய்தபடி செல்வோம். எனக்கு அவர்கள் இருவரிலும்பார்க்க ஞாபகசக்தி சற்றுக் கூடுதலாகவே இருந்தது. எனவே புள்ளிவிபரங்கள் பற்றிய தகவல்களை நானே அவர்களுக்கு எடுத்துக்கூறுவேன். ஒப்பீட்டுக் கல்வியியல், சமூகவியல் போன்ற துறைகளில் அவர்களுடைய கை ஓங்கி நிற்கும். அது எனக்கும் மிக அனுகூலமாக இருந்தது. பரீட்சையின்போது மிகவும் தெளிவாக விடைகள் எழுதுவதற்கு அது உதவியது.

கல்வியியல் டிப்புளோமா முடிந்ததும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபராகவும் அவர் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் நியமனம் பெற்றுவிட்டோம். கல்வித் திணைக்களம் நடத்துகின்ற கூட்டங்களில்

இருவரும் இடையிடையே சந்தித்துப் பேசுவோம். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழாவினை மிக விமர்சையாகக் கொண்டாடினார். எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். எமது பேராசிரியராக இருந்த ரஞ்சித்

றுபேரு அச்சமையம் கல்வித் திணைக்களத்தில் உதவிச் செயலாளராக இருந்தார். அவரையே பிரதம அதியாக அழைத்திருந்தார். என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவிற்குச் செல்ல முடியாது போய்விட்டது. கடிதம் மூலம் எனது இயலாமையைத் தெரிவித்ததுடன், விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற வாழ்த்தையும் அதில் தெரியப்படுத்தியிருந்தேன். பின்னர் ஒரு கூட்டத்தில் என்னைச் சந்தித்தபோது ரஞ்சித் றுபெரு என்னை விசாரித்ததாகக் கூறினார். விழாவிற்குப் போக முடியாமை எனக்கு உண்மையிலேயே வருத்தமாக இருந்தது. அவரது நிர்வாக ஆற்றலும், செயல்த் திறனும் அந்த விழாவிலேயே மிகவும் சிறப்பாகக் காணக்கூடியதாக இருந்ததாகப் பலரும் கூறியிருந்தார்கள்.

நான், பின்னர் மகாஜனாவின் அதிபராகி நைஜீரியா சென்றுவிட்டேன். அச்சமையம்,திரு ரஞ்சித் றுபெரு அவர்கள் சொக்ரோப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் பேராசிரியராக இருந்தார். ஒரு சந்திப்பில், நெடுந்தீவுப் பயணத்தைப் பற்றி ரஞ்சித் விதந்துரைத்தார். ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னரே ரஞ்சித் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்குச் சென்றிருந்தாலும், அன்றைய நிகழ்ச்சிகள் அவரது மனதில் பசுமையாகவே

இருந்ததைக் காணமுடிந்தது. விழாவின் மகோன்னதத்தையும், சின்னத்தம்பியின் விருந்தோம்பலையும்அவர் பெரிதாக விதந்துரைத்தார். அங்கே அவர் உண்ட உணவின் ருசி இப்போதும் அவர் நாவில் நீர் வரவழைத்ததைக் கண்டேன்.

நான் நைஜீரியாவில் இருந்து கனடா வந்துவிட்டேன். ஆனால், இங்கு வந்தபின்னர் அவரது பெறாமகனான கணபதிப்பிள்ளை, மருமகனான சித்திவிநாகம் ஆகியோரோடு சின்னத்தம்பியின் பெயரைச் சொல்லி நட்பினைச் சம்பாதித்துவிட்டேன். இவர்களைக் காணும்போதெல்லாம் அவரைப்பற்றி விசாரிப்பதுண்டு. அவர் கொழும்பில் வசிக்கிறார். என்பதையும், அவர் உடல்நலம் குன்றியுள்ளார் என்பதையும் அறிந்துள்ளேன். ஆனாலும், இரண்டுமுறை நான் கொழும்பு சென்று அவசர அவசரமாகத் திரும்பி வந்தமையால் அவரைச் சந்திக்க முடியாது போய்விட்டது. அது எனது குற்றம் என்றே உணர்கிறேன். இனி அவரைக் காணமுடியுமா?... ஆனால் அவரது கனிவான பேச்சும், நல்ல சுபாவமும் இன்றும் என் மனதிலிருக்கிறது. அவை என் மனதில் அவரை நிலைக்க வைத்த பண்புகள்.

**பொ. கனகசபாபதி**
முன்னாள் அதிபர்
யாழ்/ மகாஜனாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

## மனக்குகை ஓவியங்களாக மின்னிக் கிடப்பவை.....

எம் அதிபர் அமரத்துவம் எய்திய அஞ்சலிப்புக்காக ஒன்றுகூடியுள்ள என் கனடிய உறவுகளுடன் நானும் தலை சாய்த்து என் மதிப்பினையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்வதில் சற்று நிம்மதியடைகிறேன்.

நம் மண்ணில் கல்விப் புரட்சிக்கு வித்திட்ட பிதாமகர் நவரட்னசிங்கம், அதிபர் இரா. சின்னத்தம்பி என்னும் இரு மாமனிதர்கள் எம் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்தவர்கள். "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மண்ணுயிர்க்கெல்லாம் இனிது" என்பது இவர்கள் தத்துவம். அப்படியே தம் வாழ்நாளை தம்மைச் சேர்ந்த மக்களுக்காக அர்ப்பணித்தார்கள் இவர்கள்.

எனக்கு அதிபர் கல்வி போதித்தவர். அந்தப் போதனையால் நான் உலகை அறிந்துகொள்ள வித்திட்டவர் இவர்தான். அறியாமையின் இருண்ட பக்கங்களுக்குள் சிக்கிக்கிடந்த என்போன்ற பல மாணவர்களின் விமுக்திக்கு

அவரே காரணரானார் என்கின்ற உண்மை என் மனக்குகை ஓவியங்களாக மின்னிக் கிடப்பவை. மனிதநேயம், மானிட முன்னேற்றம்என்கின்ற பண்பார்ந்த உயர்ந்த தத்துவங்களின் - ஆனா, ஆவன்னாக்களை தன்னுடைய அதிபரிடமும், முதல்வர் காமராசரிடமும் மெய்யுறக் கற்றவர் என்பதை நான் சிரேஷ்ட மாணவ முதல்வனாக இருந்த காலங்களில் கண்டு வியந்திருக்கிறேன். நான் கிளிநொச்சியில் பள்ளியாசிரியனாக இணைந்தபோது "எம்மூரைச் சேர்ந்த எண்ணூறு மாணவர்கள் அப்பாடசாலையில் கல்வி பயில்கின்றார்கள் என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிருத்திக்கொள்''என்று என்னை நெறிப்படுத்தி ஒரு சக ஆசிரியனுக்குரிய சகல மரியாதைகளையும் தந்து மதித்தவர் இவர். ஆனால், என்னால் மட்டும் அவர்முன் ஆசிரியனாக நினைத்துக்கொள்ள முடியவில்லை. ... என்றும் நான் அவரது மாணவன் என்பதில் எனக்குப் பெருமை. எளிமையான வாழ்வும், பதவிக்காக அலையாத நேர்மையும் என்னை எப்போதும் பயப்படுத்துகின்றது. ஒரு துறவிபோல் வாழ்ந்து, என்னை ஆளுமை கொண்ட அந்த அரிய மனிதரின்

விஸ்லரூபம்- அவர் மனதில் என்றும் தணியாத- அவரால் நிறைவேற்ற முடியாமற்போன பணி ஒன்று என் மனதில் ஆசையாக அலைக்கழிக்கின்றது நண்பர்களே.

நணபர் இ.இந்திரராஜாவின் (வவுனியா) தலைமையில் உயர்கல்வி மாணவர்களுக்கான உதவி நிதியம் எனும் முயற்சி ஒன்றை அதிபரின் அறக்கட்டளையாகப் பதிவுசெய்துள்ளோம். எதிர்வரும் சந்ததியின் வாழ்வில் ஒளியேற்றுவோம். அதுவே நாம் அவருக்குச் செய்யும் அன்பார்ந்த காணிக்கையாக அமையும் என நம்புகின்றேன்.

**நவில்தொறும் நூல்நயம் பயக்கும்**
**பயில்தொறும் பண்புடையார் தொடர்பு**

அன்புடன்
**சுப்பிரமணியம் சிவசம்பு**
அவுஸ்திரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமழையாய் வழங்கியவன்

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா -

நேர்கொண்ட பார்வையான்
நெறிகொண்ட சிந்தையான்
நிலம்போற்றும் கல்வியாளன்!
பேர்கொண்ட புகழினான்
பெரும்பேறாய் நெடுந்தீவு
பெற்றமகன் பேராற்றலான்!
கார்கொண்ட மேகமெனக்
கண்களினை நீர்மூடக்
கனம்கொண்ட நெஞ்சமுடனே,
ஊர்கண்டு அழுதுவிழ
உயிர்கொண்டு போயினன்
உத்தமன் எமைப்பிரிந்தே!
அதிபரென அழைக்கின்ற
அடைமொழி அவனுக்கே
அடையாளம் எனவானவன்!
மதிபெருக்கி மாணவர்கள்
மனம்பெருக்கி அவர்வாழ்வை
மலர்வித்த இறையானவன்!
கதியற்று நின்றோர்கள்
கண்ணீரைத் துடைப்பதில்
கர்ணனைப் போலானவன்!
விதிசெய்த செயலினால்
விடைபெற்றுப் போயினான்
விம்மியழ எம்மைவிட்டே!

பட்டங்கள் பதவியெனப்
பலவந்த போதினிலும்
பண்பாடு மாறாதவன்!
இட்டதொரு பணிதன்னை
ஏற்றபடி முடிக்காமல்
இமைகூட மூடாதவன்!
வெட்டியாய்ப் பலபேசி
வெளியுலகை ஏமாற்றும்
வேடங்கள் போடாதவன்!
கட்டியழ ஊரெல்லாம்
கதறியழ உறவெல்லாம்
கண்மூடிப் போனானவன்!
வானமழை மேகமென
வழங்கியவன் இன்றில்லை
வாழ்ந்தமண் காய்ந்ததம்மா!
ஞானமழை நாவரசன்
நற்சின்னத் தம்பியினை
நாடிழந்து போனதம்மா!
போனமகன் மீண்டுமொரு
பிறப்பெடுத்து வந்தாலே
பெற்றமண் தழைக்குமம்மா!
தேனமுதத் தமிழ்வாழும்
தீவுபெற்ற தெய்வமகன்
திரும்பிவர வேண்டுமம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரலாற்று மனிதர் இவர்

1978 ஏப்பிரல் மாதம் நெடுந்தீவின் உதவி அரச அதிபராகப் பொறுப்பேற்ற அன்றையதினமே அதிபர் சின்னத்தம்பி அவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அன்புடன் என்னை வரவேற்ற அவர், நெடுந்தீவின் சமூக, பொருளாதார நிலைமைகளையும், மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சனைகளையும் எடுத்துக் கூறியதுடன் தீவகத்தைச் சார்ந்த ஒருவரால்த்தான் தீவுப் பகுதி மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை இலகுவாக அறியமுடியும் என்பதையும் அவர் நாசூக்காகக் குறிப்பிடத் தவறவில்லை. அந்தக் குறுகிய நேர உரையாடலில் தாம் பிறந்த, தாம் கல்விகற்ற, தாம் சேவையாற்றிய மண்ணின் மீதும், மக்களின் மீதும் அவர் கொண்டிருந்த தாகத்தை என்னால் எடைபோட முடிந்தது.

பல மனிதர்களது பிறப்பு, வாழ்க்கை, இறப்பு என்பன சாதாரணமாக அமைந்துவிடுகிறது. ஆனால் ஒரு சிலரது பிறப்பு, வாழ்க்கை, இறப்பு வரலாறாக மாறுகின்றது. அவ்வாறான வரலாற்று மனிதர்களில் ஒருவராகவே எமது அதிபர் சின்னத்தம்பி அவர்களைப் பார்க்கின்றேன்.

வெளியுலக மக்களைப் பொறுத்தமட்டில், யாழ்க் குடாநாட்டுக்கு அப்பால் தொலைவில் உள்ள, பிரயாணக் கஸ்டம் நிறைந்த ஒரு பகுதியே நெடுந்தீவு என்ற மனநிலை இருந்து வந்தது. இதனை உணர்ந்த, அதிபரின் வெளிப்பாடாகவே நெடுந்தீவின் சமூக அபிவிருத்தி நிறுவனங்களையும், கல்விக்கூடங்களையும் ஒருங்கிணைத்து 1978 ஒக்ரோபர் மாதத்திலிருந்து "வடதாரகை" பெயரில் மாவிலிற்கும் குறிகட்டுவானுக்கும் இடையே நாளாந்தம் மூன்று படகுச் சேவைகள் நடைபெற்று வந்தன.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வகையில் 1979 ஆவணி மாதம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக "கிராமிய அபிவிருத்தி வங்கி" முதன்முதலாக நெடுந்தீவில் திறந்து வைக்கப்பட்டது.இத்தகைய பல சமூக அபிவிருத்தி வேலைகளுக்கு அச்சாணியாக இருந்து செயற்பட்டவர் எமது அதிபரேயாகும்.

அதிபர் அவர்கள் நெடுந்தீவில் பிறந்து, அங்கு கல்விகற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக, பதில் அதிபராக, அதிபராக, கொத்தணி அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடைமையாற்றி நெடுந்தீவு மாணவர்களுக்கும், மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியிருந்தார்.

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் அவர்களின் வழிகாட்டுதலில் நெடுந்தீவு மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்த வகையில் நெடுந்தீவில் முதன்முதலாக மகாவித்தியாலய அரங்கில் "உலக திருக்குறள் மகாநாட்டை" இரு நாட்கள் நடாத்திய பெருமை அமரத்துவமடைந்த எம் அதிபர் சின்னத்தம்பி அவர்களையே சாரும். இந்த வரலாற்றுப் பெருமைமிக்க மகாநாட்டிற்கு அறிஞர்களை வரவழைத்ததுடன், அவர்களுக்கு உணவு, உறைவிடம் போன்ற வசதிகளைச் செய்வதற்கு அதிபரும், ஆசிரியர் குழாமும் எமக்கு உதவிய நிகழ்வு இன்றுகூட என் மனக்கண்முன் நிழலாடுகிறது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யெனும் பெருமை உடைத்து இவ்வுலகு" என மனித வாழ்வின் நிலையாமைபற்றி வள்ளுவப் பெருந்தகை சொல்லிப்போனாலும், எமது பாசத்திற்கும், மதிப்பிற்குமுரிய அதிபரது இழப்பு எமது கண்களைக் குளமாக்கி, நெஞ்சை வருடுகின்றது.

**ஓம் சாந்தி!**

**A. செந்திவேல்**

நெடுந்தீவு முன்னாள் உதவி அரச அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழோடு தோன்றி புகழோடு அமரரான

# எம் சின்னத்தம்பி

"தோன்றில் புகழோடு தோன்றுக" எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க, அமரர் திரு. இரா. சின்னத்தம்பி அவர்கள் நெடுந்தீவு உதய பகுதியில் இராமநாதர், சிவகாமிப்பிள்ளை தம்பதிகளுக்கு ஒரே புதல்வனாவார்.

இவரை ஒரு உறவினராக, குடும்ப நண்பராக இவற்றுக்கும் மேலாக, எமது ஊர்மேல் மிகவும் பற்றுக்கொண்ட மனிதநேயம் படைத்தவராக பல சந்தர்ப்பங்களில் நான் பார்த்திருக்கின்றேன், பழகியிருக்கிறேன், புரிந்திருக்கிறேன்.

இளவயதிலிருந்தே கல்வியில் ஈடுபாடு கொண்ட இவர் பல திறமைச் சித்திகளைப் பெற்று தாயகத்திலும், இந்தியாவிலும் தனது கல்விச் செல்வத்தைத் தேடிக்கொண்டார். பட்டப்படிப்பை முடித்து, தனது பிறந்த மண்ணுக்கு சேவை செய்யும் பண்புடன் அவரது பணியைத் தொடர்ந்தார். ஆசானாகவும், அதிபராகவும், தூர நோக்குக்கொண்ட ஒரு சமூக சேவையாளராகவும் தனது முத்திரையை நிறைவாகவே பதித்துள்ளார். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இவரது காலப் பகுதி கடமையானது, வரலாற்றில் இடம்பெற வேண்டியது. நெடுந்தீவிலும் பின்னர் கிளிநொச்சியிலும் கல்வி வேந்தனாகக் கடமையாற்றியதில் எமதூரைச் சேர்ந்த பல மாணவர்களை கல்விமான்களாக உருவாக்கினார். அறிஞர் அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உன்னத கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியவர். அவர் ஓய்வூதியம் பெற்றிருந்த காலங்களிலும் ஒரு முழுக்கால சமூக சேவையாளராக, பல பொது நிறுவனப் பணிகளை பொறுப்பேற்று வந்ததுடன், ஆலமாவனத்தானின் வளர்ச்சிக்கும் முக்கிய அடிக்கல்லானார்.

ஒவ்வொரு தடவையும் நான் தாயகத்திற்குச் செல்லும்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் சென்றுவருவேன். சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். அப்போதும்கூட கண்ணியமான பேச்சு, கடமையைச் சுற்றிய நினைவுகள்தான் அவரின் உரையாடலில் வெளிக்கும். பல வருடங்களைப் பின்நோக்கிப் பார்க்கிறேன். எனது மனைவிக்குத் தம்பி முறையான இவர் எனது குடும்பத்தின்மேல் மிகுந்த பற்றும், பாசமும் கொண்டிருந்தார். நான் வெளியூரில் கடமையாற்றுங் காலங்களில் அவ்வப்போது எனது மனைவிக்கும், மக்களுக்கும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

அன்னாரின் பிரிவால் துயருறும் தங்கை ஈஸ்வரி, மகன், மருமகள், உறவினர், குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இந்த நல் ஆத்மாவுக்கு ஆலமாவனத்தான் தன் நிழலில் நித்திய ஆறுதலளித்து ஆட்கொள்ள வேண்டுகின்றேன்.

**ஓம் சாந்தி... சாந்தி.. சாந்தி**

**வ. நடராசா**
ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்
நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இரா. சின்னத்தம்பி

## சிறந்த ஆசிரியப் பெருமகன்

அமரர் இரா சின்னத்தம்பி அவர்கள் இந்தியாவில் இளங் கலைமாணிப் படிப்பை முடித்துத் திரும்பிவந்து ஆசிரியராகப் பணியாற்றியபொழுது நெடுந்தீவு மக்களுக்குக் கல்விச் சேவை ஆற்றவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அவரது துணிவும், ஆசிரிய சேவையில் அவரது அரப்பணிப்பும் நெடுந்தீவில் மட்டமல்ல அவர் சேவையாற்றிய ஏனைய கல்விக் கோட்டங்களிலும் அதிகளவு பட்டதாரிகளை உருவாக்கக் காரணமாக இருந்தது.

நெடுந்தீவிலிருந்து 40 களிலும், 50 களிலும் வன்னி நிலப்பரப்பில் குடியேறியவர்கள் கிளிநொச்சி. வவுனியா, மன்னார் ஆகிய நகரங்களைச் சூழ்ந்து செறிவாக வாழ்ந்திருந்தாலும் அவர்களுக்கும் நெடுந்தீவுக்குமான தொடர்பு பேணப்பட்டே வந்திருக்கிறது. நெடுந்தீவிலும், வன்னியிலும் வாழ்ந்த மக்களின் கல்வியை மேம்படுத்துவதில் அதிபர் சின்னத்தம்பி அவர்களின் சேவைக்காலம் முழுவதும் அர்பணிக்கப்பட்டிருந்தது. அதன் பலாபலன்களை இரண்டாம், மூன்றாம் தலைமுறை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

1965 இல் சாதாரணதரத்தைக் கிளிநொச்சியில் முடித்துவிட்டுஇருந்த பொழுது அங்கு உயர்தரத்துக்கானவாய்ப்பு இருக்கவில்லை. எல்லோரும் யாழ்ப்பாக் குடாநாட்டின் பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்குச் செல்லத் தொடங்கினர். 1966இல் நெடுந்தீவில் உயர் கல்வியைத் தொடரும்படி பலரையும் ஊக்கப்படுத்தினார். பல சிரமங்களுக்கு மத்தியில் நெடுந்தீவு மாவித்தியாலயத்தில் கலைத்துறை சார்ந்த உயர் கல்விக்கான வாய்ப்பினை

ஏற்படுத்தியது மட்டுமல்லாது தானே அரசியல், இந்திய வரலாறு ஆகிய இரு பாடங்களையும் கற்பித்து திறமையான சித்திகளைப் பெறவைத்தார். அப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளில் பெறப்பட்டிராத 100 சத வீத முடிவுகள் அங்கு பெறப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்த பொழுது மேற்படிப்புக்காக 1970 இல் அங்கு வந்திருந்தார். அங்கு அதிபர் பொ. கனகசபாபதியும் இவரும் ஒரே அறை நண்பர்களாக இருந்தனர். இருவரும் ராஜவத்தையிலிருந்து கலைப் பீடத்திற்குச் செல்லும் நினைவுகள் நெஞ்சைவிட்டு அகலவில்லை. இரண்டு சாதனை அதிபர்களை அன்றே காணக்கூடியதாக இருந்தது.

தீவகக் கொத்தணி அதிபராகவும், பின்னர் கிளிநொச்சி மாவித்தியாலய அதிபராகவும், மாவட்டக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றிய பொழுதுகளில் தான் சென்ற இடங்களில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திச் சாதனை கண்டவர்தான் அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்கள்.அரசியற் கோட்பாடுகளை நன்கறிந்து கற்பிப்பது மட்டமல்ல, இந்திய வரலாற்றினையும், இந்திய அர்த்த சாத்திரம், மற்றும் அரச பரம்பரை பற்றியும் தெளிவுற அவர் கொண்டிருந்த ஞானம் என்பன அவரது பேச்சிலும் கற்ப்பிக்கும் முறையிலும் பிரதிபலித்தது. உயர்கல்வி மாணவர்களை நண்பர்கள்போல நடத்தி கல்வி கற்ப்பிக்கும் திறமை அவரது கல்வியியற் கோட்பாட்டில் புதுமையானது. தண்டனை வழங்காது, ஊக்கப்படுத்தும் அவரது கல்விக் கொள்கை இன்றும் பரவலாகப் பேசப்படுகின்றது.

கல்விக்காக எதனையும் யாருக்கும் கொடுக்கும் இவருடைய மனம் மிக விசாலமானது. அவர் பழைய மாணவர்களைப் பெருமைப்படுத்தவதும், புதிய மாணவர்களை ஊக்கப்படுத்துவதும் நல்ல கல்விப் பாரம்பரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இரா. சின்னத்தம்பி அவர்களின் கலைக்கூடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமைபெற்ற எல்லோரதும் மனங்களையும் விட்டகலாத பெருமகன் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார். அவரது சாதனைகளும், வழிகாட்டுதல்களும் சந்ததி சந்ததியாகத் தொடரும். இப்பெருமை ஒன்றே அவரைப் பிரிந்த அனைவருக்கும் ஆறுதலளிக்கும். நம் மண்ணும், மக்களும் இருக்கும்வரை அவரது எண்ணங்களும் பெருமைகளும் மறையப் போவதில்லை.

**அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை**

யாழ். பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வழிகாட்டி

திரு. இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள் ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர், நெடுந்தீவு பிரதேச சபை விசேட ஆணையாளர், அனைத்திலங்கைச் சமாதான நீதவான் எனப் பதவி வகித்தவர்.

உயர்திரு. இரா. சின்னத்தம்பி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நான் ஆழ்ந்த கவலையடைந்ததுடன், அவர் வாழ்ந்த காலத்தில் நடந்த சம்பவங்களை எண்ணுகையில் என் உள்ளத்திலே உவகையும் தோன்றுகிறது.

நான் அவரின் உறவினன், பழைய மாணவன். சக ஆசிரியன், எனக்கு அவர் ஆசிரிய ஆலோசகர் என இருந்த காலங்களையிட்டு சிந்திக்கிறேன்.

தீவகக் கல்வி வரலாற்றில், நெடுந்தீவு மண்ணில்ப் பிறந்து, ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் எனது தந்தையாரின் பழைய மாணவனாகத் திகழ்ந்து புலமைப்பரிசில் பெற்று யாழ் மாவட்டத்தில்

உயர்கல்வியைப் பயின்று, பட்டப்படிப்பை இந்தியாவில் முடித்துக் கொண்டு தன் மண்ணுக்கான நல்லாசிரியனாகி, அதிபராய்ப் பதவி உயர்ந்து கொத்தணி அதிபராகத் திகழ்ந்து, தீவகத்துக் கல்விப் பணிப்பாளனாய்த் திகழ்ந்து,

நாட்டுக்கு நற்பணிபுரிந்த தியாகி இவர். கம்பீரமான தோற்றமும் எதற்கும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட பெருந்தகை இவர். தத்துவங்களை அள்ளிவீசும் மாமேதை. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாய்த்த பேச்சுத் திறமையால் எல்லோர் மனதையும் கவரும் தன்மைபடைத்தவரும், கள்ளங்கபடமற்ற மனப்பாங்கும் கொண்டவர் இவர். தீவகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற சுய உள்ளம் படைத்தவர். பின்தங்கிய எமது மண்ணிற்கு விஞ்ஞான உயர் கல்வியைக் கொண்டுவர

வேண்டும் என்ற நோக்குடன் என்னை நெடுந்தீவுக்கு வரும்படி வற்புறுத்தியதுடன், என் பெற்றோரிடமும் சம்மதம் பெற்று நெடுந்தீவுக்கு என்னை அழைத்துச் சென்று நெடுந்தீவில் முதன் முதல் விஞ்ஞான உயர்கல்வியை ஆரம்பித்து வைத்த பெருமை அவரையே சாரும். தன் சுயநலனில் அக்கறை காட்டாது, தீவக மக்களின் கல்வியை தன் முழுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமாக, கருத்தாக எண்ணி உழைத்த பெருந்தகை இவர்.

நான் கல்வி கற்பித்தபோது, மாணவர்களோடு தோளோடு தோள் நின்று நட்பாகவே பழகுவேன். என்னிடம் இவர் அடிக்கடி கேட்பார்.. **"என்னடா சீலன் இப்படி..? நீ கடுமையாக நிற்கவேண்டும். உனது அப்பா எவ்வளவு கடுமையானவர். நீ, இப்படிப் பெடியன்களுடன் திரிந்தால்.. என்ன நடக்கும்?"** என்று பலமுறை அன்பாக அறிவுரை கூறுவார். அந்நாட்களில் இயக்க இளைஞர் களுக்கிடையே நடந்த கொலையின் விளைவால் எழுந்திருந்த பதட்டத்தைத் தணிக்க இரவு பகலாக. அஞ்சா நெஞ்சுடன் நின்று சமாதானம் பேசிய காலங்களை எண்ணி வியப்படைந்திருக்கிறேன். எதற்கும் துணிந்த நெஞ்சம் படைத்த அண்ணல் இவர்.

மறைந்த சித்தப்பா இரா.சின்னத்தம்பி அவர்கள் தன் கடைசி நாட்களில் கொழும்பில் வசித்த போது அவர் அடைந்த கவலை. தன் மண்ணுக்கு சேவை செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் என்பன அவரை நோயாளி ஆக்கியது. அவரின் சேவைகள் புனிதமானவை. இவை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத அரும் பணியாகும்.

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை,**
**எனும் பெருமை உடைத்து இவ்வுலகு"**

அரும்பணி ஆற்றியவனின் பூதவுடல் அழிந்தாலும் புகழ் என்றும் நிலைத்து வளரும். அன்னாரின் பிரிவால் துயருறும் திருமதி ஈஸ்வரி சின்னத்தம்பி, மற்றும் பிள்ளைகளுக்கும், உறவினருக்கும் எனது குடும்பம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபம்.

**இராமநாதன் ஜெயசீலன்**
*B.Sc, Dip in Edn, Teachers Advisor*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் விதைத்த நற்பண்புகளை வளர்த்துப் போற்றுவோம்

அமரர் இரா. சின்னத்தம்பி அதிபராக, ஆசிரியராக மட்டுமன்றி தனது மாணவர்களை "சான்றோன்" எனக் கேட்பதை "பெரிதுவக்கும்" பெருந்தகையாளராக வாழ்ந்தவர்.

மாணவர்களின் அறிவு வளர்ச்சி வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளுடன் நின்றுவிடாது ஆளுமைத்திறனும் வளரவேண்டும் என்ற நோக்கில் மாணவர் மன்றங்களை வாரம்தோறும் தவறாது கண்டிப்புடன் நடத்தி வந்தவர். இதன் விளைவாக இன்று பல அமைப்புக்களின் பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுபவர்களாக அன்னாரின் மாணவர்களைக் காணக் கூடியதாக உள்ளது.

மாணவர்களாகிய எமக்கு அறிவுரை கூறும்போது பாடசாலையின் முன்னாள் மாணவர் களையே முன்னுதாரனமாக காட்டி அறிவுரை வழங்கியதால் எமது தன்னம்பிக்கையும் பொறுப்புணர்வும் வளர்ந்தது.

எம் மக்களின் உயர்வை உயிர் மூச்சாக மதித்த அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்களின் மறைவு கூட மாணவர்களை ஒருங்கிணைப்பதில் தான் நிறைவடைந்திருக்கிறது. அவர் விதைத்த நற்பண்புகளை வளர்த்துப் போற்றுவோம்.

மாணவன் - (மருத்துவர் - **சு.நடராசா** - சென்னை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

"நெருநல் உளனொருவன்இன்றில்லை எனும்
பெருமை உடைத்தது இவ்வுலகு"

ஈழ மணித்திரு நாட்டின் முடியாய் விளங்கும் யாழ்க் குடாநாட்டின் முத்தாய் திழ்கின்ற பசுந்தீவாம் நெடுந்தீவு பெற்றெடுத்த புகழ் பூத்த அறிஞர்கள், கல்வியாளர்கள், உலகத் தமிழர்கள் போற்றி வணங்கும் தவத்திரு தனி நாயகம் அடிகளார் வழிவந்தவர்களில் எம் ஆசான் திரு. இராமநாதர் சின்னத்தம்பி அவர்களும் ஒருவாராவர்.

இவர் நல்லாசானாக இருந்து சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்கியதுடன், பற்பல நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் உயற்சிக்கும், அவற்றின் தலைவராகவும், போஷகராகவும் இருந்து பல சேவைகள் புரிந்துள்ளார். இவற்றுடன், நாட்டின் கல்வி வளர்ச்சியில் இவரின் பணி பன்முகப்பட்டது. தான் பிறந்த ஊரின் கல்வியில் மிகவும் அக்கறையுடையவர். இதனால், இவரிடம் கல்வி கற்றவர்கள் தாய் நாட்டில் மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் சிறப்புற வாழ்கிறார்கள். இவரின்கீழ் பணிபுரிந்தவர்கள் கொடுத்துவைத்தவர்கள். ஏனெனில், சிறந்த பன்முகப்பட்ட ஆளுமையுடைய நிர்வாகத் திறமையினால் எவரையும் தன்வசப்படுத்தி அவரவர்களின் திறமைக்கு ஏற்றவாறு பணிகளை ஒப்படைத்து நிர்வகிக்கும் பண்புடையவர். இதனையே "பண்பெனப்படுவது, பாடறிந்தொழுகுதல்" எனக் கற்றோர் கூறுவர்.

தான் கற்பித்த, நிர்வகித்த பாடசாலையில் ஆசிரியர், மாணவர் உறவு ஆசிரியர், அதிபர், பெற்றோர் உறவு எவ்வாறு பேணப்படல் வேண்டும் என்பதற்கு எமது அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்கள் சிறந்த எடுத்துக்காட்டானவர். தன் மேலதிகரிகளோடும், ஏனைய திணைக்கள நிர்வாகிகளுடனும் எத்தகைய தொடர்பாடல்களை வைத்தால் தனது பாடசாலையையும், பாடசாலைச் சமூகத்தையும் எவ்வாறு உயர்வடையச் செய்யுலாம் என்பதற்கு இவர் முன்னுதாரண புருஷராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்புடையார்பட்டு உண்டு உலகம் அது இன்றேல், மண்புக்கு மாய்வது மண்" என்பதற்கு ஏற்ப, கொத்தணி அதிபராக, கோட்டைக் கல்வியதிகாரியாக (பணிப்பாளராக) கிளிநொச்சி, வேலணை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணிபுரியும்போது தனது பன்முகப்பட்ட நிர்வாகத் திறமையினால் எல்லோரையும் மதித்து, அவர்களிடத்திலும் பாராட்டுகளைப்பெற்றார். இவர் ஆளுமையுடைய நிர்வாகி என்பதற்கு, அன்றும்-இன்றும் மூத்த அரசியல்த் தலைவர்களுடனும், இளம் அரசியல்த் தலைவர்களுடனும் பகைமையற்ற தோழமையுடன் நட்பாக பக்குவமுடையவராயிருந்தது எடுத்துக்காட்டு. அதனால் எல்லோரதும் அன்புக்குரியவரானார். இதனையே வள்ளுவர் "பொய்க்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க, நாகரீகம் வேண்டுபவர்" என்றார்.

இத்தகைய ஆசான், சேவையாளனின் இழப்பு எமக்கு மட்டுமல்லாது இவரின் மறைவினால் துயருறும் அவர் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், ஊர்மக்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் இந் நூலிற்கு இரங்கலுரை வழங்குவதில் பெருமையடைகிறேன். ஆசானின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றேன்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**வாழ்க வையகம், வாழ்க வளமுடன்**

**சி.வீ. பேரம்பலம்**
ஓய்வுபெற்ற அதிபர்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதுக்குள் உறங்கும் மாபெரும் ஆசிரியன்

மனிதர்குல திலகங்களில் ஒன்றாக மலர்ந்து மணம்பரப்பி அன்புக்கும் உயர் மதிப்புக்கும் அணிகலனாக வாழ்ந்து, அமரராகிவிட்ட இராமநாதர் சின்னத்தம்பி ஆசிரியரிடம் கல்விபயின்ற மாணவர்களுள் நானும் ஒருவன்.

நாம் சந்திக்கும் அல்லது பழகும் எவராயினும், அவர்களின் ஏதாவதொரு செயற்பாடே அம்மனிதர்களை எம்முன் அடையாளப்படுத்தி வைத்திருக்கும்.

இந்தக்கூற்றுக்கு அமைய, இந்த மாபெரும் அசிரியனின் நினைவு வரும்போதெல்லாம், நடந்தேறிய இந்தநிகழ்ச்சியே முந்திரிகை விதையாய் என்னுள் முன்வந்து நிற்கும்.

எனது எட்டாம் வகுப்புக்குள்ஆங்கிலம் கற்பிக்கும் ஆசானாக உள்நுழைந்த இவர், மிகுந்த கண்டிப்பும், ஒழுங்காக வீட்டுப்பாடங்கள் செய்யாது போனால், அதிகபட்ச தண்டனை கொடுக்கும் இயல்பினராகவும் இருந்தார்.

ஆங்கிலப்பாடம் என்றாலே பாகைக்காயாய்க் கசக்கும் எனது வகுப்புச் செல்வங்களுக்கு, கடும்போக்காளனாகிய இவ்வாசிரியரின் வரவு மேலும் வயிற்றில் புளியைக் கரைத்துவைத்திருந்தது. ஆரம்ப நாட்களில் சிரிப்பை மறந்திருந்த அந்த 40 நிமிடங்களும், சிறிது சிறிதாகக் கரைந்தழிய மகிழ்ச்சி வெள்ளம் உள்நோக்கி மிக மெதுவாகவே ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

ஆசிரிய மாமணிமேலிருந்த பய உணர்வு படிப்படியாக விட்டகல, எமது மாணவ வாழ்வு மிகச்சொற்ப வேகத்திலேயே இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது எனலாம். எனினும் பரீட்சைகளில் 40 மார்க்குகளுக்கு மேல் எந்த ஆங்கிலப் புலியினாலுமே பெறமுடியவில்லை.

பரீட்சை முடிந்து பாடங்களின் பெறுபேறுகளுக்காக மாணவர்கள் காத்துக்கிடந்த நாள்அன்று, வெறொரு வகுப்பறையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த அவர் எதிரும் புதிருமாக என்னைச்சந்தித்ததும், உனக்குத்தான்

இம்முறை அதிகூடிய புள்ளிகள் என்றார். எனக்கா! என்மனது என்னையே கேட்டுக்கொண்டது. சாத்தியமானதா இது, உள்மனது வேறொரு முடிவுக்குள்தள்ளியது, ஆசிரியராக மட்டுமின்றி, உறவினராகவும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால், குறைந்த புள்ளிகள் எடுத்துவிட்டேன் என்ற வெறுப்பு மிகுதியால் அப்படிச் சொல்கிறார் என்ற சோகமுடிவுடன் கால்கள் தள்ளாட அவ்விடத்தை விட்டகன்றேன்.

மறுநாள் வகுப்பறைக்கு வந்து, மாணவர்களின் புள்ளி விபரங்களை வாசித்தார், அவர் கூறியபடியே அதிகூடிய பெறுபேறு எனக்குத்தான் கிடைத்திருந்தது. வெகுவாகப்பாராட்டினார் ஆனால் அதிகூடிய புள்ளிகள் 47 மட்டுமே அன்றிலிருந்து ஆங்கிலபாடத்தின் மேலிருந்த பயம் கலந்த வெறுப்புணர்வும் கரைந்து போகலாயிற்று.

காலங்கள் கரைந்தோடின, பின்னைய நாட்களில் என் ஆசானை எத்தனை தடவை சந்தித்தேனோ அத்தனை தடவையும் கனிவோடு அவர்கூறிய வார்த்தைகளே என்னுள் கரும்பாய் இனித்துக் களிப்படைய வைத்தது, புனிதமான ஆசிரியத் தொழிலுக்கு முடிபுனைந்த ஒருசிலருள் மாமலையாய் உயர்ந்து நிற்கும் இப்புகழுக்குரியோனிடம், பிறந்த மண்ணின் மேல் காதலும், உறவினரை நேசிக்கும் பளப்பாங்கும், தமிழுணர்வும் வெகுவாகவே நிறைந்திருந்தது.

காலதேவன் இம்மாமனிதனைக் கையகப்படுத்திக் கொண்டாலும், சாதனையாளனாக உயர்ந்து நிற்கும் இவ்வாசானின் பிரிவுக்காக கண்ணீர் விடும் எத்தனையோ மாணவமணிகளைப் போலவே என் கண்களும் நன்றியறிதலுடன் கண்ணீர் மலரிட்டு அஞ்சலி செய்கிறது!

ஓ ஆண்டவனே! என் வேண்டுதலுக்ஓரளவேனும் செவிகொடுப் பவனாக நீ இருந்தால், நான் உன்னிடம் வேண்டுவதெல்லாம் என் மனம்நிறைந்த ஆசானையும் உன்பாதத்தோடு அணைத்துக்கொள் என்பதுதான்.

**மயில்வாகனம் அமரசிங்கம்**

**ஒஸ்லோ, நோர்வே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடிய பல்கலைக் கழகத்தின் மறைவு

நாற்புறமும் கடல் சூழ் நெடிய நன்மணித்தீவில் பார்புகழ் "பக்தி" வழித்தோன்றல் சின்னர் இராமநாதர் பேர் உயர வந்தமகன் பேரறிவாளன் என்றும் சீரோடு சிறப்புற வாழ்ந்திருந்த நல்லாசான் சின்னத்தம்பி. அன்புக்கும் பண்புக்கும் அரவணைப்புக்கும் என்றென்றும் சொந்தான எமது அன்புச் சகோதரனே! இன்றும்மை இழந்து தவிக்கின்றோம் நாமிங்கே. என்சொல்வோம் கொடிய விதியின் நிலை வலிதே அண்ணன், தம்பி, பிள்ளைகளாய் பிறந்தாலும் நாமென்றும் ஒன்றுக்குள் ஒன்றாக ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோம் மண்ணை விட்டு வந்தபின்பு தொலை தொடர்பில் பேசினோம் மறதியெனும் நோயதனால் இறுதிவரை தொடரலையே. இறுதிநேரத்தில் நாம்இத் தூர தேசத்தில் இதயம் கனக்கிறதே எம் கண்ணீரால் அஞ்சலிகள்

உறவுக்கும் அப்பால் உம் சேவைகளோ அளப்பரியது பிறந்தமண் முன்னேற சிறந்த அதிபராய் மகாவித்தியாலயத்தில் மறக்கமுடியாத மாபெரும் மனிதன் அன்றோ இறந்தது என்ன உடல் மட்டும் தானன்றோ.நிமிர்ந்த நடையென்ன நேர்கொண்ட பார்வையென்ன உயர்ந்த குணமென்ன உன்னத நோக்கமென்ன வியந்து பார்க்க வைக்கும் கம்பீரமென்ன கண்டிப்பான தோரணையென்ன தனிக்காட்டு ராஜாவாய் சிங்கம்போல் வாழ்ந்தவரே.

பள்ளியில் பிள்ளைகளை பக்குவமாய் வழிநடத்தி துள்ளித் திரிந்தவரை துடுக்கடக்கி பண்படுத்தி கல்லைச் செதுக்கி சிலையாக்கும் சிற்பியென நல்லாக்கி வைத்ததனால் உலகப் பந்தெங்கும் உலாவரும் வைத்தியர்கள் பொறியாளர்கள் எத்தனையோ எல்லாப் பதவிகளிலும் இலங்குபவர்கள் எத்தனையோ எல்லோரும் உம் மறைவை எண்ணிக் கலங்குகிறார் நல்லோனே எந்நாளும் எம்மனதில் வாழ்ந்திருப்பீர்.

அரும்பாடுபட்டு அரும் பெரும் சேவைகளை அன்னை மண் கல்விக்கு எடுத்து வந்த பேராளன் அயராத உழைப்பாலே அரும்பெரும் சாதனைகள் அன்றாடம் படிப்படியாய் புரிந்து வந்த மாவீரன் இலங்கை, இந்திய பல்கலைக்கழகப் பட்டதாரி. ஆசிரியராக, அதிபராக, அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதிபதியாக, கொத்தணி அதிபராக கல்விப்பணிப்பாளராக எத்தனை பதவிகள். இன்னும் சொன்னால் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராக நெடுந்தீவு கிராமசபையில் விசேட ஆணையாளராக, நயினையின் ஆசிரியபயிற்சிக் கலாசாலையின் முன்னோடியாக நடமாடிய பல்கலைக்கழகம் நமைவிட்டுப்போனதுவே. அக்காவென தம்பியென அழைத்தகுரல் காதினிலே எப்போ இனிக் கேட்போம் எங்கு இனிக் காண்போம் உம் பிரிவால் துயருறும் அன்புநெஞ்ச அனைவரும் ஆத்மசாந்திக்காய் ஆலமா வனத்தானை வேண்டி நிற்போம்.

அறங்கள் யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

உங்கள் பிரிவால் துயருறும்

**அக்கா பொன்னம்மா இராமநாதன் குடும்பம்** (கனடா)

**தம்பிகள் தம்பிஐயா குடும்பம்** (கனடா)

**மயில்வாகனம் குடும்பம்** (கனடா)

**பொன்னுத்துரை குடும்பம்** (ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேச பிதா!

ஏர் உயர் குலத்தில்
எழிலோடு வாழ்ந்த
இணையராம்
இராமநாதர் சிவகாமிப்பிள்ளைக்கு
சீர் பெறு ப(க்)த்தி வழியில்
வந்து சேயாய் அவதரித்தார்
வளர் கலை பயின்று
வாலிபம் எய்தி - திறனோடு
கல்வியில் தேர்ச்சிகள் பெற்று
இந்தியா சென்று ஆங்கே
இளங்கலைப் பட்டம் பெற்றதோடு
ஆங்கில இலக்கியத்திலும்
அதி திறன் புலமை பெற்று
மீண்டும் தாயகம் ஏகி...
கல்வி எனும் பெருமரத்தை
காத்திரமாய் ஊரில் நிலைநிறுத்தி
நல்ல பணி செய்த- நாயகனாம்
அதிபர் நவரட்ணசிங்கத்தின் கீழ்
பிறந்த மண்ணிற்கு பெருமை
சேர்த்திட
அறம் சேர் ஆசிரியனாய்
அரும் பணி துவங்கி...
உழைப்பின் உயர்வால் - நல்
உத்தம குணத்தால்

ஆளுமை சேர் அதிபராய்
வட்டாரக் கல்வி அதிகாரியாய்
கொத்தணி அதிபராய்
கல்வித் துறையின் - உயர்
பாவிகளெல்லாம் கடிதன எய்தி
தேசத்தின் சிறப்பு ஆளுனராய்
சீர் செய் சமாதான நீதிபதியாய்
செழுமை வளர் சங்கங்களின்
தேர்ந்த பிரதிநிதியாய்
புலம் பெயர் சங்கங்களின்
போற்றும் இணைப்பாளராய்
இன்னும் அனேகம் இவர்
ஏற்றிட்ட பணிகள்
வழி அறியா நின்ற- பல
வகையற்ற இளைஞர்களுக்கு
உதவிகள் புரிந்து - அரச
ஊழியனாக்கிய பெருமகன்
ஊரின் உயர்வையே
உயிராய் மதித்தோன்
ஆயுள் உள்ளவரை- அந்த
ஆலமாவனத்தானுக்கே
சேவகம் செய்தோன்
அறிமுகம் செய்ய - எமக்கோர்
அடையாளம் ஆனார்

மனிதத்தை மதித்தமாபெரும் மேதை கலவியின் பயனை யாவரும் கண்டிடச் செய்தோன் இறுதி மூச்சுவரை நம் தேசத்தையும், மக்களையும் நேசித்து, அதற்காகவே உழைத்து அந்த மண்ணிலேயே அமரத்துவம் எய்திய இம் மாபெரும் மனிதனை நம் தேச பிதாவென ஏற்று மதிப்பளிப்போம்.

எம் தாயகம் உள்ளவரை வாழும் இவர் புகழ்!

**இந்த மாமனிதனை எழுதிட ஏராளம்... கட்டளை ஓர் பக்கம். கருத்தில் கொள்வீர்.**

*நன்றி!*

**இரா. வ. நாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசான்....

நான்....,
ஏதும் எழுதத்
தோன்றினால்
உன்னையே
முதல் எண்ணத் தோன்றும்
என் தாயார்
உன் கைகளில் என்னை
ஒப்படைத்ததை
இன்றும் உணர்வேன்
கல்வி எனும்
செல்வம் தேட
தேசம் கடந்தோர்
எத்தனையோ....
நானும்
கடல் கடந்து உன்னிடம் வந்தவன்
பிறப்பு
நிலைப்பதில்லை
அதன் ஆற்றலும்
மதிப்பும்
மரிப்பதில்லை
பள்ளியின்போது
பகிர்ந்து
வெளிவரும்போது
நிறைந்து
காணும் பொழுதெல்லாம் - நாம்
அள்ளி அணைக்கும்
அருள் வள்ளலல்லவா

ஆசான் நல் ஆசான்
என் ஆசான்....
காதில் விழுந்த
சொற்கள்
மேலில் விழுந்த
அடிகள்
வளர்நிலையின் படிகள் என
எண்ணாத
நாளில்லை
என் அதிபர் என்பேனா
சித்தப்பா என்பேனா
சீர்கோல் கொண்ட
எம்காலத்து
வேந்தன் என்பேனா
பல்கலையும் கற்று
பட்டறிவு பெற்று
பெற்ற பெரும் பேறுகளை
மற்றவர்க்கு இட்டு
பேருவகை கொண்டு
நிமிர்ந்து போபவனே
குனிந்து வணங்குகிறேன்
உன் கரங்கள் இரண்டையும்
கண்களில் ஒற்றி
நன்றிகொண்டு
என் ஆசான் அதிபர்
இரா. சின்னத்தம்பி
அவர்களை

**கண்ணீர் கலந்த நினைவுகளோடு**

**மணியம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தாருக்கு ! என் இதய அஞ்சலி....

அதிபர் கொழும்பு வந்த காலம் கொண்டாடினோம்.
மச்சான், மச்சான், அடே மச்சான்
கட்டினேன், கட்டினேன் - உன் அக்காவை
வாய் நிறைய சொல்வீர்கள் அன்பாய்
நானும் அத்தான், அத்தான் - என்று
அன்புடன் கூப்பிட்டுப் பெருமையடைவேன்.
சொந்தமா முக்கியம் - என்பேன் - இதுவா பெரியது
உங்கள் சேவை எண்ணிலடங்கா
செய்த சேவைகள் எவ்வளவு
எண்ணிப் பார்க்க முடியவில்லை !

ஆலம் விதைகள் விழுந்து விதை முளைத்து
பல விருட்ச மரங்களாக உருவாகிய
மாணவர்கள் இன்று எல்லாத் துறைகளிலுமே
பரிணமித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பசுந்தீவின் உத்தம புத்திரனாய் வந்துதித்தீர்
பெற்றோர் போற்றும் நன்மகனாய்
பெயர் சொல்ல ஒரு மகனாய்
பள்ளியில் நல்ல மாணவனாய் பரிணமித்தீர் !
உம் நிலை கண்டு, இனங்கண்டு
நல் பெறுபேறு தனைக் கொண்டு சென்றீர்
சென்னை கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்திறகு
அங்கு பல கலைகளும் கற்று
பல பேரை நட்புறவு கொண்டு
பட்டத்துடன் திரும்பினீர் தீவுக்கு.
அன்றிலிருந்து எம் தீவுக்கோர் விடிவு
நீர் ஓர் விடிவெள்ளி !
அவர்தான் எனது அத்தான் இரா.சின்னத்தம்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாணவனாய் அதே பள்ளியில் பயின்று
ஆசிரியனாய் அதிபராய் வந்தீர்.
கூட்டுறவு என்ன என்று முதன் முதலாய் செயல்படுத்தி
தீவுக்கோர் தீர்வைக் கொடுத்தீர்
உம் திறமை கண்டு கோட்டக்கல்வி அதிகாரியாய்
கொடுத்தார்கள் பதவியுயர்வு.
நாட்டு நிலமை கொஞ்சம் மோசமாதால்
துணிந்து எடுத்தீர் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பதிவிதனை.
பணிதான் என் கடமை என்று
வலயக்கல்விப் பணிப்பாளராய் ஆனீர்.
உம் விவேகம் கண்டு தீவின் விசேட ஆணையாளனாய்
ஆக்கினார்கள் - இதுவும் கடந்து
உம் சேவையை மதித்து வழங்கினர்
சமாதான நீதவான பதவிதனை

கிளிநொச்சியில் இவர் ஓர் அதிபர்
வந்த நாள் முதல் பள்ளியின் முன்னேற்றம் மிகப்பெரியது.
வலயம் தராத கல்வியை வளமாக
வழங்கினார் அதிபர் இனாமாக
இவரது இழப்பினால் அழுகிறது
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர் சமூகம்

உங்கள் அன்புக்குரிய மருமக்கள் இருவர்
மாட்டின், பேரம்பலம் - அவர்கள் என் உயிர் நண்பர்கள்
உறவு கடந்த நட்பு நமக்குள் இன்று நேற்றல்ல.

சாவெனப்படுவது சட்டை மாற்றம் என்பார்கள்
நீங்கள் சாதனை படைத்து சட்டையை மாற்றினீர்கள்
சாவுக்கு ஒரு சாட்டு எண்பார்கள்
அது உங்கள் வாழ்விலும் உண்மையாகப் போனதோ
ஒன்று புரிகிறது நல்லவர்கள் அழிவதில்லை
உங்கள் நாமம் நிலைத்திருக்கும்.

**நொச்சி ஆனந்தன், கிறிஸ்ரி ஆனந்தராசா**

தபாலதிபர் -கொட்டாஞ்சேனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான குருவாகவும் திகழ்ந்த நல்லாசிரியன்

மனித வாழ்க்கை, உலகியல், ஆன்மீகம் என இரண்டாகக் கருதப்பட்டாலும் அவை இரண்டும் இணையும் போதுதான் பூரணத்துவமடைகிறது என்பதை மறுப்பாரொருவருமில்லை. இதற்கு உறுதுணையாக அமைவது கல்வி அல்லது அறிவு ஆகும். "வாழ்க்கையே கல்வியின் பாடப்பொருள்" என்பார்கள் ஏ.என்.வைற்ஹெட். கல்வியை வாழ்விற்காதாரமானதை உலகியற் கல்வி என்றும் இறை உணர்விற்குரியதை ஆன்மீகக் கல்வி என்றும் வகுத்துரைப்பதுமுண்டு. இவ்விரு வகைக் கல்வியையும் வழங்கியவரைக் குரு என்போம். எமது குரு பாரம்பரியம் தெய்வ பாரம்பரியமாகும்.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற வள்ளுவரின் வாக்கும் "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது", "குருவில்லாத வித்தை பாழ்" என்பன போன்ற பழமொழிகளும் சைவ பாரம்பரியத்தில் குருவை இறைநிலைக்கு உயர்த்தி நிற்கின்றன. குரு என்பவர் அறிவு / ஞானத்தை அளித்தல் அறியாமை / இருளை அகற்றுபவர் எனப் பொருள் கொள்ளப்படும். இத்தகைய குருவை ஆசான், ஆசிரியன், தேசிகன், ஐயன் போன்ற பல பெயர்களால் அழைப்பதுடன் நால்வகையாகவும் நூல்கள் நுவலும்.

1. கணக்காயர் - இவர் மனிதருக்கு எழுத்தறிவித்து சொல்கற்றுக் கொடுப்பவர்.அதாவது அடிப்படை அறிவைக் கற்பிப்பவர்.
2. வித்தியாகுரு - நூல்களைப் போதிப்பவர், உலக நீதியை விளக்குபவர்.
3. கிரியா குரு - கற்ற நீதி நூல்கள், ஆகமங்கள் வழியில் நடைமுறைச் செயற்பாடுகளை விளக்குபவர் செய்பவர்.
4. ஞான குரு - ஞானத்தைக் கடைப்பிடித்து ஆன்மீக நெறியில் மனிதனை வழிநடத்திப் பிறவிப் பயனை அடையச் செய்பவர்.

கல்வியியலாளர்கள் பொதுவில் வித்தியா குரு நிலையிற் கொள்ளப் பட்டாலும் அதற்கும் மேலாக ஞானகுருவாகவும் பரிணமித்தவர் மறைந்தும் மறையாதும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் "அதிபர்" அவர்கள். "ஆசிரியருள் ஞான குருவே மிகப் பெரியவர் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவரே என்றும் மாறாத உண்மை அறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையினை வழங்கும் குருவாவார்" என்ற தமிழறிஞர் உ.வே. சாமிநாதையரின் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது.

மகாவித்தியாலயத்தில் அப்போதைய உயர்தர வகுப்பிற் (H.S.C) கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த போது "அதிபர்" அவர்கள் இந்தியாவில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து இளமாணி (B.A) பட்டதாரியாக தாயகம் திரும்பி எமது வகுப்பிற்குப் பொறுப்பாசிரிய சேவையில் அமர்ந்தார். இப்பாடசாலையிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுதல், அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருஷார்த்தம் நான்கையும் மாணவர்கள் பெறுதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு தனது பணியைச் சிறப்புடன் செய்து வந்தார். தமிழையும் இந்திய வரலாற்றையும் எமக்குக் கற்பித்துக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் கற்பிக்கப்பட வேண்டிய விடயதானமாயிற்று. அதீனத்தின் வரலாற்றையும் ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஆற்றிவரும் பணிகளையும் திருமூலநாயனார் அரச மரத்தடி நிழலின் கீழ் 3000 ஆண்டுகளிலிருந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக 3000 திருமந்திரங்களையும் உலகத்தாருய்யும் பொருட்டு அருளியமையையும் ஆசிரியர் எடுத்து விளக்கினார். அப்போதனையானது எனது அடிமனதில் ஆழமாக வேரூன்றியதுடன் காலப்போக்கில் ஆன்மீகத் துறையில் ஈடுபடவும் வழிவகுத்தது.

ஆனால் அப்போது என்றோவொருநாள் அடியேனாகிய என்னையும் ஆதீனத்துடன் தொடர்பு கொள்ள வைக்குமென்பதையும் ஆன்மீகக் கல்வியான சைவசித்தாந்த சாத்திரப் பெருங்கடலினை எட்டிப்பார்ப் பதற்குரிய வாய்ப்பினை நல்கப் போகிறதென்பதையும் உணர்ந்து கொள்ளக் கூடிய பக்குவ நிலையில் இருக்கவில்லை.

பாடசாலைக் கல்வியை முடிந்து அரச சேவையில் இணைந்து ஏறத்தாழ 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு நிலையெய்திய பின்னர்தான் உள்மனதில் புதைக்கப்பட்ட வித்தாகிய அப் போதனை துளிர்விட ஆரம்பித்தது. இப்போது தான் சைவசித்தாந்தப் பயிற்சியை ஆரம்பிக்கவும் அதன் மூலம் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் ஆதீனத்தில் இணைந்து கற்பதற்குரிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. அத்துடன் திருவாவடுதுறை ஆதீனத்தையும் அங்கு திருவருள் பொழிந்து கொண்டிருக்கும் ஞானப்பெருங்கூத்தன் பாதாரவிந்தங்களையும் அருள் செங்கோலோச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவருள் வழங்கியருளும் குரு மகாசந்நிதானம் அவர்களையும் மனம் மொழி மெய்களால் வணங்கி அருள்பெறும் பேறு வாய்த்துள்ளது. இவற்றிற்கெல்லாம் "அதிபர்" அவர்களின் அன்றைய தூரதிஷ்டியுடனான கல்வி (ஆன்மீக) போதனைகளே மூலகாரணமாயமைந்தன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆகவே "அதிபர்" அவர்கள் வித்தியா குருவாகத் திகழ்ந்த அதே வேளை எல்லாவற்றிற்கும் மேலாக ஞான குருவாகவும் கல்விப் பணியாற்றிய கல்விமானாகவும் திகழ்ந்தார்.

மேலும் பல்வேறு வழிகளில் தன்னலமற்ற சேவையாற்றிப் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்த பெரியார் என்பதை யாவருமறிவார்.

**"நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டும் உலகு"** - திருக்குறள்

மண்ணுலக வாழ்வை மறந்து விண்ணுலக வாழ்வினராகிய ஆசிரியப் பெருந்தகையின் ஆன்மா அமைதியடைய எல்லாம் வல்ல ஞானமார்த்தப் பெருங்கூத்தன் திருவடிகளிற் பிரார்த்தனை செய்வோமாக.

அவ்வாறான ஒரு பெருமகனை இழந்து பிரிவுத்துயரால் அல்லற்படும் துணைவியார் மற்றும் உற்றார், உறவினர், துயரில் பங்கேற்பதால் மனம் அமைதி பெறுவதாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் குருவடிபோற்றி நிற்கும்
**மாணவன் சு.குமாரசாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க அவர் நாமம்

நல்ல ஆசிரியர்கள் எப்பொழுதும் நல்ல மாணவர்களையே உருவாக்குகிறார்கள். அந்த நல்ல மாணவர்கள் சமூகத்தில் நல்ல கனிதரும் விருட்சங்களாகவே வியாபித்து இருப்பார்கள். கல்வியுடன் நல்ல பண்புகளையும் விதைத்துப் பயிராக்கிய ஆசிரியர்களுள் எமது குரு. இரா.சின்னத்தம்பி அவர்களும் எங்களுக்கு முதன்மையானவர் மாணவர்களை தம் வழிப்படுத்தி நல் நிலைப்படுத்தியவர் அவர்.

நாங்கள் உயர் வகுப்பில் இருந்த காலத்தில், உயர் வகுப்பிற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவியது. பல ஆசிரியர்கள் மாற்றலாகிச் சென்றமை இதற்கு முக்கிய காரணம். எனினும் எமது மாவித்தியாலய தாபக அதிபர் பேராசான் உயர்திரு.சி.வே.எ.நடராட்ணசிங்கம் அவர்களின் ஆலோசனைக்கு அமைய திரு.சின்னத்தம்பி அவர்கள் மிக ஆர்வத்துடன் எங்கள் வகுப்பைப் பொறுப்பேற்று தமிழ், (இலங்கை, இந்திய, பிரித்தானிய) வரலாறு, அரசியல் ஆகிய பாடங்களை தனித்து நின்று மிகச் சிறப்புடன், நேர சூசிகள், கால நேரங்கள் பாராது, நேரம் கிட்டும் போதெல்லாம் மிகவும் அர்ப்பணிப்புடன் போதித்தமை சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின்னரும் பசுமரத்தாணியாக என்றும் பதிந்து நிற்கின்றது. இவர் பேராசான் நவரட்ண சிங்கத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியர் மாத்திரமல்ல அவருக்கு நம்பிக்கைக்குரிய பிரதி அதிபராகவும் செயற்பட்டவர். நட்புக்கும், உயர் கல்வி மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கும் மனிதாபிமான செயல்முறைகளுக்கும் அக்காலத்தில் இலக்கணமாக திகழ்ந்தவர்.

நெடுந்தீவில் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருட்கள் வழங்கும் பண்டசாலைகளாக இருந்ததே தவிர வேறு பல செயற்திட்டங்களை அவை நிறைவு செய்யவில்லை. இந்த நிலைமையில் கொழும்பில் பணியாற்றி வந்த எம்மூர் அரச உத்தியோகத்தர்கள் சிலர் இணைந்து நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பல சேவைகளை ஆற்றக் கூடிய கூட்டுறவுச் சங்கம் ஒன்றை 1961 ஆம் ஆண்டு பதிவு செய்தனர். இதற்கு முன்னின்று அரும்பாடுபட்டவர்கள் திருவாளர்கள் கு.குணநாயகம், எஸ்.ஆர்.பசுபதி, ஞா.மரியநாயகம் பிள்ளை, அ.சவரிமுத்து, நி.தனிநாயகம், நா.சண்முகநாதன், ஐ.இராஜவராயர், கு.புண்ணியமூர்த்தி ஆகியோருடன் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.சின்னத்தம்பி அவர்களும் இணைத்துக் கொள்கின்றனர். திரு.S.R.பசுபதி தலைவராகவும் சின்னத்தம்பி அவர்கள் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த வேளையிலும் திரு.பசுபதி அவர்கள் வெளியூரில் பணியாற்றி வருபவராக இருந்ததால் தலைமைப் பதவியைச் சின்னத்தம்பி அவர்கள் பொறுப்பேற்று பொதுச் சேவைக் கூட்டுறவு சங்கத்தை திறம்பட செயற்படுத்தினார். தொடக்கக் காலத்தில் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாததால் அக்காலத்தில் பங்கீட்டுப் பொருட்களாக இருந்த புடைவை, மிதிவண்டி ரயர்கள் போன்ற பல பொருட்கள் அவரின் நெடுந்தீவு கிழக்கிலுள்ள வீட்டில் வைத்தே மக்களுக்கு பங்கீடு செய்யப்பட்டமையை இன்னும் பலர் நினைவு கூருவர். யாழ்ப்பாணத்தில் ஒருயார் சீத்தைத்துணி ரூபா 1.70 சதம் விலையாக இருந்த போதிலும் இங்கு ரூபா 1.65 சதம் விலையில் விற்பனை செய்தது சிறப்பு அம்சமாகும். (வீட்டிலுள்ளவர்கள் அயலவர்கள் தங்களுக்குப் பிடித்த பிடவைத் துணிகளைத் தெரிவு செய்து ஒதுக்கி வைக்கவும் இவர் அனுமதிக்கவில்லை என்பதும் சிலர் இதனால் அதிருப் திப்பட்டுக் கொண்டமையும் அக்காலத்தில் பலரும் அறிந்திருந்தனர்.)

நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத்திற்கு அத்திவாரக் கல் நாட்டிய சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.இ.இராஜரட்ணம் அவர்கள், இச்சங்கம் தீவுப்பகுதியிலேயே முன்மாதிரியாக இருப்பதாக தலைவர் திரு.சின்னத்தம்பி அவர்களையும் நிர்வாகக் காரியதரிசி திரு.வி.சுப்பிரமணியம் அவர்களையும் நிர்வாக சபையினரையும் பாராட்டியதையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

1971 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 12 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சட்டத்தின்படி தொடக்கப்பட்ட ஆரம்ப சங்கமாக புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடக்கப்பட்ட பொழுது நெடுந்தீவு, நயினாதீவு சங்கங்கள் எல்லாம் அதனுடன் இணைக்கப்பட்டன.

சட்டத்தரணி ப.கதிரவேற்பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்ட அதன் இயக்குனர் சபையின் நெடுந்தீவுப் பிரதி நிதியாக தெரிவு செய்யப்பட்டு அச்சங்கத்தின் உப தலைவராகவும் அதிபர் அவர்கள் பணியாற்றினார். பிற்காலத்தில் நெடுந்தீவுக்குத் தனியானதொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அவசியம் என வலியுறுத்தியவர்களில் இவரும் முன்னணியில் இருக்கின்றார்.

1980 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் நெடுந்தீவிலும், வெளியிடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் பணியாற்றிய வேளையிலும் கூட்டுறவுச் சங்கம் வளர்ச்சிக்காக பல ஆலோசனைகளை அவ்வப்போது நிர்வாகத்திலிருந்த தலைவர்களுக்கு வழங்கி வந்தாரே தவிர சங்கத்தில் பதவியைக் கைப்பற்றி தம் செல்வாக்கை நிலைநிறுத்த முயலவில்லை என்பது அவருக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக அனைத்து மக்களுக்கும் பல வகையிலும் சேவையாற்ற முடியும் என்பதுவும் நெடுந்தீவு கூட்டுறவில் மேம்பட்ட ஓர் கிராமமாக மிளிர வேண்டுமென்பதும் அவரின் எண்ணமாகவே எக்காலமும் இருந்தது.

அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக சேவையாற்றி வந்த அவர் 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தீவுப் பகுதி யாழ் பெருநிலப்பரப்பிலிருந்து, விடுதலைப் போராட்டம் காரணமாக துண்டிக்கப்பட்டதும். தீவுப்பகுதி தனியானதொரு நிர்வாகப் பிரதேசமாகப் பிரிக்கப்பட்டது. திரு.க.சண்முகநாதன் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபராகவும், திரு.யோ.சே.செல்வநாயகம் அவர்கள் உதவி அரச அதிபராகவும், திரு.சின்னத்தம்பி அவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் நியமனம் பெற்றனர். கல்வி சம்பந்தமான சகலதிற்கும் இவர் திருகோணமலை கல்வி அமைச்சின் இணைப்பாளராகவே இருந்து செயற்பட்டு வந்தார்.

1994 ஆம் ஆண்டுகளில் தீவுப் பகுதி ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் தொலைக் கல்வி பயிற்சி மூலம் செயற்படுத்த அமரர் அவர்களும் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் அவர்களும் புலவர் அரிய நாயகம் அவர்களும் தீர்மானித்து நெடுந்தீவிலும், நயினா தீவிலும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு இடத்தில் பயிற்சிகளை மாறி, மாறி கற்பிக்கத் திட்டமிட்டு ஆரம்பித்தனர். திருகோணமலை கப்பற் சேவைக் காலத்தில் அமரரின் சேவை மிகவும் இன்றியமையாததாக காணப்பட்டது. அவர் எந்தவித அயர்வு, சோர்வு இன்றி செயற்படுவார் என ஒரு தடவை அன்றைய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.சடாச்சர சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

அமரர் அவர்கள் இடதுசாரித்துவ சிந்தனை கொண்டவராக இருந்து செயற்பட்டமையும் இன மத வேறுபாடின்றி மக்களுடன் உறவாடுவதும் அவரின் நல்ல பண்பு. ஆன்மீகத்திலும் மத நம்பிக்கையிலும் பற்றுறுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். நெடுந்தீவு கிழக்கு ஆலமாவன சித்திவிநாயகர் ஆலயம் மீள் புனருத்தாரணம் செய்வதற்கு மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு ஆலய கும்பாபிஷேகம் நடைபெறவும் உழைத்தவர். திரு.சின்னத்தம்பி அதிபர் முன்னின்று ஊக்கப்படுத்தாவிட்டால் இந்த ஆலயத்தை விரைவாக புனரமைப்புச் செய்ய இயலாமல் போயிருக்கும் என அவ்வாலயத்தின் செயலாளர் கதிரேசு (கிராம அலுவலர்) அவர்கள் ஆலயத்தின் பேச்சுக்கள் வரும் போதெல்லாம் குறிப்பிடுவார்.

அவர் பிற மதத்தவரையும் நேசித்தவர். தென் இந்திய திருச்சபை யாழ்.ஆதீனத்தினை அக்காலத்திலிருந்து பேராயர் பேரருட் திரு.டி.ஜே. அம்பலவாணர் அவர்களுடன் தொடர்பு கொண்டு நெடுந்தீவு மத்தியில் இயங்கும் பகற்பராமரிப்பு நிலையம் போன்று மேற்குப் பகுதியிலும் அப்பகுதிச் சிறார்களுக்கு அவசியமெனச் சுட்டிக் காட்டி நெடுந்தீவு மேற்கிலுள்ள தென் இந்திய திருச்சபைக்குச் சொந்தமான காணியிலேயே அமைக்க வழிசமைத்தார். நெடுந்தீவுப் பாடசாலைகளில் முன்னணியில் உள்ள பிள்ளைகளின் புள்ளி விபரத்தை எடுத்துப் பார்த்தால் அப்பிள்ளைகள் எல்லோரும் தென்னிந்திய திருச்சபையின் சிறுவர் பராமரிப்பு நிலையம் அல்லது பாலர் பாடசாலையில் அடிப்படைக் கல்வியைப் பெற்றவர்களாகவே உள்ளனர். இந்த சிறப்பிற்கு மாண்புமிகு சின்னத்தம்பி அவர்களுக்கும் பெருமை உடைத்து என்றால் அதில் மிகை ஒன்றுமில்லை. கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களுடனும், குருமார்களுடனும் எப்பொழுதுமே நெருங்கிய நட்புக் கொண்டவர் அவர். கிறிஸ்தவ விழாக்களில் மகிழ்ச்சியோடு கலந்து கொள்வார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக சிலகாலம் பதவி வகித்தார். அக்காலத்தில் குடிநீர் வழங்கலிலிருந்த குறைபாடுகளை நீக்கக் கூடிய கவனம் எடுத்ததுடன் அலுவலக முகாமைத்துவத்தையும் வழிப்படுத்தியுள்ளார். பணியாளர்களை நண்பர்களாகவே மதித்து நடந்தவர் அவர். தனது வாழ்நாளில் படித்துச் சேகரித்த அரிய பல தமிழ், ஆங்கில நூல்களை நெடுந்தீவு பிரதேச சபையின் பொது நூலகத்திற்கு அர்ப்பணம் செய்துள்ளார். உயர் கல்வி மாணவர்களுக்கு இவை பெருந்துணை புரிகின்றது.

அவரிடம் கற்ற மாணவர்கள் இன்று பூகோளமயப்படுத்தப்பட்ட உலகில் பரந்து விரிந்து வேர்விட்டுக் கிளை பரப்பி விழுதாகி பல நாடுகளில் வேரூன்றி இருப்பதை நாம் அறிவோம். கனடா, ஐக்கிய இராச்சியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா போன்ற எம்மவர்கள் அதிகம் செறிந்து வாழும் இடங்களில் அவரின் நினைவாக கூட்டங்கள் நடத்தியிருப்பது அவரின் பணி எத்துணை மகத்தானது என்பது எமக்கு நன்கு புலப்படுகின்றது.

எம்மூரின் பாரம்பரியமாக இருந்து வரும் விருந்தோம்பலில் மகிழ்வு கொள்ளும் அவரும், முகமலர உபசரிக்கும் அம்மாவும், கலகலப்புடன் வரவேற்கும் மகனும் நிறைகுடமாக உள்ள உவப்புடன் விருந்தினரை எதிர் கொள்ளும் மருமக்களும் சிறப்பிற்குரியவர்.

ஆசிரியர், அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கூட்டுறவுச் சங்கத் த்லைவர், விசேட ஆணையாளர், ஆலய தர்மகர்த்தா, சமாதான நீதவான் எனப் பல பதவிகளை வகித்து ஒவ்வொரு துறையிலும் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டவர். எல்லோருக்கும் இனியவர் அவரை எல்லோரும் அன்புடனும் மதிப்புடனும் உளமார நேசித்தார்கள்.

"நீர்க்கோல வாழ்வு. இது நெடிது நாள் இருப்பதில்லை." என்ற ஆன்றோர் வாக்கு என்றாலும் இன்னும் பல ஆண்டுகள் வாழக் கூடிய வயதெல்லை அவரிடமிருந்தது. எனினும் அவர் நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் பிரிவுத் துயரிலிருக்கும் அம்மா, மகன், மருமகள் மற்றும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எம்மூர் வரலாற்றில் என்றும் அவரது பணி நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க் அவர் நாமம்.

நெடுந்தீவு
இரா.தர்மலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கரு விழியில் உறைந்தவருக்கு எள் இருவிழியால் அஞ்சலிகள்

அகரம் தந்து எனக்கு அகிலம் காணவைத்த ஆசான் சின்னத்தம்பி அவர்களின் நினைவு இப்பதிவேடு சுமந்து வருவது எங்கள் இதயத்திற்கு இதமளிக்கிறது. கல்விப் புலத்திலே கலங்கரை விளக்காய் நின்று திசைமாறிய மாணவப் பருவங்களை குறித்த திசை நோக்கி நகரவைத்த பெருமை இவரையே சாரும். கடல் மைல் கடந்து நெடுந்தீவு அமைந்தாலும் கல்விக்கலை அது இன்னும் கடலலைபோல் எழுந்து நிற்பதற்கு அடித்தளம் இட்டவர் சின்னத்தம்பி ஆசிரியர் ஆவார். நெஞ்சில் நிறைந்த இவர் கல்விப் பணியினை எழுத்தில் வடிப்பதற்கு சொல் வறுமை உண்டு.

தீவகம் தீராத கல்வித் தாகத்தோடு எழுந்து நின்ற போது உப்புக் காற்றிலும் புழுதி திரண்டெழும் வீதிகளாலும் சோதனைகள் கடந்து மனதிலே வேதனைகளைத் தாங்கி மாணவர்களின் கல்வியிலே சாதனைகளைப் படைக்கச் செய்த பெருமகன் இவரே. தீவகத்திற்கான கல்வி வரலாற்றுக்குப் பதிவுகள் பதியப்படுமாக இருந்தால் சின்னத்தம்பி ஆசிரியர் பக்கங்கள் மறுக்கவோ மறைக்கவோ முடியாத பக்கங்களாக மிளிரும்.

1990 களில் பரீட்சை எழுதிய மாணவர்களின் மனச்சாட்சி சில உண்மை களைப் பறைசாற்றும். பரீட்சை எழுத முடியாது ஏக்கத்தோடு நின்ற மாணவர்களின் தாக்கத்தை போக்குவதற்காக தோழர் தேவாவின் கரம் பற்றி எம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய பெருமகன்.

தீவகம் தன் இறுதி மூச்சுள்ளவரை இந்தக் குருமகனை என்றும் நினைவில் கொள்ளும். தலை நிமிர்ந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கி வைத்த இந்த வசிட்ட மகரிஷி என்றும் தீவக மூலகுரு. சின்னத்தம்பி ஆசிரியர் இருந்த காலத்தில் அவரோடு வண்டாடிய பூக்களாய் கொண்டாடி மகிழ்ந்திருந்தோம். இன்று திண்டாடிப்போய் திசையற்றுத் தவிக்கின்றோம். இருந்தாலும் ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை என்ற நியதிக்கேற்ப நாமும் அமைதியடைகின்றோம்.

**சில்வேஸ்திரி அலன்ரின்** (உதயன்)
பாராளுமன்ற உறுப்பினர்
**ஈழமக்கள் ஜனநாயக கட்சி** (ஈ.பி.டி.பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு/மல்லாவி மத்திய கல்லூரி**

**Mu/Mallavi Central College**

மல்லாவி, யோகபுரம்

# இதய அஞ்சலி

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

## அமரர் உயர்திரு. இரா.சின்னத்தம்பி

அவர்களின் பிரிவுச் செய்தி அவரின் வழித்தோன்றலில் உருவாகிய அனைத்து மாணவர்களின் உள்ளங்களிலும் ஆழ்ந்த துயரை ஏற்படுத்தியுள்ளது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் அதிபராக அவர் கடமையாற்றிய காலத்தில் நானும் அவரது மாணவனாக இருந்து கல்வி கற்ற காலங்கள் மறக்க முடியாதவை. அதிபர் அவர்களின் சிறந்த ஆளுமையும் நல்ல உயர்ந்த பண்பும் இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பும் கொண்ட தலைமைத்துவம் அவருக்கே உரித்தான தனிச்சிறப்பாகும். அவரின் வரலாறு பதியப்பட வேண்டியதொன்றாகும்.

உயர்ந்த இலட்சியமும் நேரிய பார்வையும் கூரிய சிந்தனையும் எல்லோரையும் தன்பால் ஈர்த்து வழிகாட்டுகின்ற சிறப்பான முகாமைத்துவத்தினால் இன்று அவரது மாணவர்கள் பலர் சாதனை படைத்து நிற்கின்றார்கள். நெடுந்தீவு மக்களுக்காக அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. கல்விப் புலத்தில் பல கல்வி மான்கள், கல்வியியலாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரச திணைக்களங்களில் உயர் பதவிகளில் உள்ளோர், அதிபர்கள், ஆசிரியர்கள் என அரச பதவிகளிலும் வேறு திணைக்கள பதவிகளிலும் ஆயிரக்கணக்கானவர்களை உயர்நிலைக்கு உருவாகிய பெருமை அதிபர் இரா.சின்னத்தம்பி அவர்களையே சாரும்.

நெடுந்தீவின் மகத்துவம், ஊரின் சிறப்பு மக்களின் வாழ்க்கைப் பாணி அங்கு பிறந்தவர்களின் தனியான சிறப்பியல்புகள் யாவும் மேலோங்குவதற்கு காரணமானவர்கள் தனநாயகம் அடிகளார், அவரின் பின் அதிபர் அமரர் உயர்திரு நவரட்ணசிங்கம் தொடர்ந்து அதிபர் இரா.சின்னத்தம்பி என்பதில் எந்தவித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நான் மல்லாவி மத்திய கல்லூரியின் அதிபராக வரவேண்டும் என்ற சிந்தனையும் எண்ணமும் தோன்றி உருவாகுவதற்கு எனக்கு அந்த வழிகாட்டலைத் தந்த தந்தை அமரர் இரா.சின்னத்தம்பி அவர்களே ஆவார்.

இவர் நெடுந்தீவு மண்ணின் மைந்தன். அவரின் செயற்பாடுகள், சாதனைகள் யாவும் அடுக்கிய வண்ணமே செல்லலாம். அவரை நாம் ஒரு மாமனிதராக கௌரவிக்கின்றோம்.

அதிபர் அமரர் உயர்திரு. இரா.சின்னத்தம்பி அவர்களது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருடைய துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.து.யேசுதானந்தர்,**
அதிபர்
மு/மல்லாவி மத்திய கல்லூரி.
(பழைய மாணவன் -
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்ப சலுகைகளுக்கு மயங்காத .......

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது இலகுவான காரியமன்று. எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என்பது கல்வித்துறைசார் பணியாளரின் பண்பாகும். இந்நிலை தளம்பும் போது, முழுமுறையுமே ஆட்டம் காணத் தொடங்கும். இரா.சின்னத்தம்பி ஐயா அவர்கள் கல்விப்புலம் சார்ந்த பணியாளர்களில் இப்படித்தான் கல்வியியலாளர்கள் வாழ வேண்டுமென்றதொரு தொகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இவரின் நடை, உடை, பணி, பண்பு, பாவனை என்றனைத்தும் ஆசிரியர் துறைக்கு அணி சேர்ப்பனவாக அமைந்தன.

நான் இரா.சின்னத்தம்பி அவர்களுடன் பழகிய காலம் மிகக் குறுகியது. இக்காலத்தில் அவரைப்பற்றிய விடயங்களைத் தெரிந்து கொண்ட அதே வேளை அவரிடம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளவும் முடிந்தது.

விளையும் ப்யிரை முளையிலே தெரியும் என்பது போல ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று வேலணை மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இவர் புகழ் பூத்த கல்வி நிறுவனமான சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோவையும் மேற்கொண்டார்.

தனது பிறந்த ஊரிலுள்ள நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் பின்னர் அக்கல்லூரியின் அதிபராகவும் இருந்து பல மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமை இவரையும் இவர் சார்ந்த ஆசிரியர் அணியையும் சார்ந்ததாகும்.

தனது பணியை மிக உயர்ந்த நிலையில் பேணும் ஆற்றலைக் கொண்ட கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி அவர்கள் எந்த நிலையிலும் எந்த சொற்ப ஆசைகளுக்காகவும் தன்னை விற்காது இறுதிவரை நேராக நின்ற பெருந்தகையானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**கலாநிதி உ.நவரத்தினம்**
தேசிய கல்வி நிறுவகம்- மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைந்த சிந்தனையாளன்

கடந்த 16.03.2013ம் திகதி சனிக்கிழமை திரு.இரா.சின்னத்தம்பி கல்விப்பணிப்பாளர் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி எமது குடும்பத்துக்கே மிகவும் ஆழ்ந்த துக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியது.

இவர் எனக்கு குருவாகவும், எனது தற்போதைய பணியின் வழிகாட்டி யாகவும் விளங்கியவர், தனது பட்டப்படிப்பை முடித்த பின் ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, கல்விப்பணிப்பாளராகப் பல பதவி வகித்து நெடுந்தீவு மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். அரசு கொத்தணி முறைமையைக் கொணர்ந்த போது கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் கொத்தணி அதிபராகக் கடமை யாற்றிய பெருமை இவருக்குண்டு. இத்தனை பதவிகளை வகித்தாலும் பொதுத்தொண்டு ஆலயத் தொண்டு செய்வதிலும் சளைத்தவரல்லர். 1987ம் ஆண்டு நெடுந்தீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பிரயாணச் சேவை 40 நாட்களுக்கு மேலாக தடைப்பட்டு மக்கள் பட்டினியால் வாடியவேளை நெடுந்தீவின் பங்குத்தந்தை, முன்னாள் கிராமசபைத் தலைவர் ம.கணபதிப்பிள்ளை ஆகியோருடன் உயிரைத் துச்சமென மதித்து தனிப்பட்ட படகு மூலமும் வாகன மூலமும் யாழ் சென்று அரிசி மற்றும் இதர பொருட்களை கொண்டு வந்து வழங்கியமை இவரது நாட்டுப்பற்றை பறை சாற்றுகின்றது.

1990ம் ஆண்டு தீவகம் தனிமைப்பட்ட பொழுது தீவகத்தில் 3500 மாணவர்களுக்கு மேல் கல்விச் செயற்பாடு தொய்வு நிலையில் இருந்த வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வருகை தந்து துணிச்சலுடன் விசேட கல்விப்பணிமனை ஏற்படுத்தி சிறார்களின் கல்வியை மேம்பாடடைய வைத்த உத்தமன்.

1971ம் ஆண்டு தொடக்கம் 1979ம் ஆண்டு வரை நெடுந்தீவுப்பகுதி புங்குடுதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்த வேளை இவரும் இயக்குனராக நியமிக்கப்பட்டார்.இதனைப் பயன்படுத்தி 1980ம் ஆண்டு நெடுந்தீவுக்கு தனியான ப.நோ.கூ சங்கத்தை அமைக் கப்பாடுபட்டு வெற்றிகண்டவர்.

மேலும் நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபையின் தலைவராகத் தொடர்ந்து பணி செய்து கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கொடியேற்ற திருவிழாக்கோயிலாக மாற்றியவர். இவ்வாறு இவரது பணிகளை விபரிக்க எழுத்தில் அடங்கா.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

க. அரசரத்தினம்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்- நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப்பூக்களால் காணிக்கை

அமரர் இரா.சின்னத்தம்பி அதிபர் அவர்கள் நெடுந்தீவின் கல்வி வரலாற்றிலே மறக்கமுடியாதவர். ஏனெனில் ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக கல்விப்புலத்தை அலங்கரித்தவர் மட்டுமல்ல அளப்பரிய சேவையுமாற்றியவர்.

அன்னார் எமது உறவினர் என்பதை விட எமக்கு ஆசானாக இருந்து கல்விபுகட்டிய ஆசான், அத்துடன் அவரதுசேவை கல்வியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. நல்லதொரு கூட்டுறவாளனாகவும் சமயத் தொண்டனாகவும், மட்டுமல்லாமல் பிரதேசசபையினுடைய ஆணையாளராகவும் சேவை செய்தவர். இவ்வாறான புத்திஜீவிகள் எம்முடன் இருந்து எம்மை வழிநடத்த வேண்டியவர்களின் இழப்பானது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

பிறப்பு ஒன்றிருந்தால் இறப்பு என்பது நிச்சயம். எனவே அவரது இழப்பு பேரிழப்பாக இருந்தாலும் "விதியினை யாராலும் மாற்றமுடியாது" என்பதற்கமைய மனச் சாந்தியடைவோம். நிச்சயமாக அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதார விந்தங்களை சேர்ந்திருக்கும்.

அன்னாரின் பிரிவு குடும்பத்தாருக்கு மட்டுமல்ல எமது தீவிற்கும் பாரிய இழப்பாகும். பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆறுதல்களைக் கூறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

**திருமதி. சா. கிருஷ்ணதாஸ்**

அதிபர்

மகாவித்தியாலயம் - நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல. 36, பாலிநகர்

வவுனிக்குளம்

2013.03.22

ஆழ்ந்த துயரத்தில் உறைந்திருக்கும் எனது அன்பிற்குரிய உடன் பிறவாச் சகோதரி திருமதி. பு. சின்னத்தம்பி அவர்கட்கு மிகுந்த அனுதாபத் துடனும் ஆறுதல் தெரிவித்தும் வரைந்து கொள்வது,

தங்கள் பாசத்திற்குரிய கணவர் அமரர் திரு.பு.சின்னத்தம்பி அவர்கள் காலமானது அறிந்து மிகுந்த வேதனையும் கவலையம் அடைகின்றேன். இது தங்களுக்குப் பெருந்துன்பமாக அமைந்திருக்கும் இந்த வேளையிலே தங்கள் கவலையைத் தீர்க்கும் ஒரு சிறு துரும்பாக இம்மடல் அமைய வேண்டுமென இறைவனை முதலில் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

அன்னார் சொர்க்க வாசலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே எனது ஆத்மார்த்தமான வேண்டுதல்களையும் கூடவே அனுப்பி வைக்கிறேன். இதுவே எனது மனமார்ந்த காணிக்கை வேறு என்ன நிச்சியமானது.

அவரது வாழ்நாளில் சிறந்த கனிகளைக் கொடுத்த ஒரு தனித்துவமான கல்விமான். பிறருடன் அன்பைப் பகிர்ந்து கொள்வதிலும் தலைசிறந்தவர்.

" அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றுதான் வள்ளுவப் பெருந்தகையும் குறிப்பிடுகின்றார். நீரோடை ஓரத்தில் நடப்பட்ட மரமாகவும் பருவகாலம் முழுவதும் கனிகொடுக்கும் மரமாகவம் அமைந்திருந்த அவரது கல்விப் பணியின் பயன் தங்களுக்கும் தங்கள் மகனாரின் குடும்பத்தினர்க்கும் நிச்சயம் பயனளிக்கும் என்பதே எனது திடமான நம்பிக்கை. கல்விப் புலத்தில் அவரோடு இருந்த தொடர்புகள் மிகவும் உன்னதமானது. ஒரு பொழுதிலும் முகம் சுண்டியதோ கடிந்ததோ கிடையாது. நிறைவானவோர் கல்விமானாகவே கணிப்பிடப்பட்டிருந்தார். கவலையைப் பகிர்ந்து கொள்ளும் சூழ்நிலையிலும் இல்லாதது வேதனை தருகின்றது. போர் வடுக்களாலும், நீண்ட இடப்பெயர்வுகளாலும் எப்போ சந்திக்கப்போகிறேன்? எப்போ உரத்து அழப்போகிறேன்? என்று நினைத்தாலும் நெஞ்சத்தில் மௌனமாகஅழுவதும் பிரார்த்திப்பதும் தான் இயலுமாகவுள்ளது. கூடுமானவாரை கவலையைதவிர்த்து இறை அன்பிலும் நம்பிக்கையிலும் நிலைத்திருக்கத் தங்களைக் கேட்டுக்கொண்டு மடலை நிறைவு செய்கிறேன்.

இது தங்களின் அன்புள்ள சகோதரி

திருமதி. மேரிதிரேசா *(L.T. Pasupthy)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நல்வாழ்வுக்கு வழிகாட்டிய ஆசான்"

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நம் வையகத்தில் புகழோடு தோன்றி வளர்ந்து கல்வியில் உயர்ந்து தன்னலமற்ற சேவைகள் புரிந்து நிலையான நன்மதிப்பைப் பெற்றவர் அமரர். இரா. சின்னத்தம்பியவர்கள்.

இவர் கல்வியில் சிறந்தோங்கி ஆசிரியர், அதிபர், கொத்தணி அதிபர் ஆகிய நிலைகளைக் கடந்து கல்விப்பணிப்பாளராகி தனது சேவைகள் மூலம் அழியாப் புகழ்பெற்றவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

என்னைப் பொறுத்தவரையில் க.பொ.த.சாதாரண வகுப்புத் தொடக்கம் - க.பொ.த. உயர்தரம் வரையில் நெடுந்தீவு மகாவித்தி யாலயத்தில் எனக்கு நல் ஆசிரியனாகப் பணிபுரிந்திருக்கின்றார். நான் பல்கலைக்கழகம் செல்வதற்கு ஊக்குவித்தவரும் இவரே.

இவர் தனது சேவையில் கல்வி கற்பிக்கும் ஆசானுக்குரிய முழுத் தகைமையையும் கொண்டிருந்ததுடன் - தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோரும் கல்வியில் உயர்வடைந்து நாட்டில் நற்பிரசை களாக வாழவேண்டும் என்ற நோக்கோடு உயர்வு - தாழ்வு சமய வேறுபாடின்றி நற்சமூதாயத்தை உருவாக்க அரும்பாடு பட்டிருக்கின்றார்.

அது மட்டுமன்றி

"ஒழுக்கம் விருப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற வள்ளுவன் வாய் மொழிக்கேற்ப - மனிதன் எவ்வளவு உயர்வடைந்தாலும் அவன் வாழ்வில் ஒழுக்கமில்லையேல் அவன் வாழ்வதில் பயனில்லை என்பதை அடிக்கடி வலியுறுத்தி எதிர்கால மாணவ சமுதாயத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

மேலும் ஆசிரிய சேவையில் மாணவர்களுக்கு பாடத்திட்ட கல்வியை மட்டும் வழங்கியவரல்ல. மாறாக கல்வி வளர்ச்சியில் மாணவர்கள் ஒழுக்கம், ஆன்மீக நாட்டம், பொதுநலவாழ்வு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பின் மயமான சமாதான சக வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றைக் கடைப்பிடித்து முழுமனிதனாக நற்பிரசையாக வாழ வேண்டுமென்ற நோக்குடன் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தலைவர் களின் உயர் இலட்சியங்களை உதாரணமாக எடுத்துக்காட்டி நல் மாணவ சமுதாயத்தை உருவாக்கிய நற்சிந்தனையாளராக, சோஷலிச பொதுநலவாதியாக எதிர்கால நோக்கின் இலட்சியமாகவும் வாழ்ந்து வழிகாட்டினார்.

"பதவி உயரும்போது பணிவு வரவேண்டும் - அத்தோடு நற்பணி செய்ய துணிவும் வரவேண்டும்" என்று அடிக்கடி கூறுவதுடன்..

"தூயவை துணிந்த போது
பழி வந்து சேர்வதில்லை".

என்பதற்கேற்ப உள்ளதை உள்ளபடி சொல்வதும் நெஞ்சறிந்த உண்மைக்கேற்றபடி நடந்ததுமட்டுமன்றி தனது உயர்நிலை சேவையில் குறிப்பாக பல இடர்கள் மத்தியில் துணிந்து நின்று தீவக மாணவர்களின் வளர்ச்சிக்கு பல அருஞ்சேவைகளையும் செய்துள்ளார்.

இவ்வாறான கல்விச்சேவையுடன் தான் பிறந்த மண்ணை நேசித்தவராய் - நெடுந்தீவு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக இருந்தபோதிலும் அதன் பின்பும் நெடுந்தீவின் பொருளாதாரம் முன்னேறவேண்டும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற ஆவலுடன் எதிர்கால வளர்ச்சிக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து பல எதிர்கால திட்டங்களையும் தீட்டியிருந்தார். கடைசிக்காலத்தில் "நெடுந்தீவு பொருளாதார மையம்" என்ற அமைப்பை ஏற்படுத்தியதுடன் கஸ்ரப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான பல ஆலோசனைகளையும் வழங்கி இருந்தார். அன்று அவ்வாழ்வாதாரப்பிரச்சினைகளைஉடன் தீர்க்கப்படா விடினும் இன்று அபிவிருத்தியடைந்துவருவதை நாம் காணமுடிகின்றது. இன்று அவர் எம்முடன் இல்லாவிடினும் அவரின் அறிவுச் சிந்தனைகள் என்றும் நிலைத்திருக்கும்.

அன்னாரைப் பிரிந்து துயருறும் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**எஸ்.பி. அருளப்பு**

ஓய்வுபெற்ற கி.அ. உத்தியோகத்தர்- நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பணிசெய் பலனை எதிர்பாராதே"

*"First Duty, Fruit is not thy Concerned"*

யா/ நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம், நெடுந்தீவு

***J/ Delft East Community Centre, Delft.***

*Reg.No. J/RC &/ CC 282-23-10-1950*

நெடுந்தீவு.

Date: 26-03-2013

## மக்களை வாழ வைத்த நல் ஆசான்

நெடுந்தீவின் நற்புதல்வனாக வந்துதித்த அமரர் இராமநாதர் சின்னத்தம்பி ஆசான் அவர்கள் எம்மக்களையும், மண்ணையும் விட்டு இறைவனடி சென்றதினால் அவரது மகத்தான சேவைகளைப் பற்றி மனதார கூறவேண்டியது எமது கடமையாகும். அந்த வகையிலே தீவிலே பிறந்து வளர்ந்து கல்வியைக்கற்று உயர் படிப்பை இந்தியாவில் முடித்து தனது சொந்த ஊராம் பசுத்தீவிலே நல்ஆசானாய், நல் அதிபராய், நல் கோட்டக்கல்வி அதிகாரியாய், நல் கல்விப்பணிப்பாளராய் நற் போதனை வழங்கியவர் என்பதை யாராலும் மறந்துவிடமுடியாது. நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் உறுப்பினராகவும், போசகராகவும் வழிதவறாது சேவையாற்றியவர்.

நெடுந்தீவின் பொதுச்சேவைகள் என்ற வகையிலே பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகியாய், நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளராய், கடமைகள் பலவற்றை செய்து முடித்தவர், அத்துடன் நெடுந்தீவு மேற்கிலே தென்னிந்திய திருச்சபையின் பகற் பராமரிப்பு நிலையத்தை நிறுவ முன்னோடியாக நின்று அயராது உழைத்தவர். நெடுந்தீவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கனடா புலம் பெயர் பழைய மாணவர்களின் உதவியோடு நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா என்ற பெயரிலே மன்றத்தை அமைத்து இன்று வரை அச்சேவை நடைபெற்று வருகின்றது. தீவகத்தில் தொண்டர் ஆசிரியர் அறிமுகத்தையும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு இணைந்து நெறிப்படுத்தியவர். சுருங்கக்கூறின் நெடுந்தீவின் அனைத்துப்பணிகளிலும் வன்னி பெரும் நிலப்பரப்பிலும் தமது பணியை விசாலமாக்கியவர். அப்படிப்பட்ட மக்கள் சேவையாளனை நம்மண் இழந்து தவிக்கிறது. அதையிட்டு எம்மண்ணின் மக்கள் சார்பாக அமரருக்கு கண்ணீரை காணிக்கையாக்கி, அவர் துயரால் துயருறும் அன்பு மனைவி, மகன், மருமக்கள் உற்றார் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த துயரை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**அன்னாரின் நாமம் என்றும் வாழும். அன்னாரை புகழ வார்த்தைகள் இல்லை.**

எ.அருந்தவசீலன்

தலைவர் நெ.கி.ச.ச.நிலையம். தலைவர் நெ.பா.ப.மாணவர் மன்றம் - கனடா

தெ.இ.திருச்சபை செனட் உறுப்பினர். தலைவர் நெடு. இ.செ.சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையால் உயர்ந்த

# அமரர் இரா.சின்னத்தம்பி

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முதல்வர் பணியில் சாதனைகள் படைத்து மக்கள் மனங்களில் நீங்கா இடம்பெற்ற அமரர் சின்னத்தம்பியின் நினைவு மலருக்கு எனது மனக்கிடக்கையை வெளியிட கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் போறகக் கருதுகிறேன்.

அமரர் இரா.சின்னத்தம்பி அவர்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபராய் பதவி வகித்த காலத்தில் நானும் ஒரு அதிபராய் பதவி வகித்தவன் எனும் காரணத்தால் அவரது சேவையின் பல்வேறு பரிமாணங்களை நன்கறிவேன். கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபர்களாய் இருந்தவர்களை அப்போதய கிளிநொச்சியின் அரசியல் ஆதிக்கங்கள் தாக்கங்களை ஏற்படுத்தியபோது அதற்குள் உட்படாத ஒருவராய் தனது அறிவாலும், அனுபவத்தாலும், நேர்மையான நடத்தைகளாலும் தனித்துவத்தை நிலைநாட்டிய ஒருவராய் அமரரை கிளிநொச்சி கல்வி உலகமும் மாணவர்களும் ஆசிரியர்களும் பார்ப்பதை யாவரும் அறிவர். அறிவியல் செயற்பாடுகளுக்கு முதன்மை நல்கி, கல்வி உலகில் அரசியலுக்கு இடமில்லை என்பதை நிலைநாட்டி, முறைவேண்டியோருக்கும் குறைவேண்டியோருக்கும் சமநீதி வழங்கிய அதிபர் வரிசையிலே அமரர் தனி இடம் வகித்தவர். எதற்கும் நியாயம் கேட்டு நின்ற கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பெற்றோர்களுக்கு உரிய முறையிலே பதிலளித்து, உயர்தர மாணவர்களின் சகல குறைகளையும் போக்கி வைத்தவர் அமரராகும்.

பல்வேறு வசதியீனங்களை உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்டத்திலே, கல்வித்துறையில் எத்தகைய அபிவிருத்திகளை ஒரு பாடசாலையிலே ஏற்படுத்த முடியுமோ அத்தகைய அபிவிருத்திகளை நிறைவாக ஏற்படுத்தியவர். கிளிநொச்சி கல்வி வலயத்திலே கொத்தணிப் பாடசாலை நடைமுறைக்கு வந்தபோது பரீட்சார்த்த கொத்தணியில் ஒன்றாக கிளிநொச்சி கொத்தணி அமைந்தபோது அதன் மூலாதாரப் பாடசாலையாக கிளிநொச்சி மத்திய கல்லூரி அமைந்தது. அதன் அதிபராக பதவி வகித்தவர் அமரர் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய ஆசிரிய வளம் இல்லாத காலத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கணித விஞ்ஞான பாட ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோது தனித்துவமான தனது அனுபவம், அறிவு காரணமாக பிரச்சினைக்கு தீர்வுகண்டவர். பாடசாலையில் கல்விகற்ற பழைய மாணவர், பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறியோர் அனைவரதும் உதவிகளை பாடசாலையின் பால் ஈர்த்தவர். மாலைநேர வகுப்புகள், சனி ஞாயிறு தினங்களில் வகுப்புகள் ஏற்படுத்தியவர். எந்நேரமும் பாடசாலைக்குள்ளேயே தனது காலத்தை செலவிட்டவர். எந்த ஒரு மாணவனும் அதிபரின் முன் நிற்கும் காட்சியை பலமுறை கண்டேன். மாணவர்களுக்கு பணிவு, நல்லொழுக்கம் என்பதை தனது செயலால் காண்பித்தவர். அவ்வாறே அமரரை நாடிவரும் பெற்றோரும் அதிபரின் கருத்துக்கு மறுகருத்து கூறியது கிடையாது.

அதிகளவான பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான ஆசிரியர்கள், மாணவர்களை உடைய பாடசாலையாக மத்திய கல்லூரி திகழ்ந்தது. **'ஆசிரியர் கூட்டம்'** ஒன்றை அதிபர் நடத்தும் முறையை நான் பலமுறை பார்த்து வியந்தேன். கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்ட விடயங்களை ஆசிரியர் களுக்கு கூறும் போது எந்த ஒரு ஆசிரியரும் எதுவும் கேட்காதபடி கூறும் ஆற்றல், கூட்டத்தில் ஆசிரியர்களிடேயே காணப்படும் அமைதி யாவும் அமரருக்கே உரித்தான ஆளுமைப் புலங்களாகும். எந்த ஒரு விடயத்திலும், எந்த ஒரு இடத்திலும் தனது ஆசிரியர்களைப் பற்றி எவரும் குறைகூற அனுமதிக்கமாட்டார். இதுதான் அவரது ஆசிரிய குடும்ப பின்னணியின் இரகசியமாகும்.

மேற்குறித்த அறிவு, ஆற்றல், ஆளுமைப் பண்புகள் மிகுந்த அமரர் இன்று எம்மிடையே இல்லை என நினைக்கும் போது மனதை நெருடுகிறது. அமரரிடமிருந்து இன்றைய அதிபர்களும், கல்வி உலகமும் கற்றக்கொள்ள வேண்டிய பல ஆயிரம் விடயங்கள்உள்ளன. கல்வி உலகில் முதுபெரும் ஆசானாக விளங்கி எமது மாவட்டத்தின் முன்னோடியாக வாழ்ந்தவர். அவரை இச் செய்தியின் ஊடாக நினைவு கூருவதுடன் அந்நாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தவருக்கும் நான் தலை சாய்க்கிறேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**ப.அரியரத்தினம்**

**ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**

வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி
தொலைபேசி : 021 3207584, 021 2280024
தொலைநகல் : 021 2221595, 021 2280024
கைபேசி : 077 6913244
மின்னஞ்சல் : shritharan08@hotmail.com
இணையத்தளம் : www.shritharan.com


පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT


SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi,Kilinochchi.
Tel. : 021 3207584, 021 2280024
Fax. : 021 2221595, 021 2280024
Mob. : 077 6913244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com


# நெடுந்தீவு மண்ணின் ஒளிவிளக்கு!

உலகப்பந்தில் மாங்கனித்தீவின் மகிமைக்கு முடிவைத்தாற்போல் உள்ள பால்த்தீவு, பசுத்தீவு என்றெல்லாம் போற்றப்பட்ட நெடுந்தீவு மண்ணில் உதித்து சைவமும் தமிழும் கமழ வாழ்ந்து அம்மண்ணிலே விதையாகிப் போனவர்தான் எங்கள் அன்புமிக்க ஆசான் அமரர் இராமநாதர் சின்னத்தம்பி ஐயா அவர்கள். கல்விப்புலமையுடன் சேர்ந்த ஆளுமைக்கு இலக்கணமாய் விளங்கியவர். தான் கற்ற கல்வியை நெடுந்தீவு மண்ணில் மட்டுமன்றி கிளிநொச்சி மண்ணிலும் செழுமைப்படுத்தியவர். கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபராக, கொத்தணி அதிபராக, அவர் ஆற்றிய பணி கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. நெடுந்தீவு மண்ணிலும் அதிபராய் கோட்டக்கல்விப் பணிப்பாளராய், தீவக வலயக்கல்விப்பணிப்பாளராய், இடர் மிகுந்த காலங்களில் ஆற்றிய பணி என்றும் நினைவு கொள்ளத்தக்கது. ஏழை மாணவர்களின் கல்விக்காய் அவர் இறுதிவரை சிந்தித்துக்கொண்டிருந்தார். எங்கள் தமிழ்த்தேசிய இனம் சார்ந்த இருப்புக்கு அவர்களின் எதிர்கால நின்மதியான வாழ்வுக்கு அதற்காக அறிவு எனும் மூலதனத்தை இட்டு புத்திஜீவிகளை, அறிவுசார்பெருமக்களை வெளியீடு செய்வதில் அவர் வெற்றி கண்டார். இம்மண்ணில் அவரின் உடல்தான் இல்லையே தவிர அவரின் பணிகள், அவர் தடம் பதித்த பாதைகள், அவர் உருவாக்கிய சமூகத்தினர் இன்றும் அவர் நாமம் சொல்லி நிற்கிறார்கள். அவர் இன்றல்ல எப்போதும் எங்களுக்கு வழிகாட்டியாய் எங்களுடன் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

*சி.சிறிதரன்*
பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
யாழ்ப்பாண மாவட்டம்.
11.04.2013

**" நேற்று வரை நீங்கள் பேசியவரிகள்
காற்றுள்ளவரை கரையாது – எம்
ஊரின் உன்னத பயணத்தில் உங்கள் தடம்
காரிருளில் கை விளக்குப் போன்றது. "**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிளிநொச்சி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர்

# திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள்

இவர், தனதுசொந்த ஊரில், நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில், அதிபராக பதவி ஏற்றார். அன்று முதல் தான் கற்ற கல்வியின் வழியாக அம்மக்களை வளர்த்துவிட எண்ணினார். அப்பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு ஏற்ற அறிவுறுத்தல்களை வழங்கி, உற்சாகமளித்து, உயரிய கல்விப் பணியை ஆற்றச் செய்தார். பெற்றாருடைய உதவிகளையும் இயலுமான வரை பெற்றுகொண்டார். கல்விப் பணி நாளொரு வண்ணமாக வளர்ச்சி கண்டது. இவருடை இப்பணியை ஊர், உலகமறிய வந்தது.

இந்நாளில் வடபிரதேசக் கல்விப் பணிப்பாளராக இருந்து, பெரும் பணியாற்றிய திரு.க.சிவநாதனுக்கு இது எட்டியது. கல்விப் பணிப்பாளர் இவருடன் தொடர்பு கொண்டு கிளிநொச்சிக்குச் சென்று கல்வி பணியாற்றும்படி கேட்டுவந்தார். அந்நாட்களில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர், வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வுபெற்றுச் செல்ல, நிரந்தர அதிபர் ஒருவர் இல்லாது அது, தளர்வடைந்தது. இறுதியாக கல்விப் பணிப்பாளரின் எண்ணம் கைகூடியது. சின்னத்தம்பி 1981 நடுப்பகுதியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார்.

அப்போது கிளிநொச்சி மகாவித்தியாலயம் தரம் 1 AB பாடசாலையாக இருந்தது. இப்பாடசாலைக்கு 50 ஏக்கர் காணி அரசால் ஒதுக்கப்பட்டிருந்தது. இவருடைய நியமனத்தையிட்டு நிரந்தர அதிபர் ஒருவர் கிடைத்துள்ளதை எண்ணிப் பெற்றார் பெரிதும் மகிழ்ந்தனர். இவர், இங்கு வந்தவுடன் பெற்றார் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டினார். அவர்கள் பெருவரவேற்புக் கொடுத்தனர். அக்காலத்தில் பாடசாலையில் குடிமனை அமைந்திருக்கவில்லை. மின் வசதி கிடையாது. எந்த உணவகங்களும் இருக்கவில்லை. மலேரியா நோய் மிகக் கடுமையாக வாட்டியது. இருந்தாலும் இவற்றை பொருட்படுத்தாமல் தனது பாரியாருடன் வந்து இங்கு ஓர் இடத்தில் தங்கிப் பணியைத் தொடர்ந்தார்.

இவர் இப்பாடசாலையில் கடமையேற்ற போது பல வகுப்புகள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகக் கொட்டில்களில் நிகழ்ந்தன. ஆசிரிய பற்றாக்குறை மிக மோசமாக நிலவியது. இடப்பற்றாக்குறை உச்சக் கட்டத்தை தாண்டியது. சில வகுப்புகள் மர நிழலிலேயே நடந்தன. மாணவர்களை இராணுவ நடவடிக்கைகள் பயமுறுத்தின. இருந்தாலும் தன்னுடைய கல்விப் பணியை தொடர்ந்தார். தான் கற்ற கல்வி, பெற்ற அனுபவம் ஆகியவற்றின் உதவியுடன் எற்ற பல திட்டங்களைத் தீட்டி கல்வி வளர்த்தார்.

இந்நிலையில் இலங்கை அரசு கல்வி முறையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவர எண்ணி கொத்தணி முறையைச் செயற்படுத்த எண்ணியது. நகர்புறங்களுக்கு வெளியே சிறிய நகர்களில் இதனைப் பரீட்சார்த்தமாக நடத்த எண்ணியது. இத்திட்டத்திற்காக வடபகுதியில் இரண்டு இடங்களை அரசு தெரிவு செய்தது. அவற்றுள் ஒன்று கிளிநொச்சி. இத்தெரிவுக்கு திரு.சின்னத்தம்பி அவர்களுடைய கல்விச் செய்றபாடு காரணமாக அமைந்தது.

இந்த வகையில் கிளிநொச்சி நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒன்பது சேர்க்கப்பட்டு இரு மொழிக் கொத்தணிகளில் ஒன்றாகக் கிளிநொச்சி சேர்க்கப்பட்டது. திரு.சின்னத்தம்பி 01-05-1982ல் கிளிநொச்சிக் கொத்தணி அதிபராக நியமனம் பெற்றார். இத்திட்டத்தில் கொத்தணி அதிபர் மூலாதாரப் பாடசாலை அதிபராகக் கடமையாற்றி ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டும். ஒரு பாடசாலையை நடாத்த இங்கு வந்த இவர்.ஒன்பது பாடசாலைகளை முகாமை செய்ய நேரிட்டது. இத்திட்டம் புதியது என்பதால் ஏனைய அதிபர்களுக்கு அது சரியாக விளங்கவில்லை. ஆனபடியால் ஒத்துழைப்பும் நிறைவாகக் கிடைக்கவில்லை. அந்த நாட்களில் பொது மக்கள் ஊர்தியாக ஈருருளிகளே இருந்தன. இவரும் ஈருருளியில் சென்று ஒன்பது பாடசாலைகளையும் பார்வையிட்டு மேற்பார்வை செய்து வந்தார்.

இவர் தனிமையிற் சிந்தித்து சீரிய முறையில் திட்டமிட்டு கொத்தணி கொள்கைகளைச் செய்ற்படுத்தி வந்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டி, பொறாமை நிறைந்த போட்டிகளை நீக்கி பாடாலைகள் ஒன்பதையும் இணைத்து வயதுப் பிரிவினர் களுக்கிடையிலான போட்டியாக ஆக்கி, ஆண் பெண் பாகுபாடில்லாமல் விளையாட்டுப் போட்டிகளையும், பெரு விளையாட்டுக் களையும் நடாத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இதேபோன்று தமிழ்த் தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, விஞ்ஞான வினாவிடைப்போட்டி என்பவற்றை நடாத்தினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஒரு பாடசாலையில் கூட்டம் நடாத்தி பாராட்டிப்பேசி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி மதிப்பளித்தார்.

இவற்றினை அறிந்த கல்வி அமைச்சு அதிகாரிகள் இவரை அழைத்து கல்வி அமைச்சில் நடைபெற்ற ஏனைய கொத்தணி அதிபர்களுக்கான கூட்டத்தல் இவரை விளக்கமளிக்கக் கேட்டனர். இவர் இவ்வரங்கைக் கையாண்ட வெற்றிகரமான முறையைப் பாராட்டி கல்வி அமைச்சின் செயலாளர் உரை நிகழ்த்தினார். சான்றிதழும் வழங்கப்பட்டது.

இக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டக் கோரிக்கை வலுப்பெற்றது. இதற்கு பல காரணங்கள் சொல்லப்பட்டபோதும். கிளிநொச்சியின் கல்வி நிலைப் பின்னடைவே முக்கிய காரணியாகச் சொல்லப்பட்டது. இங்கு வந்து பணியாற்ற வேண்டும் என்று, பணிந்து கோரிக்கை விட்ட அரசியல்வாதிகள் எவ்வித ஆதரவும் கொடுக்காமல் நின்றதோடு அவருடன் முரண்பட்டுச் செயற்பட்டனர். 1985ஆண்டு கிளிநொச்சி முழுவதும் கொத்தணி முறைக்குள் கொண்டு வரப்பட்டது. ஏனைய கொத்தணி அதிபர்கள் இவருடைய அனுபவங்களையும் ஆலோசனைகளையும் கேட்டு தமது கொத்தணிகளை திறம்பட நடத்தினர். 1990 அளவில் கிளிநொச்சி மாவட்டக் கொத்தணிகள் திறம்படப் பணியாற்றுகின்றன என்ற பெருமதிப்பை பெற்றன. இவருயை வழி நடத்தல் கிளிநொச்சி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டது.

பாடசாலைக்குக் கிடைத்த 50 ஏக்கர் காணியில் அத்துமீறிக் குடியேறுவோர் கைப்பற்ற கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சியைக் கல்வித் திணைக்களத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியாக இவர்களுடைய பிரச்சினையைக் கையாள இவருடைய தலைமையில் மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர் இயன்றவரை தெண்டித்து ஓரளவு வெற்றி பெற்றார். இவர் சைவச் சிறுவர் இல்லப் பராமரிப்பு நிலையத்திற்கும் வழிநடத்தி உதவியவர் பத்திரிகைகளில் **'இராசி'** என்ற பெயரில் கட்டுரைகள் எழுதி சமூகப் பணியாற்றினார்.

இவருடைய காலத்தில் உயர்தர வகுப்புகளில் பாடத்துறைகளுக்கு முழுமையான ஆசிரியர் அணி இருந்ததில்லை. அன்று தனியார் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களும் ஏற்ற கல்வியை வழங்க முடியவில்லை. உயர்தர வகுப்பு மாணவர்கள் கல்வி நிலையைக் கருத்தில் எடுத்து அக்குறைபாடுகளை நீக்க முயற்சித்திருந்தார். முதல் முறையாக மாணவர்கள் இங்கிருந்து பல்கலைக்கழகம் சென்றனர்.

இவருடைய ஆழமான கடவுள் நம்பிக்கை, பற்றுறுதியான கல்விப் பணி தளரவில்லா ஒழுக்க நெறி மாணவர்களைப் பாகுபாடின்றி நேசிக்கும் சுபாவம், எடுத்த கருமங்களில் தளர்வின்றி உழைக்கும் இயல்பு என்பன இவரை ஒரு வெற்றிகரமான அதிபராக, கொத்தணி அதிபராகச் செயற்பட உதவியது. இவர் வித்திட கல்விப்பணி இன்றும் கிளிநொச்சியில் தொடர்கிறது.

1987 ஆரம்பத்தில் கிளிநொச்சியை விட்டு வெளியேறித் தன் சொந்த ஊருக்கு கல்விப் பணியைத் தொடரச் சென்று அங்கும் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி
கிளிநொச்சி
01.04.2013
**நா.சோதிநாதன்**
முன்னாள் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் இராமநாதர் சின்னத்தம்பியின் நினைவுகள்

## வசந்தக் காற்றாய் ........................

மனிதவாழ்வில் கூடிவாழ்ந்து தன்னோடு சேர்ந்தவர்களை உச்சங் களைத் தொட வைத்தவர்கள் பலர் உள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் தனது கல்வியை புகழ் பூத்த அதிபராகவிருந்த மாண்புபெற்ற அதிபர் பேராசான் நவரட்ணலசிங்கத்தின் நிழலிலே பெற்று அக்காலத்திலே கடல்கடந்து ஆசியாவிலே தனது பெயரை நிலை நாட்டிய சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலே தனது பட்டப்படிப்பை மேற்கொண்டு வாழ்நாள் பூராகவும், கல்விப்பணி ஆற்றிய அமரர் இராமநாதர் சின்னத்தம்பி உச்சங்களைத் தொடவைத்தவர்களுள் மேலானவர், குறிப்பாக அவரைப் பெற்றெடுத்த நெடுந்தீவு மண்ணுக்கு அமரர் அவர்கள் தனது அளப்பரிய வாழ்நாள் சேவையை வழங்கிய சிறந்த வித்தகர்.

கல்விமான் அமரர் சின்னத்தம்பி அவர்கள் வடபுலத்திலே கல்வியாளர்கள் மத்தியில் நீங்காத இடம்பிடித்தவர். நெடுந்தீவு மக்களின் விருப்புக்கேற்ப இவர்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் கொத்தணி அதிபராக கடமையேற்று நான்கு ஆண்டுகள் தனது சீரிய பணியை மேற்கொண்டார். கிளிநொச்சி மத்திய கல்லூரி அவ்வேளையிலே பழைய பள்ளியில் இருந்து பிரிந்து புதிதாக வழங்கப்பட்ட காணித்துண்டிலே ஆரம்பமான அவ்வேளையில் தனது ஆளுமைத்திறன்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான அமரர் அவர்கள் தனது ஆசானாகிய அதிபர் நவரட்ணசிங்கத்தின் காலத்திலேயே அவரின் கீழ் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றியமை எவருக்கும் கிடைக்காத அரிய சந்தர்ப்பம். தனது குருவின் வழிகாட்டலில் அமரர் அவர்கள் கல்வியியலின் துணுக்குகளையெல்லாம் ஆராய்ந்து அதற்கூடாக தனது வாண்மையை மெருகூட்டிக்கொண்டவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது ஆளுமையின் வெற்றியாக தனது பள்ளியிலே அதிபராகவும் பின்னர் தீவுப் பகுதியின் கல்விப் பணிப்பாளராகவும் தொடர்ந்து விசேட ஆணையாளராகவும் பணியாற்றினார்.

இவர் தனது மனிதநேய பண்பினூடாக பலரது நட்பினைப்பெற்று கல்வியியலாளராகத் திகழ்ந்தவர். புதிய சிந்தனையாக நாட்டிலே கொத்தணித் திட்டத்தைக் கல்வியிலே புகுத்தியபோது தனது திடகாத்திரமான சிந்தனையின் வெளிப்பாடாக தொடராகத் தனக்கு ஏற்பட்ட சவால்களை மிகச் சுலபமாக வெற்றி கொள்ளக் கூடிய திறனைப் பெற்றவராகவிருந்தவர்.

அமரர அவர்களது கிளிநொச்சி வாழ்வும் கல்விப் பணியும் என்றும் நீடித்த வசந்தக் காற்றாய் இங்குள்ளவர்கள் மத்தியில் வீசும் என்பதில் ஐயமில்லை.

***அமரரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.***

**த.குருகுலராசா**

ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர்

கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின்
வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணியாற்றியவர்

## திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள்

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கு இணங்க திரு.இரா. சின்னத்தம்பி அவர்கள் கற்ற கல்வியானது தொடர்ந்து சிறப்புடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை. கல்விமட்டுமல்ல அவரது பணிகளும் என்றும் நினைவு கூரப்படவேண்டியன. தனது சொந்த இடத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்டத்திலும் தமது பணியைச் சிறப்புடன் ஆற்றினார்.

எமது பாடசாலை 1981இல் எமது மாவட்டத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலம் ஆக இயங்கி வந்தபோது அதிபராக நியமனம் பெற்றுப் பணியாற்றினார். நிரந்தர அதிபராக இருந்து பெற்றோர் ஆசிரியருடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். ஆரம்பத்தில் பல சிரமங்களை எதிர்கொண்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாது தமது பணியைத் தொடர்ந்தார்.

கல்வி நிலையில் பின் தங்கியிருந்த எமது பாடசாலையினை வளர்ப்பதில் கருத்துடன் செயற்பட்டார். கொத்தணி அதிபராகப் பணியாற்றிய போதும் கூட எமது மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி, இணைபாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றில் மிகவும் அக்கறை கொண்டு பல்வேறு துறைகளிலும் எமது மாவட்டம் சிறப்புடன் மிளிர வேண்டுமென விரும்பித் தம் பணியைத் தொடர்ந்தார்.

எமது பாடசாலையில் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் அதிபராக இருந்தபோது நானும் மாணவனாக அதிபரின் வழிகாட்டலில் கல்விகற்றுக் கொண்டிருந்தேன். அவரது அன்பான வழிநடத்தலும், சேவை மனப்பாங்கும், பாடசாலைப் பற்றுறுதியும் எனக்கு வழிகாட்டிகளாக அமைந்தன. தற்போது கல்லூரியின் அதிபராக நான் பணிபுரிகின்ற வேளையில் அவரின் வழிநடத்தல்கள் எனக்கு உதவியாக அமைவதனை உணர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், ஆசிரியர்களுடன் மட்டுமல்லாது மாணவர்களுடனும் பழகி அவர்களது இடர்ப்பாடுகளை இனங்கண்டு உதவுவார்.

இவருடைய இறைபக்தி, கல்விப்பணி, ஒழுக்கநெறி, மாணவர்களை நேசிக்கும் பாங்கு, தளராத உறுதி, கடமையில் பற்றுபோன்ற இன்ன பிற இயல்புகள் இவரை நல்லதோர் அதிபராக, கொத்தணி அதிபராக வளர வழிகாட்டின. இவர் காட்டிய வழியில் இவரது மாணவர்களும் பல்வேறு பதவிகளில் இருக்கின்றார்கள். இவர் வித்திட்ட கல்விப்பணியானது இன்றும் எமது மாவட்டத்தில் தொடர்கிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரிச் சமூகத்தினரும் அதிபராகிய நானும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

மு.இரவீந்திரன்
அதிபர்
கிளிநொச்சி மத்திய கல்லூரி
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரா.சி. என்ற பெருங் கல்வியியலாளர் குறித்து

## ஒரு "அம்பலத்தாடியின்" மனப்பதிவிலிருந்த சில .......

ஆறரை ஏழு தசாப்த காலத்துக்கு முந்திய காலகட்டத்தில் எமது நெடுந்தீவகத்தின் கல்விப்பராம்பரியத்துக்கு அடித்தளமிட்ட பேராசான் அமரர்.சீ.வி.ஈ.நவரத்தினசிங்கம் அவர்களின் வெளியேற்றத்துக்குப் பின்பு ஓரிரண்டு அதிபர்களுக்கு அடுத்த நிலை அதிபராக, அதாவது தனது சொந்த மண்ணின் கல்விப்புலத்துப் பாரிய பொறுப்பை ஏற்றவர் அமரர்.இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள். கல்விக்கூடத்தின் படிமுறையான செல்நெறி அப்போது சற்றுத்தள்ளாடிய நிலையிலிருந்தவேளை என நினைவு.

அமரர் இரா.சி..... அவர்களது கல்விப் புலமையின் ஆதாரத்தளம் திடமானது. அடர்த்தியானது, ஆரம்ப, இடைநிலை கல்விகற்ற பாடசாலை களின் சூழல், பட்டப்படிப்பினை மேற்கொண்ட சென்னை கிறிஸ்தவ கல்லூரி - அங்கு லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வழிவந்த உயர்நிலைக் கல்வியியலாளர்களின் நிழலில் அவர் பெற்ற பல்நிலை ஆளுமைக் கூறுகளுடனிணைந்த அறிவாயுதக் கூர்மையும், அத்துடன் நமது கல்விச்சாலையின் பிதாமகன் பேராசான் நவரத்தினசிங்கம் அவர்களது நிர்வாக வீச்செல்லைக் கதிர்களின் தாக்கமும், அசல்வழி என்பதால் இயல்பாகவே அமரர் இரா.சி. அவர்களிடமும் துல்லியப்பட்டிருந்தது. இத்தகைய ஆளுமைக்கூறுகளின் ஒன்றித்த பெறுபேற்றின் விளைபயனாக திடமாகவும், நிதானமாகவும் அந்தக் கல்விச்சாலையை முன்னிருந்த படிமுறை நிலைக்கு அவரால் மீட்டுவரமுடிந்தமை, அவரது கல்விப்பணி என்ற **"சொர்ண மகுடத்தில்"** மற்றோர் இறகாக அமைந்தது. இது ஒரு மிகைப்படுத்தலல்ல.

இன்று கல்வி என்பது சந்தைப்பொருளாகிவிட்டது. ஆசிரியத்துவம் /ஆசிரியன் என்பதும் விளம்பரப் பொருளாகிவிட்டது. அதனால் மனிதநேயத்துடன் ஒன்றித்த ஆசிரியத்துவம் மரணித்துவிட்டது.

அதனால் பெற்றோர்களும் பிள்ளைகளை விரட்டி விரட்டி ஓடச்செய்து ரியூசன், ரியூசன் என்று சுமைகளைத் திணித்து அவர்களைத் திணறச் செய்கிறார்கள். சுயசிந்தனை, தேடல், உளப்பதிவு என்ற ஆரோக்கியமான அந்நாளைய வழிப்படுத்தல் முறைகள் இன்று அறவே அற்றவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகாவித்தியாலய நிர்வாகத்தைத் தொடர்ந்து கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளின் நிர்வாகத்தில் தடம் பதித்தவர் மீண்டும் தீவகப்பாடசாலைகளின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் அதன் பின் வலயக்கல்விப் பணிப்பாளராகவும் அவரது பணி தொடர்ந்தது. அதனால் அவரது கல்விப்பணி வடக்கின் பின்தங்கிய இடமெங்கும் அகலக்கால் பதித்தது என்பது மட்டுமன்றி தன்னலமற்ற அவரது, தண்ணளி நிறைந்த கல்விச் சேவையின் வரலாற்றுப் பதிவாகவும் அங்கீகரிக்கப்படுகிறது.

என்மட்டில் அமரர் இரா.சி அவர்கள் மரபுவழிமுறை நெருக்கமான உறவினர். ஒரே மண்ணின் மைந்தர்கள் இத்தகைய உரிமை உணர்வுகளுக்கப்பால் இன்று நொந்துபட்டு நோக்காடு தீர வழியின்றித் தடுமாறி நிற்கும் நமது இன்றைய பரம்பரைக்கு அதன் முகிழ்த்தெழு நிலைக்கு வழிகாட்டக் கூடியவர்கள் பட்டியலில் - பழுத்த ஆளுமைமிக்க கல்வியியலாளர் - சமூக விஞ்ஞானி, இன உணர்வுடன் ஒட்டிய மனிதநேயம் மிக்க ஒரு மாமனிதர் மறைவு - தவிர்க்க முடியாத நியதியானாலும் ஈடுசெய்ய முடியாததே.

**"ஆன்மா அழியாதது – கூறுபோட முடியாதது"**

**"அமரர் இரா.சி. நினைவு என்றும் நிலைக்கும்"**

என்ற பிரார்த்தனையுடன்

**கலைஞர் வேல் ஆனந்தன்**

(ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதன் திரு.இரா.சின்னத்தம்பி

எனது ஒன்றுவிட்ட அண்ணராக திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் வாய்த்தையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். எனது கணவருக்கும் உற்ற நண்பன் என்பதால் எமது உறவு மிக நெருங்கியதாகவே இருந்தது. இவர் ஒரு "மேதை" நெடுந்தீவு பெற்றெடுத்த பெருமகன்; அறிவாற்றல் மிக்க ஆசான்; அதிபர் என்ற சொல்லுக்கு இலக்கணமானவர்; கற்றவர் நடுவே முதன்மை பெற்று நின்ற" கொத்தணி"த் தலைவன்; கல்விப்பணிப்பாளர்; எல்லாவற்றுக்கும் மேலாக நெடுந்தீவு விசேட ஆணையாளர் அனைத்து இலங்கை சமாதான நீதிபதி. இத்தனை ஆற்றல்களுடன் இன்னும் பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவரும் நானும் ஒரே காலத்தில், 1959ஆம் வருடம் பட்டப் படிப்பு முடித்து வெளியேறினோம். இருவரும் ஒன்றாகவே வேலையும் தேடினோம்; ஆசிரியர் வேலை. அப்போது எங்கள் பகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். திரு.வி.ஏ.கந்தையா அவர்கள். வேலை எடுப்பதற்கு அவருடைய சிபார்சைக் கேட்டு நாம் இருவரும் தனித்தனி அவருக்கு கடிதம் எழுதியிருந்தோம். சில நாட்களின் பின் அவர் நெடுந்தீவுக்கு வந்தபோது நான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் "சின்னத்தம்பியும் ஒரு நல்ல கடிதம் போட்டிருந்தார்" என்றார். எனது கடிதம் அவ்வளவு வாய்ப்பற்றது என்பதை அவரது கூற்று எனக்கு உணர்த்தியது. நான் சமாளித்துக்கொண்டு "எனக்கு கடடிதம் எழுத அவ்வளவு வராது" என்று சொல்லிவிட்டு "சின்னத்தம்பியும் எனது அண்ணாதான்" என்றேன். அவர் சிரித்துக்கொண்டு "இருவருக்கும் வேலை கிடைக்கும். சரிதானே" என்றார். திரு.சின்னத்தம்பி அவர்களின் திறமையை அந்த ஒரு கடிதமே காட்டிக்கொடுத்திருந்தது.

நெடுந்தீவு மண்ணுக்கு பெருமை தேடித்தந்த அண்ணல் இன்று இல்லை. யாருடைய உதவியை நாம் இனி நாடுவது என்று பலரும் வேதனைப்படுகின்றனர். நெடுந்தீவு செல்லவிரும்பும் எவரையும் வழிகாட்டலுக்காக நாம் இவரிடமே அனுப்பி வைப்போம். எமது தீவுக்கு 'Delft' என்று பெயர் இட்டவர்கள் ஒல்லாந்தர். உலகெங்கும் பரவலாக நான்கு இடங்களில் 'Delft' என்ற பெயர் கொண்ட ஊர்கள் உள்ளன. ஒல்லாந்து நாட்டில் உள்ள 'Delft' என்ற ஊரின் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் 'Delft' பற்றிய கட்டுரை ஒன்றை எழுதுவதற்காக உலகில் உள்ள நான்கு 'Delft' களுக்கும் நேரடியாகச் சென்று தனது ஆய்வைச் செய்ய விரும்பினான். இலங்கையில் உள்ள 'Delft' க்கு செல்லுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைத் தொடர்பு கொள்வது என்று அறியாது சர்வதேச 'தொடர்புவலை' மூலம் எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் ஒரு பகிரங்க வேண்டுகோளை விட்டிருந்தான். இதைப்பார்த்த எமது மகன் உடனனே திரு.இரா.சின்னத்தம்பி அவர்களை தொடர்பு கொண்டார். அத்துடன் கொழும்பில் வசிக்கும் அவரது மருமகன் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்களுடனும், நெடுந்தீவு கிராம சேவையாளர் திரு.பா.கதிரேசு அவர்களுடனும் தொடர்பு கொண்டு அந்த மாணவன் நெடுந்தீவு செல்ல உதவினார். அவர் அங்கு சென்றபோது திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் தனக்கு செய்த உதவிகளைப் பாராட்டி, நன்றி கூறியதோடு தனது ஆய்வுப் படங்களுடன் இவர்களது படங்களையும் சேர்த்து எமக்கு அனுப்பியிருந்தார்.

ஒரு ஆசிரியரின் 'அளவுகோல்' அவரது மாணவர்கள், திரு.இரா.சின்னத்தம்பி ஆசிரியரின் மாணவர் பல்லாயிரவர், அவரைப் பாராட்டுகின்றனர். அறிவு ஊட்டிய ஆசான், வழிகாட்டிய தெய்வம்; வாழ்வுக்கு உதாரணமான மனிதன், அன்பின் வடிவம், ஒழுக்கத்தின் சிற்பி, கஸ்ரப்படுவோரைக் கண்டால் கண்ணீர் வடிப்பவர் என்று அளவற்ற அடைமொழிகள் கொடுக்கின்றனர்.

இவர் எம்மோடு மிக அன்பாக உறவுகொண்டவர். அடிக்கடி எங்களைத் தம்மிடம் அழைப்பதுடன் எங்கள் வீட்டுக்கும் வருகை தந்து போவார். அவரைப் பிரிந்து இன்று துயர்படும் துணைவிக்கும் இறைவன் ஆறுதல் கொடுக்கட்டும். இவர் புகழைத் தேடவில்லை; ஆனால் புகழ் அவரைத் தேடியதால் புகழோடு வாழ்ந்து புகழோடே மறைந்தார். இவர் வளர்த்தெடுத்த மருமக்கள் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்களும் திரு.மா.சித்தவிநாயகம்பிள்ளை அவர்களும் இன்று அவரது நிழலாக நிற்பதைக் காண்கிறோம். திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் இவரையே போன்று ஆசிரியர் பணி ஏற்று, அதிபராகி எல்லோருக்கும் உதவி செய்து கொண்டு பேச்சும், மூச்சும் திரு.இரா.சின்னத்தம்பி அவர்களாகவே வாழ்கிறார்.

**"சான்றோர் சாவதில்லை"**

அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் அவர்களை என்றும் வாழவைக்கின்றன.

**ஓம் சாந்தி**

*திருமதி. சே.வரதராசா*
ஓய்வு பெற்ற ஆசிரியை
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுண்ணாகம்.

கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு பிரதேச சபை

## DELFT PRADESHIYA SABHA

எனது இல.
My No.
தொலைபேசி
T.P No.:
e-mail: tsecretarydelft@yahoo.com

உங்கள் இல.
Your No.
திகதி
Date 28.03.2013

### மண்ணையும், மக்களையும் நேசித்த மகான்

பசிபோக்கும் பசுத்தீவாம் நெடுந்தீவிலே தனிநாயகமுதலியார் வழித்தோன்றலிலே அமரர். இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள் எம்மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகளை புகழ்ந்து கூறாமல் இருக்கமுடியாது. அவ்வகையிலே நெடுந்தீவில் பற்றுக்கொண்ட கல்வி ஆசான் திரு.இரா.சின்னத்தம்பி அதிபர் தீவின் பொருளாதாரத்தை வளரத்தெடுத்து மக்களின் வாழக்கைத் தரத்தை உயரத்த வேண்டும் என்ற பெரு நோக்குடன் அசிரியர், அதிபராக கடமையாற்றிய கல்விப்பணியோடு நெடுந்தீவு கிராமசபையுடன் தனித்துவமான ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். கிராம சபையின் தலைவருக்கு சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆலோசகராகவம் மன ஆர்வத்துடன் கடமையாற்றிய வந்தவர்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் நெடுந்தீவு மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவையை என்றும் எம்மால் மறக்க முடியாது நினைவு கூறப்பட வேண்டியதொன்று. எந்த இடத்திலுள்ள அரங்குகளில் பல்வேறுபட்ட கருத்துவேறுபாடு வந்தாலும் நெடுந்தீவான் என்ற பெருமையுடன் கருத்துக்களை வழங்கி தீவின் அபிவிருத்திக்கும் பொருளாதா வளர்ச்சிக்கும் அரும்பெரும்பாடுபட்ட கல்விமான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கையில் கடமையாற்றிய காலப்பகுதியில் பெரும் பொருாதாரக்கஸ்டம் உணவுப்பஞ்சம் போக்குவரத்துமின்மையால் நெடுந்தீவில் ஏற்பட்டது. அப்போது பங்குத்தந்தையுடன் அதிபர் அவர்களும் சென்ற கடற்பிராணத்தில் ஏற்பட்ட கஸ்டங்களையும் பொருட்படுத்தாமல் குறிகாட்டுவான் சென்று போக்குவரத்து வீதி தீவுப்பகுதி தொடர்பற்றுப் போயிருந்தபோதும் ஏனைய இடத்தில் கிடைத்த உணவுப்பொருட்களை ஒன்றுதிரட்டி நெடுந்தீவு மக்களுக்கு கிடைக்க வழிகாட்டிய பெரும் மகான் நெடுந்தீவுப்பிரதேசத்தில் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் கல்வித்துறையின் வளர்ச்சி பெறுபேறுகள் முன்னேற்றகரமாகக் காணப்பட்டது. அததுடன் நெடுந்தீவுப் பிரதேசபையின் விடேச ஆணையாளராக கடமையாற்றி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தியவர், இன்று பாதுகாப்பான கடற்போக்குவரத்திற்கு கைகொடுத்து நிற்கின்ற குமுதினி படகு வருவதற்கும் குறிகாட்டுவான் பாலம் அமைப்பதற்கும் பெரும்பங்காற்றியவர். மேலும், ஆன்மீக சொற்பொழிவு களை நடாத்தி பொது மக்களையும் மாணவச் செல்வங்களையும் சமூகப் பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களை நெறிப்படுத்தி வாழ்பவர்களாக மாற்றிய பெருமை கல்விமானும் சமூக சேவையாளருமான சின்னத்தம்பி சேர் அவர்களேயே சாரும்.

இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

**செயலாளர்**

**நெடுந்தீவுப் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தும் இறவா சாதனைச் சிற்பி

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு.இரா.சின்னத்தம்பி (B.A) அவர்களின் மரணச் செய்தி மிகுந்த கவலையைத் தந்தாலும் அவர் இத் தீவகத்திற்கு ஆற்றிய அரும் பணிகளை நினைக்கும்போது ஆறுதலையும் தருகின்றது. மேலும் இவரிடம் நான் கல்வி கற்றது மட்டுமன்றி, நான் தொழிலில் சேர்ந்த பின்பும், எமது நிறுவனங்களுக்கு பணிப்பாளராகவும், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கியும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டவர்.

நெடுந்தீவுக்கு தனியான ப.நோ.கூ.சங்கம் அமைவேண்டும் என்பதை 1979ம் ஆண்டு புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத்தில் பணிப்பாளராக இருந்தபோது வலியுறுத்தி, உரியமேலதிகாரிகளோடு தொடர்பு கொண்டு 1-2-1980ம் ஆண்டு தொடக்கம் தனியான சங்கம் அமைய வழி கோரியவர். அதோடு விட்டுவிடவில்லை, நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் படகு புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத்திடம் இருந்தது. அதையும் வாதாடி நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்திற்கு கையளித்தவர். இதன் 85 குதிரை வலுவுள்ள சிலிண்டர் இயந்திரத்தை ஏற்கனவே லண்டனில் இருந்து இறக்குமதி செய்தவரும் இவரே.

ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளரா்க, கல்விப்பணிப்பாளராக, நெடுந்தீவு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக, கோயில்களின் அறக்காவற் சபையின் தலைவராக, ஆலோசகராக உயர் நீதிமன்ற யூரியாக இவர் செய்த பணிகள் பற்பல.

எங்கு தீவகத்தில் நிறுவனங்கள் நலிவுறுகின்றதோ, அவற்றை நிமிர்த்த அரும்பாடுபட்டவர். கல்வி தொடக்கம் வாழ்வாதாரம் வரை மக்களுக்கு தனது வாழ்நாளில் அரும்பணியாற்றியவர்.

உதாரணத்திற்கு 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்திற்கும் நெடுந்தீவுக்கும் நாற்பது நாட்களாக தொடர்புகள் அற்று நெடுந்தீவு மக்கள் சாவின் விழிம்பில் இருந்தபோது இவர் தனியார் படகை அமர்த்தி முன்னாள் கி.ச.தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கணபதிப்பிள்ளை, பங்குத்தந்தை லம்பேட் அடிகள் ஆகியோருடன் குறிக்காட்டுவான் சென்று வெள்ளைக் கொடி காட்டிய வாகன மூலம் மண்டைத்தீவு சந்தியை அடைந்து (அப்போது பண்ணைப்பாலம்) உடைக்கப்பட்டு தற்போது பாலம் போடப்பட்டிருந்தது) நடையாக யாழ் நகர் ஊடாக கச்சேரி சென்று சிவில் நிர்வாகிகளுடன் உரையாடி அரிசி, மற்றும் பலபொருட்களை நெடுந்தீவுக்கு எடுத்து வந்ததுடன் தொடர்ந்து பிரயாணம் நடைபெறவும் வழி வகுத்தவர்.

எத்தனை உயர் பதவிகளை வகித்தாலும், எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் அணுகி சாதனை படைத்தவர்.

இவரது இறுதிக்காலத்திற்கு முன்பே எனது நண்பனாகவும், தோழனாகவும் என்னுடன் பழகியவர்.

இவரது வாழ்நாள் செயற்பாடுகளை சரிதையாக எழுத்தில் வடிக்கமுடியாது.

இவரது இழப்பு இந்நாட்டிற்கும் எமது தீவிற்கும் பேரிழப்பாகும்.

இவரின் பிரவினால் துயருன்றிருக்கும், மனைவி, மகன், மருமகள் மற்றும் மருமக்கள் உறவினர்கள் நண்பர்கள் அனுதாபிகள் ஆகியோருக்கும் எனது சார்பாகவும் எனது குடும்ப உறவுகள் சார்பாகவும், ஆழ்ந்த கவலை யைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்துக்கு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**க.கோபாலபிள்ளை**

(முன்னாள் கணக்காளர்/பொதுமுகாமையாளர்

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை மிக்க அதிபர், கல்வியியலாளர்

# அமரர் உயர்திரு. இரா. சின்னத்தம்பி

எம் மண்ணுக்காகவும், மண்ணின் மக்களுக்காவும் வாழ்ந்த இம் மண்ணின் மைந்தன் எனது ஆசிரியர் எனது அதிபர், எனது கல்வி அதிகாரி, அதேவேளை எனது அத்தார். இவரைப்பற்றியும், இவரில் நான் வைத்திருக்கும் அளவற்ற மதிப்பையும், அன்பையும் என்றுமே வேறு ஒருவரால் ஈடுசெய்யமுடியாது.

பாடசாலை பருவத்தில் எனது ஆங்கில ஆசானாகவும், ஆசிரியனாகிய காலத்தில் எனது அதிபராகவும், அதிபராகிய காலத்தில் எனது அதிகாரியாகவும், 22 ஆண்டுகள் இவர் சேவையின் மகிமையையும் உணர்ந்து கொண்டேன்.

பாடசாலைப் பாலகரை வாகாய் வளைத்து வைரங்களாகப்பட்டை தீட்டியவர். இவரை ஊர் மெச்சியது. மாணவர்கள் மகுடம் சூட்டினர். சகல ஆசிரியர் சந்தோசம் பகிர்ந்தனர். எங்கும் இறைமையில் இராசனாகவே வாழ்ந்தார்.

உற்றார் உறவினர் மற்றோர் எவராயினும் வாய்மலர வரவேற்கும் பரிவும், பணிவும் பக்குவமும் ஒருங்கே அமையப் பெற்ற உத்தமர் இரா.சின்னத்தம்பி அத்தார் அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது நொந்து போகாதோர் யாருமில்லை. சகாவரம் பெறாவிட்டாலும் எம் நினைவை விட்டுப் போகவரம் பெற்ற புண்ணியனாய் வாழ்வார்.

இவரிடமிருந்து அன்பென்றால் என்ன, பண்பென்றால் என்ன, பார்த்து நாம் தெரிந்து கொண்டோம். பிழைகளை பொறுக்கும் தன்மை, பிரச்சினை தீர்க்கும் ஞானம், உறவினை வளர்க்கும் உள்ளம், உரிமையை பறிக்கா எண்ணம், பாசம் தோய்ந்த பார்வை, பிரிவினில் நனைந்த சொற்கள் எல்லாமே மோசம் போனதென்ன.

இவருடன் பழகிய 22 ஆண்டுகளில் எனது அனுபவங்கள் பல அவற்றில் தெளிந்த ஞானம், திடமான உள்ளம், கவர்ந்திடும் பேச்சு, சளைத்திடாத் தன்மை, ஆரோக்கியத்தின் அடையாளம், உதவுவதில் உத்தம பண்பு. இவை யாவையும் தன்னகத்தே கொண்டு நல் ஆசிரியராக, நல்ல அதிபராக, ஆளுமை மிக்க கல்வி அதிகாரியாக, விசேஷட ஆணையாளராக எம்மத்தியல் வாழ்ந்தவர் எனது அத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், பெற்றவருக்கு சான்றாண்மை மிக்க மகன், மனைவிக்கு நல்ல கணவன், பிள்ளைக்கு அன்புள்ள தந்தை, உறவினற்கு உத்தமன், நண்பர்களுக்கு நல்ல வழிகாட்டி, அயலவற்கு எடுத்துக்காட்டு, தஞ்சம் என்போர்க்கு தயாளன், இத்திறம்கொண்ட எனது அத்தார், அமரர் எம்போன்ற இளையோர்க்கு நல்லாலோசகர் மேன்மைகொள் பண்பு கொண்ட ஆசான். எமக்கு கிடைத்தமை நாம் பெற்ற பேறே.

நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, அஞ்சாதன்மை உறுதியான பேச்சு, ஆகிய தமிழ் கூறும் நற்பண்களால் எம்மனைவரினதும் உள்ளத்தை வென்றவர். என் வாழ்வில் நான் கண்ட நல்லாசான்.

சிறந்த ஆசிரியர், ஆளுமை மிக்க அதிபர், கல்வியதிகாரி, நம்பிக்கைக் குரிய வழிகாட்டி, வாதிட்டு வெல்லும் வல்லாளன், ஒத்துழைக்கும் மனப் பாங்காளன், இவற்றையெல்லாம் உடன் தொழில் புரிந்து அனுபவித்தவர்கள் பலர். யான்கூட விதிவிலக்கல்ல. அன்னாரின் பிரிவு எமக்கெல்லாம் பெருந்துயர் தந்ததுடன் ஓர் இடைவெளியையும் உருவாக்கியுள்ளது.

உறவுகட்கு பாலமாய் இருந்தவர் இன்று உறங்கிவிட்டார். உறவெல்லாம் இனிவருமோ ஒவ்வொன்றாய் பிரிந்திடுமோ அழுகின்ற அக்காவை யார் வந்து தேற்றிடுவார். அவரோடு நாமிருப்போம். உம் ஆத்மாவில் அமைதி கொள்வீர்.

அமரரின் பிரிவால் துயருறும் அனைவரினதும் துயருடன் என் அக்காவினதும் மகன் மகேந்திரனதும், மருமக்கள் மற்றும் புலம்பெயர் இரத்த உறவுகளின் கண்ணீரையும் காணிக்கையாக்கி அமரர் அவர்களது ஆத்மா ஆண்டவனின் நல்லருள் பெற இறைஞ்சுகிறேன்.

**"நல்ல போரட்டத்தை போராடினேன் ஓட்டத்தை**
**முடித்தேன் விசுவாத்தை காத்துக்கொண்டேன்** **(தத்து 1-7)**
**"நானே நல்ல மேயவன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன்**
**ஜீவனை கொடுக்கிறான்"**

*ச.கணேசதாசன்*
இளைப்பாறிய உ.க.ப.
தெற்கு கல்விவலயம்
வவுனியா / நெடுந்தீவு - 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனார்

**"தோன்றிப் புகழோடு தோன்றுக – அஃதிலார்**

**தோன்றலிற் தோன்றாமை நன்று".**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய யாழ் மாவட்டத்தில் சப்த தீவுகளில் பெரும் தீவாம் நெடுந்தீவுப் பகுதியில் சிறந்த கல்வி கற்று அதிபராகப் பதவிவகித்து அதன் மூலமாக பிரதேச மக்களிற்கு அளப்பரிய சேவையாற்றி பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரியல் அதிபராக இருந்து வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பணியாற்றி பதவி உயர்வு பெற்று கல்வி அதிகாரியாக பணியாற்றி தனது சேவையைப் பூர்த்தி செய்த அமரர் இரா.சின்னத்தம்பி அவர்கள் எமது பிரதேச மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்த விட்ட அன்னாரது சேவை என்றும் எமது நெஞ்சங்களை விட்டகலாத ஒன்றாக அமைந்துள்ளது.

இப்படிப்பட்ட பெருமகனாரோடு நீண்ட காலமாக அன்னியோன்ய மாக பழகியது மட்டுமல்ல அவரோடு ஒன்றாக சேவையாற்றி காலப்பகுதிகள் என்றென்றும் மறக்கமுடியாத பொற்காலங்களாக காணப்படுகின்றன. அவர் தனது சேவைக் காலத்தில் பாடசாலை வளர்ச்சிக்காகவும், ஒவ்வொரு மாணவர்களதும் உயர்விற்காகவும் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை, எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் மிகவும் எளிமையாகவும் பழகி பாடசாலையின் உயர்விற்காக அயராது உழைத்த உத்தமர்.

இவரோடு 1978, 1979, 1980 காலப் பகுதிகளில் ஒன்றாக சேவையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நான் இவரிடம் பெற்றுக் கொண்ட பல அனுபவங்கள் எனது சேவைக்காலத்தில் பலவகையிலும் எனக்கு உறுதுணையாக அமைந்தது.

பாடசாலையில் அவர் கொண்டிருந்த பற்று, விசுவாசம் என்பன பாடசாலை வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது.

எனவே மாணவ சமுதாயத்திற்கு அவர் செய்த சேவை என்றென்றும் மறக்க முடியாதவை.

**"நெரு நல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்தது இவ்வுலகு"**

அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவரது மனைவி பிள்ளைகளிற்கும் ஆறுதல் வேண்டி நிற்கின்றேன்.

*அ.தனிநாயகம்*

(ஓய்வுபெற்ற அதிபர்)

தவிசாளர் - மாந்தை கிழக்கு பிரதேசசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா இயற்கையெய்தி

**உயர்திரு இராமநாதர் சின்னத்தம்பி அதிபர் அவர்கட்கு**

நற்கதியருளுமாறு அன்னார் குல தெய்வமாகிய

**நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் மீது பராவல்**

*1.* வேர் பூத்த விழுதுகள் சூழ் ஆலின் கீழே
பெயர் பூத்து வீற்றிருக்கும் விநாயகனே - உன்
சீர் பூத்த சிவனடியார் தம்மை நாளும்
சிரம் கொண்டு காத்தருளும் சுகுனவேளே
ஏர் பூத்த இராமநாதர் சின்னத்தம்பி
பார் விட்டு உன் பாதம் நாடி வந்தான்
மலர் பூத்த கரமலரால் அணைத்து - நீயும்
கைலாச வாசல் தனில் வைத்தும் காப்பாய்.

2. அப்பனொடு அம்மைமடிதவளும் - தேவே
எப்பொழுதும் எமைக் காத்து அருளும் - தேவா
ஒப்பில்லா ஆலவனம் நாளும் வந்து
முப்போதும் உனை வணங்கி நெஞ்சில் - கொண்டு
தப்பாது உனது பணி நிலைத்து நிற்க
செப்மொடு ஆற்றி வந்த சேயோன் - தன்னை
இப்போதே இணைகரத்தால் சேர்த்து - நீயும்
இன்பமொடு இனிதிருத்தி அருளுவாயே.

3. அப்பனும் அம்மையும் ஆனாய் நீயே
ஆதி மூலப் பொருளாய் அமைந்தாய் நீயே
எப்பொழுதும் எமைக் காத்து அருள்வாய் நீயே
ஏகாந்தமானவனும் ஆனாய் நீயே
ஒப்பில்லா உட்பொருளும் ஆனாய் நீயே
ஓங்கார மூர்த்தியாய் அமர்ந்தாய் நீயே
தப்பாமல் உனை வந்து வணங்கி நாளும்
தரணியிலே வாழ நீயும் வகை செய்வாயே

ஆக்கம் :
இளங்கவி
**ச.பத்மலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் மாமனிதன்

அன்பு, அறிவு, நீதி, நியாயம், நேர்மை, பொதுநோக்கு, தலைமைத்துவம், விருந்தோம்பல் போன்ற நற்பண்புகளையெல்லாம் தன்னகத்தே கொண்டவர் எனதருமை மாமா இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள். இவர் நெடுந்தீவு கிழக்கில் உதயமானவர், உறவுக்குள் உயர்ந்தவர். எனக்கு ஆசானாகி அதிபராகி என்னைத் தலைமையாக்கியவர், நெடுந்தீவின் அதிபராக (பிரதேசசபை, கோட்டக்கல்வி அலுவலகம், தீவகம், மகா வித்தியாலயம், ஆலமாவனப் பிள்ளையார் தேவஸ்தானம்) விளங்கியவர், நிறைகுடம் தளம்பாது என்பதற்கிணங்க தக்கதோர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் இரா.சின்னத்தம்பி அவர்கள்.

நெடுந்தீவு ஆலமாவனப் பிள்ளையார் ஆலயம் சிதையுண்டு கிடந்ததைக் கண்ணுற்ற இவர் இதைப் புனரமைக்கவேண்டும் என மனதில் எண்ணி அக் கிராமத்தையும் முன்னேற்ற விரும்பி அதற்காக வெளிநாடுகளில் இருக்கும் அன்பர்களின் உதவிகளோடு, 1985ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து கழைய கட்டடங்களை எல்லாம் அகற்றி புதிய அழகிய ஆலயத்தை அமைத்து அத்துடன் அழகிய மணிக்கோபுரம், வாகனசாலை, குரு அறை, காரியாலயம் போன்றவற்றையும் அமைத்து வர்ணம் தீட்டி 2002ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்து வைத்ததுடன் மார்கழி திருவாதிரையில் நடைபெற்ற திருவிழாவைச் செயல்முறைக்கு உகந்த காலமில்லை என உணர்ந்து பங்குனி உத்தர நடேசர அபிஷேக தினத்தைத் திருவிழாக்காலமாக மாற்றித் திருவிழா உற்சவத்தினைச் சிறப்பாக நடாத்தி மகிழ்ந்தார். அத்துடன் தனது பரம்பரை பரம்பரையாக இருந்த **"விதாணையார் தறை"** என்னும் காணியையும் (3 ஏக்கர் 48 பரப்பு) கோவிலிற்கே நன்கொடையாக வழங்கினார்.

**"கருணை பொங்கும் உள்ளம் அது கடவுள் வாழும் இல்லம்"** என்னும் சொல்லிற்கிணங்க மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து காட்டியவர். இவரின் நினைவு மலரை எழுத எனது இதயம் கனக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடாக இருந்து கடமை செய்து நெடுந்தூரம் பயணம் செய்துள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஆலமாவனப் பதிக்குச் செய்த சேவையின் மிகுதிப் பணியை நீங்கள் காட்டிய பாதையில் தொடர்ந்து செய்வோம். ஆலமாவனக் கொடியேற்றத்தன்று உமதுயிர் பிரிந்தது. நிச்சயம் நீவிர் இறைவன் திருவடியில் இருப்பீர். மக்கள் சேவையே மகேஸ்வர பூசை.

**"வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

இப்படிக்கு
**ப.கதிரேசன்** (மருமகன்)
(கிராம உத்தியோகத்தர்
- நெடுந்தீவு கிழக்கு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் நாமம் எம் வாழ்வில் என்றும் நிலைக்கும்

நீலக்கடலைகள் நித்திரையும் கொள்ளாவூர், பாலைப் பொழிந்து வரும் பசுவினங்கள் நிறைந்தவூர், வாலைச் சுழற்றி வரும் வான்புரவி யீட்ட நிரை, தீவகத்துக்கெல்லாம் திலகமாய் நிற்கு மூர் பூவகத்தோர் போற்றும் பொன்னான நெடுந்தீவில் புகழ் பூத்து கற்றறிந்தோன் ஆசான் சின்னத்தம்பி அவர்களின் பிரிவு எமது தீவகத்துக்கு மட்டுமல்ல எமது மாகாணத்துக்குமே பேரிழப்பாகும்.

அன்பாலும் பண்பாலும் மற்றவர்களை அணுகும் பாங்கு அவருக்குக் கொடுத்த கொடை.. நான் அவரது மாணவனாக இருக்க கொடுத்து வைக்க வில்லை. எனினும், அவர் என்னைத் தனது தம்பியென்றே அரவணைத்து வாழ்நது வந்தார்.

அன்னார் அதிபராக இருந்தகாலத்தில் ஆற்றிய சேவைகளை அவரின் மாணவர்கள் மூலம் அறிந்துள்ளேன். அன்றைய நாட்களில் எமது தீவகமக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தார்கள். இதில் நானும் புற நடையல்ல. அன்று கல்விபயின்ற மாணவன் ஒருவன் கூறியதை என்னால் மறக்கமுடியாதுள்ளது அதாவது தான், ஒருநாள் பாடசாலைக்கு போகவில்லை என்றும் மறுநாள் போனபோது வகுப்பாசிரியர் அதிபரிடம் அனுப்பிவிட்ட தாகவும், அப்போது அமரரான அதிபர் இரா.சின்னத்தம்பி அவர்கள் **"ஏன் நேற்று பாடசாலைக்கு வரவில்லையெனக் கேட்டு பிரம்புடன் தனது கையைப் பிடித்து அடிக்க ஆயத்தமான போது" சேர் நான் எனது கால்சட்டையை தோய்த்துப்போட்டேன் காயாத காரணத்தால் வர முடியவில்லையென்றேன்"** அந்த மனிதர் மனம் நொந்து ஒரு கால்சட்டை வாங்க பணமும் தந்து இனிமேல் ஒழுங்காக வரவேண்டு மென பணித்தார். அந்த மாணவன் இன்று மிக நல்ல நிலையில் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட அன்னாரின் சேவைகள் சொல்லிலடங்கா O/L படித்து சித்தியடையாத மாணவர்கள் இரண்டாம் முறை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது முத்திரையொட்டி விண்ணப்பிக்க வேண்டும். கஷ்டப்பட்ட சில மாணவர்களுக்கு முத்திரை ஒட்ட வசதி கிடையாது. அப்போது அந்த பெருந்தகை தனது சம்பளப் பணத்தில் முத்திரை வாங்கி ஒட்டுவித்து ஏழை மாணவர்கட்கு விண்ணப்பம் அனுப்பியதை நான் நன்கறிவேன். இதே போல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்தபோதும் இதே செயலை செய்ததாக அறிகிறேன்.

இப்பேற்பட்ட பெருந்தகை பொது சேவையிலும் கூட்டுறவுச் சேவையிலும் பின்நிற்கவில்லை. நெடுந்தீவு அபிவிருத்திக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்துள்ளதுடன் கூட்டுறவு சேவையினூடாக நாட்டை அபிவிருத்தி செய்யலாம் என்ற எண்ணக்கருவோடு செயலாற்றி நெடுந்தீவுக்கு தனியானதொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை பெற்றுக் கொடுத்த பெருமையும் அன்னாருக்குரியது.

**அவரது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்போம்.**

**சு.கோபாலசிங்கம்**

முன்னாள் தலைவர் ப.நோ.கூ.சங்கம்

நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் மிக்க மாமனிதர்

எமது அன்புக்கும் பெரு மதிப்பிற்குமுரிய மனித நேயம் மிக்க மாமனிதரே அமரர் இரா. சின்னத்தம்பி அவர்களாவர். சிரித்த முகம், சீரிய தோற்றம், நிமிர்ந்த நடை, நேரிய உடை, பரந்த நெற்றி, பலரும் போற்றும் பண்பு என்பவையே அவரை அடையாளம் காட்டி நிற்கும்.

அவருடன் தம்பியாக, மாணவனாக பழகியிருக்கிறேன். அப்போதெல்லாம் அவர்காட்டிய அன்பும், கூறிய அறிவுரைகளும், அவரிடம் அவதானித்தவைகளும் அதிகம் உண்டு. அவருடனான பழக்கம் எனது வாழ்வை வளம் படுத்தியது போலவே வேறு பலரின் வாழ்வையும் வளம்படுத்தியுள்ளது.

இவரின் தாய்,தந்தையர் இருவருமே நீதி, நியாயம்,நேர்மை உடையவர்களாகவும் மக்கள் மத்தியில் மதிக்கத்தக்கவர்களாகவும் வாழ்ந்தவர்கள். அவர்களின் அந்த உயரிய பண்பு இவரிடமும் இயல்பாகவே அமைந்திருந்தது. அதனால் அவரை எல்லோரும் மதித்தார்கள். உள்ளூரில் மட்டுமன்றி வெளியூர்களில் உள்ள அமைப்புக்களும், அவருடன் தொடர்ந்து தொடர்புகளைக் கொண்டிருந்தன. பல செயல் திட்டங்களையும் அவர்மூலமே செயல்படுத்தி வந்தன.

எல்லோரிடத்திலும் மிகுந்த அன்பு காட்டினார். பிள்ளைகள் சிறுவர்களாக இருந்த போதே மைத்துனர் மறைந்து விட அவர்களை அன்போடு அரவணைத்து அறிவூட்டி அவையத்து முந்தியிருக்கச் செய்தார். தாம் வளர்த்த தமது பிள்ளைகளுக்கும், அறிவூட்டி விவாகம் செய்து கொடுத்து வெளிநாடுகளுக்கும் அனுப்பி வசதியாக வாழ வைத்தார். வேறு பலருக்கும், பதவிகளையும், உதவிகளையும் புரிந்து உயர்த்தி வைத்துள்ளார்.

அறிவுத் திறனும், மிகவும் ஆளமாகவே காணப்பட்டது. இவர் உயர் கல்வி கற்ற காலப்பகுதியில் அதாவது 1950களின் பிற்பகுதியில் எமது ஊரில் இருந்து ஒருவர் படித்துப் பட்டம் பெறுவது என்பது மிகவும் கஸ்டமான காரியமாகவே இருந்தது. அதற்கான பட்டதாரி ஆசிரியர்களோ, நூல் நிலையங்களோ இருக்கவில்லை. ஆயினும் அறிவுத்திறனும் ஆர்வமும் உடைய மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்களில் சிலரை அப்போதைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அமரர் எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் தமது செலவிலேயே வெளிநாடுகளுக்கு அனுப்பி படிப்பித்துப் பட்டதாரியாக்கினார். வேறு சிலருக்கும், வெளிநாடுகளில் அனுமதிகளையும், அனுசரனைகளையும் பெற்றுக் கொடுத்து படிப்பதற்கான பாதையை காட்டிக் கொடுத்தார்.

1959ல் படித்துப் பட்டம் பெற்று வந்தவர்களுள், அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் தமது அறிவையும் ஆற்றலையும், தம் ஊர் மாணவர்களிடையே ஊட்ட விரும்பினார், நெடுந்தீவு மகாவித்தியால யத்திலேயே பல்கலைக்கழக புகுமுக வகுப்பை ஆரம்பித்துக் கற்பிக்கத் தொடங்கினார். அப்போதுதான் நானும், அவரிடமும் திருமதி. சேதுப்பிள்ளை வரதராசா அவர்களிடமும் கற்கும் வாய்ப்பினைப் பெற்றேன். இருவருமே இனிய சுபாவமுடையவர்கள். கூச்சமின்றியும், கூர்மையுடனும், நாம் கேட்டும் ஐயப்பாடுகளை ஆராய்ந்து அறிந்து தெளிவு படுத்தினர். கடினமான விடங்களை தாமே கற்று வந்து கற்பித்தனர். கற்பித்தல் என்பதை காசுக்காகவோ, வெறும் கடமைக்காகவோ, செய்யாது அர்ப்பணிப்புடனும், இதயசுத்தியுடனும் செய்யவேண்டிய ஒரு தொழில் என்பதை அவர்களிடம் கண்டு கொண்டோம். அவர்களது முயற்ச்சியினாலேயே முதல் முறையாக 3 மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியானார்கள்.

அறிவுத்திறன் இருந்த போதும் அதனை ஆர்ப்பரித்துக் காட்ட மாட்டார். எந்த அவையிலும் மிகவும் அடக்கமாகவே அமர்ந்திருப்பார். அழைத்தபோது மட்டும் எழுந்து சென்று எல்லோரும் வியக்கும் வண்ணம் அறிவுரை ஆற்றிவிட்டு அமர்ந்து விடுவார். நிறைகுடம் தழம்பாது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். பணிவு எனும் பண்பையும் பல முறை பார்த்திருக்கின்றேன். சென்ற வருடம் நானும் எனது மருமகன் கதிரேசு அவர்களும் அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். இரு கரம் கூப்பி வரவேற்று அமரச் செய்து அமர்ந்து கொண்டார். அறிவிலும், ஆற்றிலிலும், வயதிலும் குறைந்த எம்மிடமே அவர் காட்டிய பணிவு எம்மைப் பரவசப்படுத்தியது.

ஆழுமைப்பண்பு ஆரம்பத்திலிருந்தே இவரிடம் அமைந்திருந்தது. அது அமரர் நவரட்ணசிங்கம் அவர்களிடம் ஆசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றியதால் மேலும் அதிகரித்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்று வேலனை மகாவித்தியாலயத்திற்கு சென்று படித்த போதும், தமிழ் நாடு தாம்பரம் கிறீஸ்தவக் கல்லூரியில் படித்த போதும் மாணவ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கல்விப்பணிப்பாளராக, சிறப்புக் கொமிசனராக, சமாதான நிதவானாக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் ஏற்பட்ட பல பிணக்குகளையும் பலரும் போற்றத்தக்க வகையில் தீர்த்து வைத்தார். மகாவித்தியாலய வெள்ளி விழாவையும், திருக்குறள் மகாநாட்டையும், ஆலமாவனப் பிள்ளையார் ஆயல கும்பாபிஷேக நிகழ்வையும் திறம்பட நிகழ்த்தியது இவரது ஆளுமைத் திறனைக் காட்டுகின்றது.

தாம் பிறந்த மண்ணையும், மக்களையும் அதிகம் நேசித்தார். உணர்ச்சி மிகு ஊர்ப்பற்றாளராக இருந்தார். குடி நீர்ப் பிரச்சினை, போக்கு வரத்து பிரச்சினை போன்றவற்றைத் தீர்த்து வைத்தார். தம் ஊருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியவற்றை துணிந்து நின்று எதிர்த்தார். மக்கள் மனதைப் புண்படுத்திய **"வாடைக்காற்று"** நூலை ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் எரித்துச் சாம்பலாக்கினார். அதைப் பிரசுரதித்த வீரகேசரி பத்திரிகையையும் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வைத்தார்.

"பத்தி" பரம்பரையில் வந்த ஒரு முத்து உதிர்ந்து விட்டது. எம்மை அறிமுகப்படுத்த பயன் பட்ட ஒரு பண்பாளன் மறைந்து விட்டார். அவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் என்றும் மறையாது. அவரது மறைவு மனைவி, மக்கள், உற்றார், உறவினருக்கு மட்டுமன்றி ஊர் மக்கள் அனைவருக்குமே ஒரு பேரிழப்பாகும். ஆலமாவனப் பிள்ளையார் அருளால் அவரது ஆன்மா நிச்சயமாக நற்கதி அடையும் எனத் தேறி ஆறுதலடைவோமாக. .

**ஓம் சாந்தி !. சாந்தி !! சாந்தி !!!**

அன்புடன்

இரா. பேரம்பலம் (B.A)

ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்குமோ நெஞ்சம்

நெடுந்தீவில் மிகவும் கீர்த்தியோடு வாழ்ந்தவர் அத்தான். ஊரில் இரா.சின்னத்தம்பி அதிபர் என்றால் தெரியாதோர் யாரும் இருக்க முடியாது. மரணப்படுக்கைக்கு முதல் வாரம்தான் அவரை இறுதியாகப் பார்த்தோம். இவ்வளவு விரைவாக எம்மை விட்டுப் பிரிவார் என்று எண்ணவில்லை. இறைவன் விதியாயிற்றே.

அத்தான் எமது குடும்பத்தோடு அன்பாகவே செயற்பட்டவர். எனது கணவரின் திடீர் மரணத்தைச் கொழும்பில் சந்தித்த போது பல்வேறு கஷ்டங்களைத் தாங்க வேண்டியிருந்தது. வெளியூர் உறவினர் வரமுடியாத சூழல். தானே முன்னின்று ஈமைக்கிரியைகளை நடத்தினார். உயிர் உள்ளவரை அதை என்னால் மறக்க முடியாது.

என்னை எப்பொழுதும் **"ரீச்சர்"** என்றுதான் அழைப்பார். எனது கணவருடனும் சகலனென்றில்லாது நண்பன் என்றே உறவாடுவார். பெருந்தன்மையோடு பிறரை மதித்தார். சிறு வயதான எனது பிள்ளைகள் அவரைச் செல்லமாக **"பாட்டா பெரியப்பா"** என்றுதான் கூப்பிடுவர். அத்தானும் அக்காவும் **"வள்ளுவர் வசுகி"** போன்று வாழ்ந்தார்கள். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்க்கும் தமிழ்ப்பண்பாடு நிறையவே காணப்பட்டது.

ஊரில் சங்கம் வளர்த்து தமிழ் வளர்த்து அழியாக் கல்விச் செல்வத்தை ஊட்டி உற்றார் உறவினர், பிள்ளைகளுக்கு உறைவிடமாக நின்றவர். தன்னலமற்றவராக வாழ்ந்தார் என்றால் மிகையாகாது. ஆணித்தரமான கொள்கையில் அசைந்து விடாமல் நின்றார். என்பதை யாவரும் அறிவர்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றோடு **"செய்யும் தொழிலே தெய்வம்"** என்பதற்கிணங்க ஆசிரியர் சேவையில் அனைத்து அதிபர், கொத்தணி அதிபர், கல்வியதிகாரி என உயர்த்தப்பட்டவர். நல் மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அன்னாரின் இறுதி யாத்திரை நடந்தேறிய நிகழ்வே படம் போட்டுக் காட்டினது. அன்னார் வாழ்ந்தோம் மடிந்தோம் என்றில்லாது வாழ்வை புகழோடு முடித்து விட்டார். பிறக்கும் போதே இறப்பும் நிர்ணயிக்கப்பட்டது. அது எவருக்கும் விதிவிலக்கல்ல என்பதை மன திருத்தி அன்னாரின் ஆத்மா இறைவனடியில் நித்திய ஆறுதல் பெறுவதாக எனப் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**மறவா நெஞ்சத்துடன்,**

**தனலட்சுமி பேரம்பலம் குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரியப்பா**

நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து சென்று குறுகிய நாட்கள் கடந்தாலும் உங்கள் அன்பான நினைவுகள் எம்மைவிட்டு என்றும் அகலாது. பெரியப்பா நீங்கள் எங்கு சென்றீர்கள் வெகு விரைவாக .......

எங்களுடன் எப்போதும் கூடவருவது உங்களுடன் கழித்த சிறுவயது ஞாபகங்கள். ஒவ்வொரு விடுமுறையின் போதும் எம்மை கூட்டிச் சென்று உங்களுடன் வைத்திருப்பது எங்களுடன் சேர்ந்து கதைப்பது, விளையாடுவது என்று உங்களது நினைவுகள் என்றும் பசுமையாக உள்ளது.

நாங்கள் கொழும்பில் ஒன்றாக இருந்த பொழுது எனது தந்தையாரின் சடுதியான இழப்பின் போது நீங்கள் எம்மை தேற்றி வழிநடத்தியது என்றும் எம் நினைவில் பசுமையாக இருந்து கொண்டே இருக்கும்.

உங்கள் உடல்தான் இங்கு இல்லை ஆனால் எங்களின் உணர்வில் நீங்கள் எப்போதும் நீக்கமற நிறைந்தே இருக்கின்றீர்கள்.

குடும்பம், தொழில், சமூகம் எல்லாவற்றுக்கும் கடமை செய்தீர்கள் உங்கள் பெயரும் நினைவும் எப்போதும் உயிர்ப்புடன் தான் இருக்கும்.

**உங்கள் ஆத்மா நிச்சயம் சாந்தியடையும்**

பசுமை நினைவுடன்
அன்புப் பெறாமக்கள்
**மணி, சிவாஜினி, பாமினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வாழ்வில் எல்லாமாய் அமைந்தவர்....

எங்கள் அம்மா சின்ன வயதில் எம் தந்தையை இழந்த போது மொத்தக் குடும்பச் சுமையையும் தனியாகச் சுமந்தீர்கள். பாசத்தோடு எம்மைப் பண்பாக வழர்த்தீர்கள். நேசத்தோடு எமக்குக் கல்வி புகட்டி சபை நடுவே முந்தியிருக்கச் செய்தீர்கள். "அக்காவைக் கவனமாய் பாருங்கள்" அது ஒன்றே உங்கள் கோரிக்கை நேசமுள்ள அக்காவும் 'தம்பி' என்ன சொன்னான் எனக் கேட்டே தீர்மானம் எடுப்பார்.

அம்மா மறைந்து ஓராண்டு ஆகுமுன்னே உங்களையும் நாம் இழந்து ஏதிலிகளாய் ஆனோம். அன்போடு **"மச்சான்"** என அழைத்த சித்தப்பா முருகேசு மறைந்து மாதம் ஐந்து ஆகுமுன்னே எல்லா உறவுகளையும் படிப்படியாய் இழந்து சொல்லொண்ணாத் துன்பத்தில் சின்னம்மா படும் துயரம் .............. எங்கிருந்த போதும் **"மாமா"** எங்கள் பலமாக இருந்தார். எங்கள் அடையாளம் அவரில் தொடங்கும். நாங்கள் அடையும் சிறப்பை அகத்தால் வாழ்த்தும் சொந்தம் எமை விட்டு தூரத்தே போனதே. உறவு என்பதற்கு இலக்கணமாய் ஓராண்டில் ஒன்றாய் மூவரும் காலமாகி போனீர்கள். ஆண்டு முழுவதும் அழுது அழுது களைத்தவராய் மீண்டும் அந்த நெடுந்தீவுத் **"தமிழகத்தில்"** உங்கள் ஊசாட்டக்கால நினைவுகளுடன் எங்கெங்கோ காற்றில் பறக்கும் கடதாசிகளாய் உங்கள் முகவரியோடு..... என்றும் நாம்.

**அன்புடன்**

**மருமக்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்தவர்

மாமாவின் மறைவினால் விலாசம் இழந்து நிற்கின்றோம். எங்கள் சொந்த ஊர் நெடுந்தீவாக இருந்தாலும் சிறுவயதில் நெடுந்தீவை விட்டு வெளியேறியதன்பால் பிறந்த ஊரின் தொடர்புகள் குறுகத் தொடங்கியது. மாமாவின் பெயரைச் சொல்லி எமது உறைவையும், பிறந்த மண்ணின் தொடர்பையும் தக்கவைத்து வாழ்ந்து வந்தோம். மாமாவின் இழப்பு இவற்றையும் பறித்துக் கொண்டது.

இவர் நெடுந்தீவுக்கு ஆற்றிய அதிகாரிகள் தர சேவையை மக்கள் அறிவார்கள். அத்துடன் அவர் தனது உறவுகளை எப்படி நேசித்தார், அவர்களின் முன்னேற்றத்தை எந்த வகையில் கையாண்டால் பலன் கிடைக்குமென நிதானமாக சிந்தித்து நாம் எல்லாம் முன்னேற வழிகாட்டினார். அவரின் இளமைக் காலத்தில் எமது வீடுகளில் நடைபெறும் கொண்டாட்டங்களை அவரது வருகைதான் மெருகூட்டுவது. உறவுகளின் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் மனதார நேசித்த மாமாவின் இழப்பு எமக்கும் எமது குழந்தைகளுக்கும் ஈடில்லாத இழப்பு. இவ்விதம் தான் மாமிக்கும், பிள்ளைகளுக்கும் நெடுந்தீவிற்கும், நெடுந்தீவு மக்களுக்கும் பேரிழப்பென்பது மிகையாகாது. இவர்களுக்கு எல்லாம் வல்ல ஆலமானவப் பிள்ளையார் மன ஆறுதலையும், சாந்தியையும் கொடுக்கப் பிரார்த்தித்து மாமாவின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திப்போமாக.

**"முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு**
**பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்**
**படிசாந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்**
**அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே""**

**- பட்டினத்தார்**

A. N. **செல்வராசா**

முந்நாள் புகையிரத அதிபர் - அரியாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR SITHTHAPPAH

I first saw my Siththappah in 1963,when I returned home from Boarding school.

It was in the evening, he was very smart,dressed in pure white shirt & black pair of trousers.

He always had pure crisp white shirt & white handkerchief.

He was tall with sharp features & curly hair,he was quiet & soft spoken & gentle with us.

He reveived us with a calm, beautiful smile,we were excited to see our new Siththappah.

A lot of time was spent on questions about our school work!

Siththappah was always there for us,he had a lot of time for us.

We spent several days with them during our school holidays.

We were invited for lunch in Siththy's & Siththappah's house.It was always exciting for us.

We walked to their house in the morning ,there was a lot of cooking & playing.

I will always remember the fresh Chicken ,prepared in the back garden & vegetables.

Siththy made sure she had a lot of lime juice for us to drink & we were encouraged to eat well.

Lunch was always served in a lovely China plate & dishes with pink roses ,which I loved!

Siththappah gave us a good account of his university life in Madras Christian College,he showed us pictures of him

chairing meetings as a student union president.We were so impressed!!

After lunch we walked to the seaside,only a few yards from their home,

with Siththappah & spent a lot of time ,playing until it was late in the evening.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At times my father would be there to take us home & we reluctantly left & walked home in the evenings.

Siththappah was always interested in our well being,especially our education.

He invested his expertise ,knowledge & teaching skills in the family members, as we were all growing up .

He wanted to know where we were in the education system.

Siththappah,inherited a beautiful ,loving family with inlaws ,nephews & nieces.

A line of distinguished ,educated members of our family took him under their wings.

He shared our losses & gains with great respsct & courage over the years.

He was a great man, gentle,loving, sensitive,highly educated ,very articulate,well respected,held a variety of leading positions in the society,

& always willing to help us & the community,where we belong.

These are the gifts he left us with & all the sweet & fond memories that we have & will always treasure.

I am so glad , we saw our Siththappah recently & spent 2 days with you & Siththy,in your home we all loved.

We will miss you Siththappah

***Komales Puvanarajah***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடம்பர வாழ்வை விரும்பாத அவரை

## நாங்கள் விரும்புகிறோம்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

மேற்படி தமிழ் புலவன் வள்ளுவன் வாய்மொழிக்கு இலக்கணமாய் அமைந்தவர் அண்மையில் அமரரான உயர்திரு. இராமநாதர் சின்னத்தம்பி அவர்களாவார். அவர் நானறிந்த ஆற்றல் மிக்க அதிபராவார்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அதிபராக அவர் செயற்பட்ட காலத்தில் சிறிய வகுப்பு மாணவர்களாக நாமிருந்தோம். அக்காலத்தில் இவரின் தலைமைத்துவத்தின் கீழ் எங்கள் நெடுந்தீவு மகாவித்தியாலயம் மறுமலர்ச்சி காணத் தொடங்கியது. இவரின் காலத்தில் தான் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழாவும் வந்தது.அக்காலத்தில் அவரிடம் புலப்பட்ட செயற்பாடும்,சிந்தனை வளமும் எம் பாடசாலையை பல தசாப்தங்கள் முன்னோக்கி நகர்த்தியது.

பாடசாலைக்கு அயலிலிருந்த சிறிய விளையாட்டு மைதானத்தை மிகப் பெரிதாக ஆக்கிய பெருமை அமரர் சின்னத்தம்பி அவர்களையே சாரும்.மைதானத்தை சுற்றி நெடுந்தீவின் மூலப் பொருளான பனை மட்டைகளைக் கொண்டும் மாணவர்களின் மனித வளத்தைக் கொண்டும் வேலைப் பகிர்வினூடாகவும், சிறந்த முகாமைத்துவத்தினூடாகவும் 40 நிமிட நேரத்திற்குள் சுற்றி வர வேலி அமைத்த செயற்பாடு ஒரு சாதனை என்றே சொல்ல வேண்டும். அதை இன்று நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

எமது மகாவித்தியாலயத்தில் சிறந்த நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கு செயற்த்திட்டங்கள் தீட்டப்பட்டன ஒரு கடதாசியில் நூறு சதுரங்களைக் கொண்ட சிறு கோடுகள் போடப்பட்டு ஒரு சதுரத்திற்க்கு 10 சதவீதம் சேகரியுங்கள் என குறிப்பிடப்பட்டது.அப்பொழுது உரையாற்றிய அமரர் அதிபர் சின்னத்தம்பி அவர்கள் பொது மக்களுக்கு கஷ்டம் கொடுக்காதீர்கள். கடைகளுக்கு முன்னால் புகைத்தலில் ஈடுபடுவோரை காணும் போது அவர்களிடம் ஒரு சதுரத்திற்கு 10 சதம் தருமாறு கேளுங்கள். அவர்கள் ஒரு சிகரெட்டின் காசை உங்களுக்கு தரலாம் அதனால் அவர்களும் காப்பாற்றப்படுகிறார்கள எம் பாடசாலை நூலகமும் பயனடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்று 1973 களில் அவர் கூறிய கருத்துக்கள் இன்றும் எம் நெஞ்சில் நிழலாய் நிழலாடுகின்றது.

மதிப்புக்குரிய ஆசான் சிரமதானப் பணியில் ஈடுபட எங்களை அழைத்த பொழுது ஒரு கதையைச் சொல்லி ஆரம்பித்தார்.தான் சென்னை தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் பயின்ற போது அதன் பொறுப்பாசிரியராக இருந்த ஒரு மதகுரு சிரமதானமொன்றுக்கு அழைத்துச் சென்றார். அதுவோ ஒரு சேரிப்புறம். மாணவர்கள் முகம் சுழித்தனர் அந்த மதகுரு மாணவர்களுக்கு முன்மாதிரியாக அந்தச் சேரியை சுத்தம் செய்யத் தொடங்கினார். மாணவர்களும் தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டனர். அடுத்த நாள் சென்னைப் பத்திரிகைகளும் ஊடகங்களும் அச் செயற்ப்பாட்டை வெகுவாகப் பாராட்டி பிரசுரித்தனர்.அந்தச் செயற்பாடு எனக்கு மனவுறுதியை தந்ததாக கூறிய அவர் எங்களுக்கு முன்மாதிரியாக தானே சிரமதானம் செய்யத் தொடங்கினார். அவரை நாங்கள் பின்பற்றினோம் அரை மணி நேரத்தில் பாடசாலைச் சூழல் சுத்தமாயிற்று.

தன் செயற்ப்பாட்டால், அறிவுரைப்பால் ஒரு முன்மாதிரி மனிதனாக விளங்கிய அவர் எல்லா மாணவர்கள் மனதிலும் செல்வாக்கை பிடித்திருந்தார் சுயநலமில்லாத அவருடைய பணி எம் பாடசாலை முன்னேற்றத்திற்கு பேருதவியாக அமைந்தது.

இவர், தான் , தனது என எண்ணி சுயநலத்துடன் வாழ நினைத் திருந்தால் அவரின் சுயநல வாழ்வு மிக உன்னதமானதாக இருந்திருக்கும் என்பதற்கு அவரது கல்வி அறிவும் , பதவிகளும் , அரசியல் அனுசரணைகளும் என அத்தனையும் அவருக்குச் சாதகமாகவே அமைந்திருந்தன. அவ்வாழ்வை விரும்பாத படியால் இன்று அவர் அனைவராலும் விரும்பப்படுகின்றார்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேத வித்தகனை வேண்டிக் கொள்கின்றேன்**

ஓம் சாந்தி

லண்டன்
பிரித்தானியா

அன்புடன்
காங்கேசு சாந்தலிங்கம்
நெடுந்தீவு - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி கல்விப் புலத்திற்கு

## அமரர் இரா.சின்னத்தம்பி அவர்கள் காட்டிய பாதை

அமரர் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஆரம்பக் கல்விப் புலமாகவும் கொண்டவர். பின்பு இவர் வேலணை மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து "மற்றாஸ் கிறிஸ்தவக் கல்லூரியில்" பட்டக் கற்கையை நிறைவு செய்து மீண்டும் தன் தாயக மண்ணில் கல்வி புகட்டுவதற்காக ஆசிரியர் கடமைப் பொறுப்பை ஏற்று வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தன்னாலான அரும்பணியை மேற்கொணடு வந்தார். இதன் பின் அதிபர் கடமைப் பொறுப்பையேற்று செவ்வனே நிர்வாகத்தை மேற்கொண்டு வந்ததனால் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் சேர்விடமாகக் கொண்டவர்களும் அயலிடமாகக் கொண்டவர்களும் அதிபர் சின்னத்தம்பி என அழைக்கும் நிலைக்கு அதிபர் கடமை நெறியிற் கண்ணியத்தையும் உயர்வொழுக்கத் தகைமையையும். நேர் சிந்தனையால் சகலரையும் பாடசாலைத்துவத்தின் பண்புகளை நுகர்ந்து கொள்ளக் கூடியதாகவும், அரிஸ்டோட்டில், பிளேட்டோ வழி கல்விப்புலக் கலாச்சாரத்தைப் பறைசாற்றி வந்தவராகவும் காணப்பட்டார். அதிவறள் பிரதேசப் புவியியலமைப்பைக் கொண்ட அதிகஷ்டப் பிரதேச தீவகமாகிய நெடுந்தீவு மண்ணிலுள்ள சிறார்களின் வாழ்க்கைக்கான கல்வியூட்டலில் தன் மண்ணுக்கான வகைகூறலை இதயநாதமாகக் கொண்டு அவராற்றிய சேவை அவரை எக்கணமும் மறக்காத பல உள்ளங்களினூடாகவே புகழ்பூத்த அதிபர் என்ற தகைமை காட்டப்பட்டது. தனது சொந்த மண்ணுக்கு ஆற்றிய சேவை வெளிப்புலங்களிலே அவரது நிர்வாகத்தைப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு இடம் சமைத்திருந்தது. அப்போதைய யாழ் மாவட்டக்க கல்விப் பணிப்பாளர்கள் யாழ் மண்ணில் பல புகழ் பூத்த பாடசாலைகளிற்கு அதிபராகக் கடமையாற்ற வரும்படி கோரியிருந்தனர். அதற்கு அவர் கூறிய மறுமொழி வளர்ச்சியடைந்த நகரங்களில் யாரும் திறமையாக நிர்வாகம் நடத்துவதற்கு வருவார்கள். ஆனால் வசதி குறைந்த பிரதேசங்களில் கடமையாற்ற முன் வர மாட்டார்கள். அதனால் கஸ்டப்படும் மக்கள் உள்ள பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு செய்யும் தொண்டே எனக்கு மிகவும் பிடித்தமானது. அதுவே கடவுளுக்கு செய்யும் தொண்டு என்ற கருத்தை உயர் நிர்வாகிகளுக்கு தெரிவித்து அவர்கள் கோரிக்கைகளை நிராகரித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அப்போதைய யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் சிவநாதன் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் கிளிநொச்சி வட்டாரத்தில தனது சேவையைத் தொடர சம்மதம் தெரிவித்திருந்தார். நெடுந்தீவு வாசிகளை அதிகங்கொண்ட இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் என்னாலான உதவியைச் செய்யக்கூடியதாக இருக்கும் என்று அவர் கருதியதனடிப்படையில் இச்சம்மதத்தை வழங்கியிருந்தபடியால், 1981 ஆம் ஆண்டு யாழ்/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு அதிபராக நியமனம் பெற்று வந்தார்.

அமரர் சண்முகநாதன் அதிபராக இருந்து வெளிக்காரணிகள் சிலவற்றால் மாற்றலாக்கப்பட்ட வேளை நிலை தளம்பியிருந்த கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் நிர்வாகத்தைச் சீர் செய்யுமுகமாக தனக்குரிய திறமை மிடுக்குடன் கடமைப் பொறுப்பை ஏற்று பாடசாலை அலுவலகமும் தானும் என்று ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு உரமூட்டி. கன்னங்கரா அவர்களின் இலவசக் கல்வித்திட்டத்தை சரியான வழியில் நடைமுறைப் படுத்தி வந்தார்.

இவ்வகையில் கல்வி சீர்திருத்த வரலாற்றில் கௌரவ கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் கொண்டு வரப்பட்ட கொத்தணிக் கல்விமுறையின் முன்னோடிப் பரீட்சார்த்த நிர்வாகத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக் கொத்தணி அமைப்பு யா/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தை மையமாகக் கொண்டு 9 பாடசாலைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்டதனால் இதன் அதிபர் கடமைப் பொறுப்பை 1982 இவர் ஏற்றுக் கொண்டார். அகில இலங்கையிலும் இப்பரீட்சார்த்தத்திட்டம் நடைபெற்றுக்கொண்டு வந்தவேளை மத்திய அமைச்சின் பல மதிப்பீட்டாளர்கள் கிளிநொச்சிக் கொத்தணியின் மதிப்பீடுகளுக்கும் வந்து சென்றனர். சுற்றுநிருபங்கள், பணிப்புரைகள் என்பவற்றைச் சிரமேற்கொண்டு அவ்வவ்வேளைகளில் உரிய கடமைகளை நிறைவு செய்து முடித்ததனூடாக கல்வி அமைச்சு மட்டத்தில் வெற்றிகரமான கொத்தணி அமைப்பு திகழ்வதற்கும் வெளி உலகிற்கு காண்பிப்பதற்கும் அமரர் திரு.இரா.சின்னத்தம்பி கொத்தணி அதிபர் அவர்களின் நிர்வாகத்திறமை வரலாறு காட்டுகின்ற பாடமாகும்.1986 இல் கல்வி அமைச்சில் நடாத்தப்பட்ட கொத்தணி அமைப்பின் மீளாய்வு மகாநாட்டில் அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் கௌரவ கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் வாயாரப் போற்றப்பட்டு அடையாளம் காட்டப்பட்டார். இலங்கைத் தீவெங்கிலுமுள்ள மாவட்டக் கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள் கூடிய மகாநாட்டில் "சின்னத்தம்பியின் கொத்தணி அமைப்பைச் சென்று பார்த்து உங்கள் நிர்வாகத்தை மேற்கொள்ளுங்கள். என்று கூறுமளவுக்கு இப்பின் தங்கிய இடத்தின் வளங்கள் அருகிக் காணப்படும் பௌதீகச் சூழலைக் கொண்ட கிளிநொச்சி கொத்தணி அமைப்பை அகில இலங்கையிலும் முன்மாதிரி அமைப்பாக பரீட்சார்த்தத் திட்டத்தில் செயற்படுத்திக் காட்டிய தீரமிக்க நிர்வாகம் கிளிநொச்சிக் கல்விப்புலத்தில் பலருக்குப் போதிக்கப்பட வேண்டிய ஒரு பொருளாகவே உள்ளது. பதவிக்காலத்தில் தான்பொறுப்பேற்றுக்கொண்ட நிலையை உரிய நியமங்களினடிப்படையில் நகர்த்தி பயன்தாரர்களின் பூரணதிருப்தி என்ற விடயத்தை நடைமுறையிற் காண்பித்தல் என்பது கூட்டங்களிற் கதைப்பது போன்றதோ, கூடியிருப்பவர்களுக்கு குசலம் சொல்லுதல் போன்றதோ அல்ல. குறிதவறா கொள்கையுடனும் கூடவே மனித நேயம் போதித்த திடகாத்திரத்துடனும், குறிகெட வைக்கும் வஞ்சகர் வலையில் விழாத மதி நுட்பமும், எந்நேரமும் காழ்ப்பைக் காட்டும் எதிரிக்கு அடிபணியாத்தன்மையும் தேவை. இவை அனைத்தையும் ஒரு சேரக் கொண்டவரே அமரர்.இரா.சின்னத்தம்பி அவர்கள். ஆதலாலேயே யாரையும் நின்மதியான நிர்வாகம் செய்யவிடாப் பின்புலம் கொண்ட கிளிநொச்சிக் கல்விப்புலத்தின் சாதனையாளன் என்ற பெருமையை நிலைநாட்டுவதற்கு இவ்வாறான இவரின் பண்புகளே காரணமாக இருந்ததுடன் துணையேதுமற்ற தனிமனிதனாக நேசமிகு அதிபர், ஆசிரியர்களின் உதவியுடனேயே இச்சாதனையை நிலைநாட்டிக் காட்டியுள்ளார்.

சாதனையில் வேதனை என்ற விதியாரையும் விட்டுவைக்கவில்லை. கிளிநொச்சி மண்ணில் தலைநிமிர்ந்து நின்று மனித நேயத்துடன் செயலாற்றும் எவருக்கும் வரலாறு காட்டுகின்ற பாடம் வேதனைதான். அமரர் இரா. சின்னத்தம்பி கல்வி வலயத்தில் பதித்த தடங்களால் வரலாறு ஆகிவிடுவார் என்ற உள்நோக்கில் அரசியல் சாயம்பூசி இவரது நிர்வாகத்தை நிலைதளம்பச் செய்ய முக்கிய பிரமுகர்களின் பக்கத்திலிருந்து கணைகள் ஏவப்பட்டன. மத்தியமகாவித்தியாலத்தின் காணிகள் எல்லை வரையறையற்று கபளீகரம் செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளை இவ்வளவாவது பாசாலையின் சொத்தாக இருக்கட்டும் என்று கபளீகரக்காரர்களைத் தடுத்து நிறுத்தி பாடசாலையின் சொத்தை சமூகத்திற்கு பொறுப்புடையதாக்க வேண்டு மென்பதில் அமரர் அவர்கள் துணிகரமாகச் செயற்பட்டார். பல மிரட்டல்காரருக்கும் மத்தியில் 50 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்ட மத்திய மகாவித்தியலயத்தின் காணியை இப்போதுள்ள அளவுக்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றிய பெருமை இவரையே சாரும். அத்துடன் ஆசிரியர்கள் அச்சமற்றுச் செயற்படுத்துவதற்கான காவலனாகவும் செயற்பட்டார். தன்குடும்பத்தலைவி யுடனும் புதல்வனுடனும் பாடசாலைக்குள்ளேயே தங்கியிருந்து யாழில் இருந்துவரும் ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதியும் அமைத்துக்கொடுத்து குறிப்பாக இளம் பெண் ஆசிரியர்கள் அச்சமின்றி அங்கு வசித்து செயற்படுவதற்கேற்ற வழிவகைகளைச் செய்துகொடுத்து வசதி குறைந்த ஏழை மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு விடுதியும் அமைத்து அம்மாணவர்களின் வாழ்வில் வசந்தம் ஏற்பட வகை செய்தார். இவர் காலத்திலேயே மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து எந்திரவியல் கற்கைநெறிக்கும், மருத்துவக் கற்கைநெறிக்குமாக அநேக மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்ற வரலாறு இன்றும் யாவராலும் மெச்சத் தக்கதாகவுள்ளது. இதனூடாக கிளிநொச்சி சமூகப்புலத்தின் முன்னேற்ற கரமான ஒரு மாற்றத்தின் பிதாவாகவும் பரிணாமம் பெறுகின்றார்.

இத்தகைய பண்புகள் கிளிநொச்சி மண்ணின் கசப்பாகவே காட்சியளித்தது. "தானும் செய்யான் செய்பவரையும் விடான்" என்ற கருத்திற்கிணங்க யாழ் மண்ணின் சகல பாகக்குடிமக்களையும் மூதாதையர் களாகக் கொண்ட கிளிநொச்சிப் பிரதேசத்தில் அன்றிலிருந்து இன்றுவரை தூய்மையான சேவகர்களை மாசுபடுத்தல் என்ற நிலை வெளியிற் புன்னகையுடன் உள்ளே ஆலகால நஞ்சுடன் வாழ்ந்துவரும் மனித குலத்தினரின் சேட்டையாகவே காணப்பட்டு வருகின்றது. இத்தொடர்கதையில் அமரர் அவர்களுக்கு நேர்ந்தநிலைமை அவரது தாயகத்தைச் சேர்ந்த அமரர் கந்தையா தர்மலிங்கம் அதிபர் இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம் (அமரர் சின்னமணி வாத்தியாரின் முத்த புதல்வன்) தறபோது பிரான்ஸ் தேசத்தில் வசித்து வரும் திருவாளர் காராளபிள்ளை அதிபர் (அனலைதீவை பிறப்பிடமாகக் கொண்டவர்) போன்றோருக்கும் நிகழ்ந்தது. அவர்கள் தமது மாணவர்கள் மேல்வைத்திருந்த அளவற்ற கருசனை காரணமாக ஏழை மாணவர்கள் வாழ்வில் தீபமூட்டி அவர்களை கற்றோர் குளாத்தில் கொண்டு வருவதைத் தடை செய்யுமுகமாகவே இக்கைங்கரியங்கள் திட்டமிட்டு அறிந்து மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக பக்கச்சார்பற்ற முறையில் மனித நேயத்துடன் செயலாற்றும் இவர்களுக்கு ஏனையோரிடமிருந்து அனுதாபம் ஏற்படாமலாக்குவதற்காக அரசியல் சாயம்பூசி இவர்கள் தேர்தலில் நிற்கப்போகிறார்கள் என்ற மாயையைப் படரவிட்டு விழித்த கண்ணுள்ளோரை மாயைக்கண்ணுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோராக்கும் மாயாஜாலம் தவளும் இக்கிளிநொச்சி மண்ணின் பரிதாபமாகும். இவ்வாறான கல்வி மன்றங்களின் வாழ்வில் கலக்கத்தை உண்டாக்கி நொடிக்க வைத்து இளம் சிறார்களின் கல்வியில் மண்போடும் செயல் யாராலும் சிந்திக்கப்படவேண்டிய காரியமாகும்.

கிளிநொச்சிக் கல்விப்புலத்தின் பாரம்பரியத்தினடிப்படையில் நேர்மையாக செயலாற்றுபவர்கள் மாற்றப்படவேண்டும் என்ற தாரக மந்திர சிந்தையிலிருந்து அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் தப்பவே முடியவில்லை. உள்ளூர் நிலைகளிலிருந்து கல்வி அமைச்சு மட்டம் வரை "எமக்குத் தேவையில்லாத வர்களை உடனடியாக மாற்றம் செய்" என்ற கோரிக்கைகளுக்கு கடவுள் துணையுடன் அமரரின் சேவைக்கனதியின் விளைவால் மறுப்புரையே வழங்கப்பட்டது. கொத்தணிப் பரிபாலனத்திற்குக் கல்விப்பணிப்பாளராக இருந்த திரு.விக்கிரமசிங்க அவர்கள் கிளிநொச்சி பாராளுமன்றப் பிரதிநிதியின் கோரிக்கையையே தூக்கியெறிந்து எமக்கு அரசியல் தேவையில்லை சேவையாற்றும் திறமையான அதிகாரியே தேவை என்று ஆணித்தரமாக கூறி அனுப்பினார். இந்நிலைமையானது அமரர் இரா. சின்னத்தம்பி அவர்கள் ஆதரிப்பாரற்று அனுதாபிகளாக கல்வியைப் பெற்றுவரும் வறிய மாணவர்கள்பால் காட்டிய கருசனையும், அவர்களின் வாழ்வியல் மலர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக தனது நிர்வாக இயந்திரத்தை ஒருமுகப்படுத்தி மனித நேயத்துடன் அனாதரட்சகராக சேவையாற்றிய செயற்பாட்டாற் கிடைத்த பலாபலனுமாகும். தற்போது அவரால் உருவாக்கப்பட்ட அவரது மருமகன் மாரிமுத்து கணபதிப்பிள்ளை கொழும்பு றோயல் கல்லூரி பிரதி அதிபராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் செயலாற்றி வருகின்றார். அதேபோல அவரது பல மாணவர்கள் கல்விமான்களாக அரச உயர் நிர்வாகிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக பல்துறை விற்பன்னர்களாக இருக்கின்றார்கள் ஆனால் அப்போது அமரர் யாருமற்ற தனிமனிதனாகவே பெருஞ்சவாலுக்கு முகங்கொடுத்து தனது அரச பணியை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி கொத்தணியின் முன்னுதாரண நிர்வாகியாகத் திகழ்ந்த அமரர் 1987இல் நெடுந்தீவுக் கொத்தணியினைச் சீர்செய்வதற்காக கல்வி அதிகாரிகளின் வேண்டுகையைச் செவிசாய்த்து தனது பிறந்தமண்ணுக்கு சேவையாற்ற மீண்டும் புறப்பட்டுச் சென்றார். 90களில் தீவகப் பிரதேசம் தனித்துவமாக்கப்பட்டபோது தீவகமக்களிற்கு சேவை செய்ய அதிகாரிகள் எவரும் முன்வராமை மிக்வும் துர் அதிஷ்ட நிலை ஆகும். பிள்ளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப்பரீட்சைக்கு பொறுப்பு நிற்றலென்பது மிகவும் பயங்கரமாக இருந்தகாலத்தில் அக்கால பரீட்சை ஆணையாளர் நாயகம் தீவக வலயத்தின் பொறுப்பினை ஏற்று நடத்திய அமரர் இரா. சின்னத்தம்பியிடம் அனுமதிப்பத்திரங்களைக் கையளித்து உமது பிரதேசத்திலுள்ள பிள்ளைகளைப் பரீட்சைகளுக்கு தோற்றப் பண்ணுங்கள் என்று நம்பிப் பொறுப்பை ஒப்படைத்த தன்மை அவரது நம்பிக்கைப் பொறுப்பு எவ்வளவு தூரம் மதிக்கப்பட்டதென்பதைக் காட்டிநின்றது. அக்காலத்தில் தமது வாழ்வுக்கு தெய்வமாக இருந்து எம்மை பரீட்சை எழுதப்பண்ணி அரச உத்தியோகங்களில் அமரப்பண்ணிய பெருமை அமரர் இரா. சின்னத்தம்பியையே சாரும். என தீவகத்தைச் சேர்ந்த பல அரச ஊழியர்கள், வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் போன்றோர் இன்றும் தமது உளமார வாழ்த்துகின்றனர்.

ஆசிரியராய், அதிபராய், கொத்தணி அதிபராய், கோட்டக்கல்வி அதிகாரியாய், தீவக வலயக்கல்விப் பணிப்பாளராய் கடமையாற்றிய அமரர் இரா.சின்னத்தம்பி அவர்கள் தனது கடமையின் மூலம் வழங்கப்பட்ட பதவிகளுக்கு பெருமை தேடித்தந்துள்ளார். இன்றைய நிலையில் பலரது உயர்வுக்கு அவர்களுக்கு வழங்கப்படும் பதவிக்கதிரைகளே துணைபுரிகின்றன. ஆனால் அமரர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவிக்கதிரைகள் அவர்களால் சிறப்பிடம் பெறுகின்ற நிலைமையை நாம் கண்டுள்ளோம். 1994இல் இவர் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் அனுபவமுள்ள நிர்வாகியாய் கல்விப்புல மேதாவியாய் விளங்கினார். நீண்டகாலம் வாழ வேண்டியவரின் மறைவு கல்வியுலகிற்கு பேரிழப்பாகும். பிற உலக வாழ்வில் அமரர் படைத்துள்ள சாதனையின்துணை நின்ற அவரது பாரியார் இவரது பிரிவால் மிகுதுயருற்றிருக்கும் இவ்வேளை அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தமைகின்றேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**திரு.கோ.செல்வராசா,**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(கல்வி முகாமைத்துவம்),
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியுமோ உங்கள் நினைவுகளை.....

நம் உறவுகளுக்கெல்லாம் ஊற்றாய் அன்பு, அறம், நேர்மை கொண்டு நீதியின் நாயகனாய் அறிவுக்கு ஆசானாய் தீவகத்தின் பண்பு நிறைந்த பண்பாளனாய் இருந்த எமது மைத்துனரை இழந்த செய்தியைக் கேட்டதும் ஆறாத்துயரும் அதிர்ச்சியுமடைந்தோம். இவர் நோய் வாய்ப்பட்டிருந்தது கேள்வியுற்றதும் தானாடாவிட்டாலும் தசையாடும் என்பது போல் மிகப் பெருங்கவலையாக இருந்தது. எனினும் இவர் இன்னும் பல வருடங்கள் வாழ்வார் என்ற உறுதியுடன் எங்கள் காலமும் போய்க்கொண்டிருந்தது.

இவர் எனக்கு மைத்துனர் என்பதால் எமது குடும்பத்தாருடன் கூடிய பற்றும் ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தார். எமது குலத்திற்குள் ஒரு பெருங்கல்வி அறிஞனாய், அன்புக்குரியவராய் உறவுகளைப் போற்றுகின்ற உயர் பண்பாளராய், உறவுகளை வளர்த்து, நல்லதையே நினைத்து நல்லதையே செய்தவர். உறவென்றால் உளமுருகி அவ்வுறவுகளை ஒருங்கிணைத்து ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் அனைவரும் சூழ வாழ்ந்தவர். அவரின் இழப்பு எல்லோர்க்கும் பேரிழப்பு. இவர் நாட்டுக்கு செய்த சேவைகளை யாவரும் அறிவர். கொத்தணி அதிபராய் இருந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை. தீவக வளர்ச்சிக்காக அயராது உழைத்துப் பணியாற்றியவர். இவரின் சேவைகளைக் கண்டு, கேட்டு அறிந்து பேருவகை கொண்ட நாம் இன்று கலங்கி நிற்கின்றோம்.பிறந்த மண்ணின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தோடல்லாமல் கடைசிவரை அங்கிருந்து உயிர்நீத்துள்ள பெருந்தகையை இன்று இழந்து விட்டோம்.இவரை நாம் நம் உறவு என்று கூறுவதில் பெருமையடைகின்றோம.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர். அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு என்ற வள்ளுவர் வழிநின்று வாழ்ந்த தங்களின் நினைவு எம்மால் என்றும் மறக்கவியலாது. குடும்பத்தாரின் துக்கத்தில் பங்குகொள்வதோடு அவர்களுக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

மச்சாள்

**சற்குணவதி கந்தையா குடும்பத்தினர்.**

(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் நினைவுகளில் இறவாதவர்......

கம்பீரமான தோற்றமும் ஒளிவீசும் கண்களும் கடமை கட்டுப்பாடு நெறிதவறாத நிதானமான உள்ளமும் பேச்சும் காருண்ய சிந்தையும் நெறிபிரளா வாழ்வும் வெள்ளை உள்ளமும் கொண்ட அதிபர் மாமாவின் மரணச் செய்தி கேட்டு கலங்கிப் போய்விட்டோம்.

அவரின் இழப்பு தீவகத்திற்கும் நம் நாட்டிற்கும் குறிப்பாக உறவுகளுக்கும் குடும்பத்தார்க்கும் பேரிழப்பு. இவர் எல்லாரது உயர்வையும் தன் உயர்வாய் எண்ணி அதனை கருத்தெடுத்து தான் பிறந்த கடைசி தீவக மண்ணிலே வசித்து தனது கடைசி காலத்தையும் அங்கேயே முடித்திருக்கின்றார். இறப்பு பிறப்பு இயற்கையானது எனினும் இவரது பிறப்பும் இறப்பும் வரலாறாய் எம் கண்ணெதிரே விரிகின்றது. இவரது பெயர் கூட இயற்கையாய் அமைந்தது போலவே இவரது வாழ்வியலும் இயற்கையாய் அமைந்து சிறந்திருந்தது. இவர் எம் குடும்பத்தில் மிகுந்த பாசமும் பற்றும் கொண்டிருந்தார். எனது அம்மாவினுடைய தம்பி. நான் அவர் வீட்டில் தங்கியிருந்து பாடசாலைக்குப் போனது இப்போதும் பசுமை நினைவாயுள்ளது. நான் ஏதாவது குறும்புகள் செய்தால் அதிபர் மாமாவிடம் சொல்லிவிடப் போவதாக சொல்லி எமை வளர்த்தார். இவர் அதிபராக இருந்த காலத்தில் இவரிடம் பலமுறை அடிவாங்கியிருக்கின்றேன். நம்மையெல்லாம் வழிப்படுத்த விழுந்த அந்த அடிகள் என்றைக்கும் புனிதமானவை. எனக்கு அவரிடம் கூடிய மரியாதையும் பயமும் வர அடியும் ஒரு காரணம்தான். நான் இலங்கை போய்த் திரும்பும் ஒவ்வொரு தடவையும் அவரைப் போய்ப் பார்க்காமல் திரும்பியது கிடையாது. நான் அவரிடம் ஒருமுறை கனடா வந்து போங்களேன் என்று கேட்டதற்கு மாமியின் சுகவீனத்தைக் காரணம் காட்டி மறுத்திருந்தார். சில வருடங்களுக்கு முன்னதாக மாணவன் என்கின்ற பயத்தைப் போக்கி அவர் ஒரு நண்பரைப் போல என்னிடம் பழகினார். பல விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவார். ஊர் நலம் பற்றியே அதிகம் பேசுவார். முன்பு அவரிடம் அடிவாங்கிய கதைகளையும் பேசிச் சிரித்திருக்கின்றோம். அத்தகு தருணங்களில் தான் அவர் என்மேல் வைத்திருந்த பாசத்தையும் நேசத்தையும் அக்கறையையும் அதிகம் புரிந்து கொண்டேன்.

1998 ஆம் ஆண்டு திருமணம் செய்து முதன்முதல் அவர் வீட்டிற்குச் சென்றேன். அங்கு ஒருநாள் முழுவதும் அவருடன் இருந்த சந்தோஷமான நினைவுகள் மிகப் பசுமையுள்ளவை. எனது அம்மா நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அதிபரைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலை அவரிடம் இருந்தது. எங்கள் அதிபர் மாமா என்றும் எங்கள் நினைவுகளில் இறவாதவர். அவரின் குடும்பத்தார்க்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**அன்பின் மாணவன் / மருமகன்**

**நடராசா சிவகுமார்** *(Canada)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன் மக்கள்

மக்கட் பண்பு கொண்டு இப்பெரு நிலத்தில் வாழ்வோர் சிலரே உளர். மனித வாழ்க்கைக்கு பண்பாடு உயிர் போன்றது.இதனை ஒவ்வொருவரும் இனிது ஓம்பி உய்வு பெறவேண்டும்.

இம்மக்கட் பண்பாடு உயர்ந்து உயர்ந்து நிறைவு எய்தியபின் தெய்வத்தன்மை வந்துசேரும். அத்தன்மை எய்தினோர் மேன்மக்களா வார்கள். அம்மேன்மக்கள் உயிருடன் உலகில் வாழும் பொழுது தமது உரை வளத்தாலும், உள வளத்தாலும், உணர்வு வளத்தாலும் உலகை உய்யக் கொள்வர். இவர்கள் பூத உடம்பு நீங்கிய பின்னும் தமது அளவற்ற ஆத்ம சத்தியால் உலகுக்கு நன்மை புரிவர். ஆதலால் இவர்கள் உடம்பு நீங்கி மாண்டவரேயாயினும் ஆண்டவன ருளால் அமரத்வம் பெற்று என்றும் இருப்பவரே யாவார்கள்.

காட்டிலே வளர்ந்த சாதாரண மரங்களை வெட்டிக் குவித்தால் அவற்றை விறகு என்பர். அவற்றை விற்கும் கடைக்கு விறகுக்கடை என்று பேர். தேக்கு முதலிய ஜாதி மரங்களை வெட்டிக் குவித்தாலும் அவற்றை மரமென்றே கூறுவர். அவற்றை விற்கும் கடைக்கு மரக்கடை என்று பேர். ஆகவே தேக்கு முதலிய மரங்கள் வெட்டுப்பட்டும் விறகென்று பேர் பெறாமல் மரமென்றே பேர் பெறுவது போல் மேன்மக்கள் இறந்தும் என்றும் இருப்பவர்களாகவே அமரத்வம் பெறுகிறார்கள். இந்த வரிசையில் நிற்பவர்கள் திருவள்ளுவர், சேக்கிழார் அடிகள் முதலிய மேன்மக்களாவார்கள். மேலும் மேன்மக்கள் ஓரொருகால் தம் நிலையினின்றும் குன்றினாலும் தம்முடைய அருட்பண் பினின்றும் குன்ற மாட்டார்கள். இவர்கட்கு மானமே இலட்சியமாகத் திகழும் இதனைக் கீழ்வரும் இனிய வரலாற்றில் அறிக.

சேரநாட்டைச் செந்நெறி நின்று செங்கோல் செலுத்திக் கணைக்காலிரும் பொறை என்ற மன்னன் அரசு புரிந்தனன். அவனுடைய உயிர்த் தோழர் பொய்கையார் என்பவர். இவர் பெரும் புலவர். இப் புலவருடைய தோழமையால் கணைக்காலிரும்பொறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்க் கதிர் பூவுலகமெங்கும் வீசியது. வாள்வலியாலும் தோள்வலியாலும் மிக்க சோழ மன்னன் செங்கணா என்பவன் பொய்கையார் தொடர்பினால் தானும் புகழ் பெற விழைந்தான். பொய்கையாரைத் தம்மிடம் வந்திருக்குமாறு தூதரை விடுத்து அழைத்தான். பொய்கையார், சோழநாடு வளமை மிக்கதென்றும் சோழன் செல்வச் சிறப்புடையவனென்றும் அறிந்தும் சேரனிடமுள்ள நட்பின் தகைமையால் அவனை விட்டுப் பிரிய மாட்டாதவராய் சோழனிடம் செல்ல மறுத்துவிட்டார்.

சோழன் பொய்கையாரை தன்பால் அனுப்பி வைக்குமாறும், இல்லையேல் செருக்களத்திற்கு வருமாறும் தூதரை அனுப்பினன். கணைக்காலிரும்பொறை புலவருடைய உரிமையில் குறுக்கே நில்லாமல், சேனைகளுடன் போருக்கு புறப்பட்டு வந்தான். சோழனுக்கும் சேரனுக்கும் கடும்போர் நடந்தது. இறுதியில் உறுதியுடைய சோழன் வென்று சேரனைச் சிறைப்படுத்தினன். சேரன் சிறையில் கிடந்து அல்லலுற்றனன்.

பொய்கையார் இதனை அறிந்து நண்பனுடைய சிறைமீட்க வேண்டி சோழன்பால் வந்து களவழி நாற்பது என்ற நூலைப் பாடினார். அதனைக் கேட்ட சோழன் பெரிதும் மகிழ்ந்து, அவரை வணங்கி பெரும்பரிசில் தர முயன்றனன். பொய்கையார் பரிசிலை மறுத்துத் தமது நண்பன் கணைக்காலிரும்பொறையைச் சிறையிலிருந்து விடுவதையே பரிசிலாக வேண்டினார். அதற்கிசைந்த செங்கணான் பொய்கையாருடன் சேரர்கோனைச் சிறை மீட்கும் பொருட்டு சிறைச்சாலையில் நுழைந்தான்.

சிறையில் சேரர்கோன் தண்ணீர் விடாயால் வருந்தி சிறைக்காவலனை நீர் தருமாறு கேட்டனர். அவன் சற்று அலட்சியமாகவும் தாமதாகவும் நீர் கொணர்ந்து அவரை மதியாமல் ஒரு கரத்தால் நீரை நீட்டினன். சேரமன்னன் அந்நீரை வாங்கி உண்டு உயிர்வாழ விரும்பாதவராய் இறைவா என்று அழைத்தார். அவர் உடம்பினின்றும் உயிர் பிரிந்து விட்டது. சிறை நீக்க வந்த செங்கணானும் பொய்கையாரும் உடற் சிறையினின்றும் நீங்கிய அவரைக் கண்டு அலக்கணுற்றனர். பொய்கையார் நண்பா என்றனர். அவர் ஆவியும் அகன்றது. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் அஞ்சலித்தோம்

மறுவிலாது மாந்தர்கள்
வையத்தில் வாழ்ந்திட
வகை சொன்ன வல்ல குருவே
உன்பாதம் சரண்புகுந்தே
வரைகின்றேன் சில வரிகள்

பட்டங்கள் பல பெற்றே
பள்ளி வந்தீர் ஆசானாய்
நால்வர் பணியினை
தனியே ஏற்று நீர்
உயர்தரம் தன்னிலே
அத்தனை பாடமும் சித்திபெற
வைத்தவரே

பண்புதனை எமக்கு ஊட்டி
எதிர்காலம் அதைக்காட்டி
பல்லூர் சென்று பலர்
பட்டங்கள் பெற வைத்தீர்
அத்தனைக்கும் அத்தி பாரம்
உத்தமரே நீங்கள் ஐயா

நல்லாசானாய் அதிபராய்
பதில் கல்விப் பணிப்பாளராய்
நீண்ட உங்கள் சேவையினால்
எத்தனை அறிஞர்கள்
வரிசையாய் நிற்கின்றனர்
நெடுந்தீவில் நீங்கள்
போட்ட பல வித்துக்கள்

இலங்கைத் தீவகத்தில்
விருட்சங்களாய் பலவிடத்தில்
பக்குவமாய் நீருற்றி
பசளையும் இட்டவரே
உன் நாமம் சொல்லியவை
நீண்டு நிழல் தருகுதையா

ஆத்மீக வாழ்வுதனை
அக்கறையாய் எடுத்துரைத்தீர்
ஆலமாவனத்து ஐங்கரனை
அதற்காகத் துணைகொண்டீர்
ஐங்கரனின் கொடியேற
அருட் பணிபுரிந்தீர்
கொடியேறும் நாள் வரவே
உமை அழைத்தார் ஐங்கரனும்

கலங்கும் இதயத்தின்
கலக்கம் போக்கி
நிரந்தர வாழ்வில் இறைபாதம்
பற்றி விட்டீர்
என்கின்ற நினைவோடு
பூமாலை போட்டு பாமாலை பாடி
வழியனுப்பி வைக்கிறோம்.

அன்புடன்
உங்கள் மாணவர்கள்
**இரா. தர்மரட்ணம் - குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

26

02

1934



மறைவு

16

03

2013

எமது மன்றத்தின் ஆரம்பகால போசகராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய

**அமரர் இராமநாதர் சின்னத்தம்பி** அவர்கள்

(அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, கல்வி அதிகாரி)

புலம்பெயர் உறவுகளின் அன்புள்ள தந்தையே
எம்பிள்ளைகளுக்கு நலமுடனே கல்வியூட்டி
வளம் பெறச் செய்திட்ட ஆசானே !
பெயர் சொல்லி நாம் வாழ வழிசமைத்த ஆசானே
நீர் என்றும் எம்வாழ்வதனில் ஒளியாக நின்றிடுவீர்
பாரினிலே பல தடங்கள் கடந்தாலும்
உம் வாழ்வதனில் என்றுமே எமை வீழவைத்ததில்லை
என்பதுதான் உண்மை அன்புள்ள ஆசானே
உமது ஆன்மா எமைவிட்டுச் சென்றாலும்
நாம் என்றும் உம்முடனே உமது நினைவுகளுடனேயே
வாழ்க்கையினை தான்சுமந்து செல்கின்றோம்.

***அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்***

நெடுந்தீவு

பிரிவால் வாடும்
புலம்பெயர் உறவுகளும்,
குடும்ப உறவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றோடு வந்த செய்தி.... கனவாகி போகாதா !

மண்மகிழ
26
02
1934



கண்நெகிழ
16
03
2013

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர், தீவகம்)

கண்ணெதிரே நீ நின்று விண்ணதிர எமக்கு கற்பித்த குரல்
செவிப்பறை தன்னில் பறை ஒலியாய் கேட்கிறதே.....
திருநீறு, உங்கள் நெற்றிக்கு ஒருநூறு அழகூட்டும்....
சார்ந்த சந்தணமும் சந்தோசம் கொள்ளும்...
உங்கள் சுவடும் என்றும் பதிவாய் இருக்கும்

வழிகாட்ட நீ இல்லை என்று விழி எல்லாம் நீர் சொரிகிறது....
இதயச் சுவடுகள் இறுக்கமடைகின்றன என்ன செய்வது
எல்லாம் விதி என்று விதித்தன செய்வோம்
கோட்டம் அது உங்களின் கோட்டையது....
நெடுந்தீவு கல்வியே எழுந்து நின்ற காலமது....

திரையாடி வரும் கடல்த் தாயும் பனைமரக்காற்றும் உங்கள் சேவையின் தேவைபற்றி இன்னும் பேசுகிறது....காலம் உள்ள மட்டும் நீங்கள் எம் மனதில் வாழ்வீர்.

1992ம் ஆண்டில் தீவகம் தனிமைப்படுத்தப்பட்ட வேளையில் 3000 மாணவர்கள் கல்வியை தொடர கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு இணைந்து கல்வியை மேம்படுத்திய பெருமை அன்னாரையே சாரும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு துயர்பகிர்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**சில்வேஸ்திரி அலன்றின் (உதயன்)**
பாராளுமன்ற உறுப்பினர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்

மண்ணில்

26

02

1934



விண்ணில்

16

03

2013

எமது மன்றத்தின் ஆரம்பகால போசகராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

(அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி, கல்வி அதிகாரி)

அலைகடல் தாலாட்டும் பசுந்தீவாம் நெடுந்தீவில்
கல்விக்காய்ப் போராடி தடம்பதித்த ஆசானே
உமக்காக ஒரு சொட்டுக் கண்ணீரை
காணிக்கை ஆக்குகின்றோம்.

வாழ்நாள் தன்னிலே வரும் நாளை எதிர்பார்த்து
காத்திருந்த வேளைதனில்
கல்விக்காய்க் கண்திறந்த ஆசானே
நீடூழி வாழ்க நீர் என்றும் எம் மனதிலே

காலனவன் காலடியிற் சரண்புகுந்த வேளைதனில்
கண்ணீர் மல்கி நிற்கும்
உம் உறவுகளைப் பாரீரோ எம் ஆசானே !
எம் மனத்திருப்திக்காய்.....

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

துயருடன்

நெடுந்தீவு மக்கள் சார்பில்

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்

நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

மண்மகிழ
26
02
1934



கண்நெகிழ
16
03
2013

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்கள்

(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர், தீவகம்)

"தீவகத்தின் 22 பாடசாலைகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள், ஆசிரியர்களை நியமிக்க வழிசெய்து தீவகக் கல்வியினை துளிர்விடச் செய்து 1992 ஆம் ஆண்டு தீவகப் பிரதேசப் போக்குவரத்து துண்டிக் கப்பட்ட காலப்பகுதியில் தீவகக் கல்விப் பணிப்பாளராக பதவியேற்று தீவகத்தின் கல்வியை கட்டியெழுப்பிய மகான் என்றால் அது மிகையாகாது".

கோபுரம் சாய்ந்ததுவோ? கொடுந்துன்பம் நேரிட்டதுவோ?
எங்கள் கோலங்கள் அழிந்ததுவோ
தாங்க முடியாத துயரத்தில் தவிக்குதையா எம்நெஞ்சு

கண்ணீர் விட்டு எழுதுகிறோம் கவிதை
காணிக்கை ஆகட்டும் - நின் காலடியில்
அமைதியாகத் துயிலும் தங்கள் ஆன்மா இறைபதம்
சேர இறைவனை இறைஞ்சுகின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**அதிபர்கள் (நெடுந்தீவு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

மண்ணில்
26
02
1934



விண்ணில்
16
03
2013

## எங்கள் ஆசான் உயர்திரு.இரா.சின்னத்தம்பி

(நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர், கிளிநொச்சி மாவட்ட கொத்தணி அதிபர், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும் நெடுந்தீவு விஷேட ஆணையாளரும் அனைத்து இலங்கை சமாதான நீதிபதியும்)

பேராளுமை ஒன்று உறக்கம் கொண்டது
பேராண்மை கொண்ட செயல் வல்லோன்
தாராண்மை மனத்திறன் தன் நெஞ்சறிய தவறிழையாதோன்
சிராளன் தன் நடைத்தையால் உளம் வெல்வோன்

அறிவால் சிறந்த ஆசான்
ஆளுமை மிக்க அதிபர்
நெறிபுரள்வற்ற பணிப்பாளர்
நீதி நெறி வழுவா விஷேட ஆணையாளர்
பணி பகிர்ந்தளிக்கும் கொத்தணி அதிபர்
பிறர் நலன் பேணும் சமாதான நீதவான்

பல்துறை ஆளுமை
பல்துறை பன்முக நுண்மதி
எங்கள் மனதில் எல்லாமாய் நிறைந்தவரே.....
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவரே
விண்ணில் இறையுடன் நிறை வாழ்வு பெறுவாய்...

**என்றும் தங்கள் பிரிவால் துயருறும்**

12ம் வட்டாரம்
மாவிலித்துறை
நெடுந்தீவு

எஸ்.கோபாலசிங்கம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

மண்ணில்

26

02

1934



விண்ணில்

16

03

2013

எமது மன்றத்தின் ஆரம்பகால போசகராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

(அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி, கல்வி அதிகாரி)

அன்புள்ள ஆசானே ! நீயும் - உறவாட
இனி எமக்கு கிடைப்பாயோ?
எம்தீவின் கடல்கடந்து வரும் வேளை எம் ஆசானே
நீவிர் கடல் கடந்து உறங்கும் வேளை

பார் போற்றும் கல்வி வேந்தர் நீர்
மறுபிறவி ஒன்று உள்ளதெனில்
எம்மண்ணில் உம்சேவை
மீண்டும் தேவையப்பா

கல்விக் கடல்தனிலே
கலங்கரை விளக்கம் நீர்
உம்சுவடு தொட்டு நாம் - இன்று
தடம் பதித்துச் செல்கின்றோம்.

உமது பெயர் சொல்லும்வரை
உமது கால்த் தடம்பற்றி
எம் ஊரின் சேவைதனை
உமக்கே ஆற்றுகின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

உங்கள் பிரிவால் துயருறும் நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா (நெடுந்தீவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
26
02
1934



விண்ணில்
16
03
2013

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

(அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, கல்வி அதிகாரி,
முன்னாள் விசேட ஆணையாளர் நெடுந்தீவுப் பிரதேசசபை)

பசுந்தீவாம் நெடுந்தீவின்
பார்போற்றும் நல் ஆசானாய்
நற் கடமைகள் பல புரிந்து
மகத்தான நாமம் பெற்று
நல் இறைவன் அடி சேர்ந்தீர்.

பிரதேச சபையின் செயல் தனிலே
தனக்கென நல் மக்கள் போற்றும்
நற் சேவை செய்தீர். நற்பணி புரிந்து
நல் இறைவன் அடி சேர்ந்தீர்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மகன், மருமக்கள்,
உற்றார், உறவினர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலிகள்.

18.03.2013

தலைவர்/செயலாளர்
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்
நெடுந்தீவுப் பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்



நெடுந்தீவு அதிபர்

## அமரர் இராமநாதர் சின்னத்தம்பி

மாண்புறு கிளிநொச்சி மாநகர்
எண்பதுகளின் காலப் பகுதியில்
விழிப்புறு கல்வி புலத்தினில் காரிருள்
சூழ்ந்த வேளையில்
ஒளி வெள்ளியாக கொத்தணி
அதிபராய்
மத்தியகல்லூரி கல்வி மனங்களில்
விடிந்து
உருக்கு மிகுந்த "இரும்பு" ஏணியாய்
விருப்புடன் மாய்ந்தீர் - வையகம்
இருப்புள்ள வரைக்கும் நாம்
இரு கரைந்தனை கூப்பி போற்றி
வணங்குவோம்

**கிளிநொச்சி மாவட்ட**

**கல்விச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்

✡இராமநாதர் + ✡சிவகாமிப்பிள்ளை

✡சுவாமிநாதர் + ✡சின்னம்மா

✡தா்மரட்ணம் + இராசலட்சுமி✡

✡சிவகாமியம்மா + ✡கணபதிப்பிள்ளை

✡சுந்தரம்மா + பண்டிதா் பசுபதி✡

சிவஞானவதி + எஸ்.ஆா் பசுபதி

✡குஞ்சாச்சிப்பிள்ளை + மாரிமுத்து✡

✡நாகமுத்து

**சின்னத்தம்பி** — **புவனேஸ்வரி**

வள்ளியம்மை + முருகேசு✡

தனலட்சுமி + பேரம்பலம்✡

திருநாவுக்கரசு + கமலாதேவி

மகேந்திரன்
+
தமிழ்ப்பிரியா

✡ இவ் அடையாளம் இட்டவா்கள் அமரா்கள் ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எங்கள் குடும்பத்தலைவர் திரு.இராமநாதர் சின்னத்தம்பி (இராசி) அவர்கள் 16.03.2013 அன்று காலமானார் என்று செய்திகேட்டு உடன்வந்து தேவையான எல்லா வேலைகளையும் செய்த நண்பர்கள் உறவினர்கள் யாவருக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து உடன் சென்று அந்திய கால வேலைகளில் உதவிய திரு.கோபாலசிங்கம்,திரு.கிரிதரன் ஆகியோருக்கும் படகுச் சேவைக்குதவிய திரு கந்தையா மற்றும் பற்றுள்ள நண்பர்களுக்கும் நேரில் வந்தும் மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியோர் கண்ணீர் அஞ்சலித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், கனடா லண்டன் போன்ற மேற்கு நாடுகளில் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்தும் அனுதாபக் கூட்டம் நடாத்தித் தங்கள் அன்பை வெளிப்படுத்தியோர் யாவருக்கும் எமது பணிவான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

15.04.2013 அன்று நடைபெறும் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வு களில் கலந்து சிறப்பிப்போருக்கும், இக்கிரியைகளை செவ்வனே நிறை வேற்றும் சைவக் குருக்கள் ஐயாவுக்கும் அன்னாரின் நினைவு மலருக்குச் செய்தி தந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் இந்நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய E.S அச்சக உதவியாளர் திரு.இ.செல்வநாயகம் அவர்களுக்கும் மற்றும் தேவையறிந்து உதவிய சகல உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றிகள். யாவருக்காவது இதில் நன்றி சொல்லாதிருப்பின் அது எமது தவறு என்பதைக் கவனத்தில் கொண்டு மன்னிப்பீர்கள் என்ற எண்ணத்துடன் நிறைவு செய்கின்றோம்.

நன்றி

**– குடும்பத்தினர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌதம புத்தரும் சிந்தனைத் தெளிவும்

தீவகக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர் சின்னத்தம்பி மாஸ்ரர். தனக்குக் கிடைத்த பதவிகளில் சிறப்பாகச் செயலாற்றியவர். கொத்தணி அதிபராக அவர் மகாவித்தியாலயத்தில் பதவியேற்றிருந்த நாட்களில் கொத்தணிப் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் சிறப்புக் குலையாமல் கொத்தணிக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர்.

கிளிநொச்சியில் ஆரம்பித்து எங்கள் மகாவித்தியாலயத்தில் கடமையேற்ற போது என்னைக் கொத்தணியின் உதவி ஆசிரியராக நியமித்திருந்தார். பாடசாலைகளின் தேவைகளை அறிந்து இணைந்து பாடசாலைகளின் முன்னேற்றத்தை வலுப்படுத்தும் வேலைகளை ஊக்குவித்தலே அவரது பணி. அதற்கு உதவுதலே எனது பணி. ஆனால் அப்பணி மிகவும் கடினமானதாகவும் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள், முரண்பாடுகள் காரணமாக ஐக்கியப்படுதலும் ஐக்கியப்படுத்துதலும் பல வேளைகளில் சிரமமானதாக இருந்தது. அதனால் குழப்பமடைந்த வேளைகள் கொத்தணி அதிபரான அவருக்கும் உதவியாளராக இருந்த எனக்கும் ஏற்பட்டதுண்டு. எதற்கும் சிந்தனைத் தெளிவுடன் செயற்பட வேண்டும் என்பதற்கு அதிபர் அவர்கள் கௌதம புத்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவமொன்றை அன்றைய நாளில் எனக்குக் கூறினார். அந்த அறிவுரைக் கதை இன்றும் என் நினைவுகளில் தொலையாமல் இருக்கின்றது

கௌதம புத்தர் தமது சீடர்களுடன் ஒருமுறை ஒரு குளக்கரையோரமாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது தனது சீடர்களுள் ஒருவனை அழைத்து அயலிலிருந்த குளத்திலிருந்து குடிப்பதற்கான தண்ணீரை எடுத்து வருமாறு கூறினார். அதைக் கேட்ட சீடன் தண்ணீரை எடுத்துவரப் பாத்திரத்துடன் குளக்கரைக்குச் சென்றான். அங்கே குளத்தின் ஊடாக அக்கரையை நோக்கி மாட்டுவண்டி ஒன்று சென்று கொண்டிருந்தது. அதனால் குளத்து நீர் கலங்கிச் சேறு கலந்ததாகக் காட்சி தந்தது. அதனை அவதானித்த சீடன் இந்தச் சேற்று நீரைத் தனது குருவான கௌதம புத்தருக்குக் குடிக்கக் கொடுக்க இயலாது என்பதால் நீரைப் பாத்திரத்தில் எடுக்காமலேயே திரும்பினான்.

திரும்பிய சீடன் குருவிடம் "குருவே மாட்டுவண்டி ஒன்று குளத்தின் ஊடாகச் சென்றதால் குளத்து நீர் கலங்கிச் சேறு கலந்து காணப்படுகிறது அது குடிக்க ஏற்றதாக இல்லை" எனக் கூறினான்

நிலைமையை உணர்ந்து கொண்ட கௌதம புத்தர் அமைதியாக இருந்து சில நிமிட நேரங்கள் தாமதித்த பின்னர் திரும்பவும் சீடனை அழைத்து குளத்திலிருந்து நீர் கொண்டு வருமாறு அனுப்பினார். மீண்டும் குளத்தை நெருங்கிய சீடன் குளத்து நீர் அப்பொழுதும் தெளிவடையாமல் இருப்பதைக் கண்டான். அதனால் நீரெடுக்காது அவன் குருவினிடம் திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்த சீடனைக் குரு பலமணி நேரம் தாமதிக்கச் செய்து மீண்டும் குளத்திலிருந்து குடிநீர் எடுத்துவர அனுப்பினார். இம்முறை குளத்திற்குப் போனவன் குளத்திலிருந்து தெளிந்த நீரை எடுத்துக் கொண்டு விரைவாகவே குருவினிடம் திரும்பினான்.

அதனை அவதானித்த கௌதம புத்தர் சீடனைப் பார்த்து "உனக்கு எவ்வாறு இம்முறை தெளிந்த நீர் கிடைத்தது தெரியுமா?" எனக் கேட்டார். பதிலளிக்கத் தெரியாமல் தயங்கிய சீடனை நோக்கி "சேறு கலந்த குளத்து நீர் தெளிவடையும்வரை நீ காத்திருந்ததாலேயே அது உனக்குக் கிடைத்தது. எனவே சேற்று நீர் தெளிவடையப் பலமணி நேரம் நீ காத்திருக்க வேண்டும்" என்றார்

அத்துடன் "இவ்வாறுதான் மனக்கலக்கம் ஏற்படும் போதெல்லாம் நீ அமைதியாக இருந்தால் உனது சிந்தனையும் தெளிவடையும்" என்றார்.

இந்தக் கதையை அதிபர் எனக்குச் சொல்லியதுடன் மனக்குழப்பம் ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்தக் கதையை எனக்கு ஞாபகமூட்டவும் அவர் தவறியதில்லை.

இந்தக் கதையின் கருத்துக்கும் மேலாக அவரது செயற்பாடுகள் கௌதம புத்தர் கூறியவை போல, சிந்தனைத் தெளிவு பெற 'அமைதியாக இரு' என்பதாக அமைந்தமை என்னையும் பலவேளைகளில் அவ்வழிக்கு இட்டுச் சென்றது.

வாழ்க்கை இனிமையானது. உயிர் வாழ்தலே அதன் அங்கமாக உறுதி பெறுகிறது. உயிருடன் வாழ்வதற்காக ஒவ்வொரு மனிதரும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் உயர்வானதாகும். அதனிலும் மேலாக ஒருவன் மனிதனாக வாழ்வதற்குத் தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதலே வாழ்தலின் மகத்துவமாகும். ஆனால் வாழ்தல் மனித மனங்களைப் பல வேளைகளில் கலங்க வைக்கிறது. எண்ண்ங்கள் குழம்பும்போது துயரங்கள் சூழ்ந்து கொள்ளுகின்றன. அவற்றிலிருந்து விடுபட அமைதியும் தெளிவான சிந்தனையும் அவசியமாகும்.

இதனை விளக்கவும் மனதிற் பதிக்கவும் கௌதம புத்தரின் கதையுடன் பலவற்றையும் எனக்குச் சொல்லி என்னைச் செயற்பட வைத்தவர் - செயற்பட்டவர் சின்னத்தம்பி மாஸ்ரர் என அன்புடன் அழைக்கப்படும் அதிபர் அவர்களே. அவர் இன்று பதவியிலிருந்து இளைப்பாறியிருக்கிறார். எனினும் அவரைப் போன்று நல்வழி காட்டி நடப்பவர்கள் பதவிகளில் இருப்பார்கள் - இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படும் சமூக மேம்பாடு நோக்கிய தெளிவாகும்.

சுடர் ஒளி வாரமலர் 2011 நவம்பர் 6 - நவம்பர் 12 **இதழில்** வெளிவந்த

**தொலையா நினைவு** எனும் பத்தியிலிருந்து பெறப்பட்டது

எழுதியவர் - நெடுந்தீவு மகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ஓர் அறிவு விருட்சம்

சிறு செடிகள் கொடிகள் நடுவே
நீ ஓர் அறிவு விருட்சம்.
வேர் விட்டாய், விழுது விட்டாய்.
பூ பூத்து காய் காய்த்து ...
பழம் தந்தாய் - பின்னைய நாட்களில்
பெரும் காடானாய்.

கிளைகளில் வந்து கூடு கட்டவும்
நிழலின் கீழ் இருந்து
பாடம் படிக்கவும் - நீ
எமக்கோர் துணையானாய்.

பட்டை உடைந்த கொப்புகள் நடுவிலும்
காய்ந்த கொழுந்துகளின் இடைகளிலும்
நீ பச்சையாய் இருந்தாய்.
உன்னில் ஏறி தாவி விளையாடியும்
ஊஞ்சல் கட்டி ஆடியும் கொண்டாடினோம்.

விறகுகளுக்காக வெட்டப்பட்ட மரங்களுக்காகவும்
பசளை கிடைக்கப் பெறாத
வேர்களுக்காகவும் ...
சுள்ளியாய் முறித்து நடப்பட்ட
தடிகளுக்காகவும்...
குரல் கொடுத்தாய்.

எம் வளர்ச்சிக்காகவே - உன்னிடம்
இருந்த இலைகளையும்
சருகுகளாக உதிர்த்தாய்.

இப்போது எம்மிடையே - நீ
ஓர் அழகான அறிவு
வனத்தை உருவாக்கிவிட்டு
எங்கோ காணாமல் போனாய்.

நீ விட்டுப்போன வேர்களிலும் - உன்
பணிகளின் வாசனை
பூக்களாய் வீசுகின்றன.

நெடுந்தீவு - முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள ஆசிரியரே,**

"அனைத்து மனிதர்களும் நியாயமானவர்கள் அல்லர் என்பதையும் அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர் என்பதையும் எனது மகன் தெரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் மோசமான மனிதர்களுக்கிடையேயும் வீரர்களும் சுயநலமான அரசியல் வாதிகளுக்குள்ளும் சேவை மீது அர்ப்பணிப்புள்ள பொதுநலன் பேணும் தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். நியாயமாக உழைத்த ஒரு டொலர் அநியாயமாகப் பெறும் ஆயிரம் டொலர்களை விட பெறுமதி வாய்ந்ததெனவும் முடிந்தால் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். இழப்புக்களையும், நிந்தனைகளையும் பொறுத்துக் கொள்ளவும் புகழைக் கர்வமின்றி அனுபவிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

உங்களுக்கு முடியுமானால் புத்தகங்களின் வியத்தகு தன்மையை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். ஆகாயத்தில் பறக்கும் பறவைகள், சூரிய ஒளியில் ரீங்காரமிடும் தேனீக்கள், பசுமையான மலைச் சாரல்களில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஆகியவற்றின் இயற்கை அழகினை நுகர்வதற்கு அவனுக்கு அவகாசம் வழங்குங்கள். எல்லோரும் பிழை என்று கூறினாலும் கூட தனது கருத்தில் நம்பிக்கையுடன் இருப்பதற்கு அவனுக்குத் தைரியமூட்டுங்கள். மிருது வானவர்களுடன் மிருதுவாக நடந்து கொள்ளவும் கடுமையானவர்களுடன் மிகக் கடுமையாக நடந்து கொள்ளவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். எல்லோரும் ஓடும் திசையில் தானும் ஓடி பிரபல்யத்தைப் பெற்றுக் கொள்வதை விடுத்து கண்மூடித்தனமாகப் பின்தொடராது இருப்பதற்கான பலத்தை எனது மகனுக்கு வழங்குங்கள். சகல மனிதர்களுக்கும் செவிசாய்ப்பதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். ஆனால் செவிமடுக்கும் விடயங்களை உண்மை என்ற சல்லடையில் சலித்தெடுத்துக் கொள்வதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணில் கண்ணீருக்கு மத்தியில் ஒரு புன்னகையை வரவழைப்பதில் கவனமாக இருக்க அவனை அறிவுறுத்துங்கள். தனது உடல் பலத்தையும் நுண்ணறிவையும் அவற்றின் பெறுமதியைக் கணித்து கொடுக்கவும். ஆனால் தனது இதயத்தை ஒருவருக்கும் ஒருபோதும் விலைபேசாதிருக்கவும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

கூக்குரலிட்டு அமைதியைக் குலைக்கும் பிரிவினர்களுக்கு மத்தியில் காதுகளைப் பொத்திக் கொள்ளவும், தான் சரியென நினைக்கும் விடயத்தில் துணிச்சலாகப் போராடவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். ஏனெனில் சிறந்த உருக்கு சிறந்த நெருப்புச் சுவாலையிலிருந்து தான் உருவாகின்றது. வீரம் என்பது அவனுக்குப் பொறுமையாக கிடைக்க வேண்டியது என்பதைச் சொல்லிக் கொடுங்கள். தன்னைப் பற்றி உயர்வான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள அவனுக்குக் கற்பியுங்கள். ஏனெனில் அப்போதுதான் மனிதர்கள் மீது அவனால் மேலான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். எனது மகன் சுறுசுறுப்பான ஒரு சிறு பையன். அவனுக்காக உங்களால் செய்ய முடியுமானதைச் செய்யுங்கள்.

ஏபிரகாம் லிங்கன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org